
AR
44

# சேலம் மாவட்டத் தொல்லியல் கையேடு



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

# சேலம் மாவட்டத் தொல்லியல் கையேடு

பதிப்பாசிரியர்
**முனைவர் சீ. வசந்தி** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.
ஆணையர் (பொ)

உதவி பதிப்பாசிரியர்
**பெ.கௌதமபுத்திரன்**

வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2012 - திருவள்ளுவர் ஆண்டு 2043

## BIBLIOGRAPHICAL



| | | |
|---|---|---|
| TITLE | : | **Selam Mavatta Tholliyal Kaiyedu** |
| Editor | : | **Dr. S. VASANTHI** M.A., M.Phil., Ph.D. |
| Copyright | : | Tamilnadu State Dept. of Archaeology |
| Subject | : | HISTORY |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 245 |
| Year | : | 2012 |
| No. of Copies | : | 500 |
| Type Point | : | 11 |
| No. of Pages | : | 108 |
| Paper Used | : | 80 Gsm Maplitho |
| Printer | : | **Dept. of Archaeology Press** Tamil Valarchi Valaagam, Halls Road, Egmore, Chennai - 600 008. |
| Publisher | : | **State Dept. of Archaeology,** Tamil Valarchi Valaagam, Halls Road, Egmore, Chennai - 600 008. |
| Price | : | Rs. 22.00 |

# உள்ளடக்கம்


| வ.எண். | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | |
| | முன்னுரை | |
| 1. | சேலம் மாவட்ட புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு | 1 |
| 2. | தொல்பழங்காலம் | 4 |
| 3. | சேலம் மாவட்டத்தில் தாவளங்கள் | 8 |
| 4. | அரசியல் அமைப்பு | 11 |
| 5. | இடைக்கால அரசியல் பின்னணி | 14 |
| 6. | மைசூர் அரசர்கள் ஹைதர்அலி, திப்புசுல்தான் காலத்தில் சேலம் | 21 |
| 7. | சேலம் மாவட்டத்தில் ஆங்கிலேயர்கள் ஆட்சித் தொடக்கம் | 23 |
| 8. | நாட்டுப் பிரிவுகள் | 25 |
| 9. | சேலம் மாவட்டத்தில் குறுநில மன்னர்கள் | 27 |
| 10. | சமயங்கள் | 33 |
| 11. | வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் | 37 |
| 12. | கல்வெட்டுச் செய்திகளும் இருப்பிடமும் | 55 |
| 13. | பிற்சேர்க்கை (புதிய கற்காலக் கருவிகள்) | 66 |
| 14. | சேலம் பெயர்க்காரணம் | 67 |
| 15. | சேலத்து கோட்டைகளும், கோட்டை மேடுகளும் | 69 |
| 16. | சேலம் மாவட்டத்து நடுகற்கள் | 72 |
| 17. | சேலம் மாவட்டத்தில் நாணயங்கள் | 74 |
| 18. | சேலம் மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்கள் | 75 |
| 19. | சேலம் மாவட்டத்தில் ஜைனமத, புத்தமதத் திருத்தலங்கள் | 77 |
| 20. | சேலம் மாவட்டத்தில் காலம் வாரியாக நடந்த நிகழ்வுகள் | 80 |
| 21. | நிழற்படங்கள் | 88 |

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்பில்., பிஎச்டி.
ஆணையர் பொறுப்பு

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை
சென்னை - 600 008

# பதிப்புரை

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஊர்களிலும் உள்ள தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சான்றுகளாக கல்வெட்டுகள், நாணயங்கள், ஈமச்சின்னங்கள், ஓலைச்சுவடிகள், புதைமேடுகள், கோட்டைகள், கொத்தளங்கள், கோயில்கள், மண்டபங்கள், பாலங்கள், மசூதிகள், தேவாலயங்கள் ஆகியவை உள்ளன. இந்த தொல்லியல் சான்றுகளை ஆய்வு செய்து பாதுகாக்கும் நோக்கத்திலும், இந்த சான்றுகளை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையிலும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மக்களிடையே தொல்லியல் சின்னங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்டங்கள்தோறும் மாவட்ட தொல்லியல் கையேடுகளை தயாரித்து வெளியிட்டு வருகின்றது. இப்பணியில் சேலம் மாவட்ட தொல்லியல் கையேடு தற்போது நூலாக வெளியிடப்படுகிறது.

பண்டைய நாட்டுப் பிரிவுகளில் ஒன்றான கொங்கு நாட்டில் வடகிழக்குப் பகுதியில் சேலம் மாவட்டம் அமைந்துள்ளது. சேலம் மாவட்டம் மிகத்தொன்மையான, வளமான தொல்லியல் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் கற்காலம் தொடங்கி பெருங்கற்காலம், வரலாற்றுக்காலம் வரையில்



உள்ள தொல்லியல் சான்றுகளான பழைய கற்கால கருவிகள், பெருங்கற்காலச் சின்னங்கள், எழுத்து மற்றும் குறியீடு பொறித்த பானை ஓடுகள், உரோமானியர்களின் நாணயங்கள், அணி கலன்கள், வரலாற்றுக்கால காசுகள், சூதுபவள மணிகள், சுடுமண் பொம்மைகள், நடுகற்கள், பெருவழியை குறிக்கின்ற கல்வெட்டு, வரலாற்று செய்திகளை குறிக்கின்ற கல்வெட்டுகள், செப்புத் திருமேனிகள், இன்னும் தொல்லியல் சான்றுகள் ஏராளமாக இம்மாவட்டத்தில் கிடைத்துள்ளன. இம்மாவட்டத்தில் சங்க காலம் முதல், சங்ககால சேரர்கள், இராட்டிரகூடர்கள், கங்கர், ஹொய்சாளர்கள், சோழர்கள், கொங்கு சோழர்கள், பாண்டியர்கள், கொங்கு பாண்டியர்கள், விசயநகரப் பேரரசர்கள், நாயக்க அரசர்கள், முஸ்லீம் மன்னர்களான மாலிக்காபூர், ஹைதர்அலி, திப்புசுல்தான், கட்டி முதலிகள், ஆங்கிலேயர்கள் போன்றவர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். இக்கையேட்டில் சேலம் மாவட்டத்தின், புவியியல், தொல்பழங்காலம், யவனர் வணிகம் - பெருவழி வணிகம், அரசியல் பின்னணி, நாட்டுப் பிரிவுகள், நீர்ப்பாசன வசதிகள், சமயங்கள் குறித்த செய்திகளை ஆய்வு செய்து தொகுத்துக் கூறப்பட்டுள்ளன, தொன்மை முக்கியத்துவம் வாய்ந்த ஊர்கள், வட்டங்கள் ஆகியவையும் பட்டியலிடப்பட்டு தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

இத்தொல்லியல் கையேட்டினை உருவாக்கிய திரு. பெ. கௌதமபுத்திரன் துணைக்கண்காணிப்பாளர், பூம்புகார் அவர்களின் பணி பாராட்டுக்குரியதாகும். இந்நூலினை D.T.P. செய்து அட்டைப்படம் வடிவமைத்த இத்துறை அச்சுக்கோர்ப்பாளர் திருமதி தே. சத்தியவதி மற்றும் அச்சுப்பிழைத்திருத்துபவர் திருமதி கோ. கீதா அவர்களுக்கும் எனது பாராட்டுகள். இக்கையேடு தொல்லியல் ஆய்வாளர்களுக்கும், வரலாற்று ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பெரிதும் பயன்படும். இத்துறையின் வெளியீடுகளுக்காக நிதியுதவி நல்கி, பணிகளை ஊக்குவித்து வரும் தமிழ்நாடு அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

சீ. வசந்தி

# முன்னுரை

தமிழக வரலாற்றை செழுமைப்படுத்தி எழுதும் பணியில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தொடர்ந்து முழுவீச்சுடன் செயல்பட்டு வருகின்றது. இப்பணிகளில் ஒன்றாக மாவட்டந் தோறும் ஆய்வு செய்து, தொல்லியல் சான்றுகளை மையமாக வைத்து மாவட்டத் தொல்லியல் கையேடு தயாரித்து வெளியிட்டு வருகின்றது. சேலம் மாவட்டக் கல்வெட்டுகளை படியெடுக்கும் பணி மேற்கொண்டபோது இம்மாவட்டத்தில் வட்டங்கள், ஊர்கள், மற்றும் பகுதி வாரியாக களஆய்வு செய்த பொழுது சேலம் மாவட்டத்தில் ஒவ்வொரு ஊரிலும் பெருங்கற்காலச் சின்னங்கள் உள்ள இடங்கள், இப்பகுதியை ஆட்சி செய்த மன்னர்கள், இவர்கள் காலத்து கல்வெட்டுகள், இப்பகுதியில் கிடைக்கப்பெற்ற பண்டைய நாணயங்கள், நீர்ப்பாசனம், ஏரிகள், நீர்ப்பாசனம் தொடர்புடைய கல்வெட்டுகள், கோட்டைகள், கோட்டை மேடுகள், கொத்தளங்கள், குறுநில மன்னர்கள், கட்டி முதலிகள், காங்கேயர்கள் போன்றவர்கள் இம்மாவட்டத்தில் செய்த திருப்பணிகள், மைசூர் மன்னர்கள், ஹைதர்அலி, திப்புசுல்தான் காலத்தில் மைசூர் போரின் போது சேலத்தின் சமூக பொருளாதார நிலை, ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் சேலம் மாவட்டத்தில் சமூக மாற்றங்கள், பொருளாதார நிலைகள் பற்றிய தரவுகள், சான்றுகள் சேகரிக்கப்பட்டது. இச்சான்றுகளைக் கொண்டு சேலம் மாவட்டத் தொல்லியல் கையேடு தயாரிக்கும் பணி செய்யப்பட்டது.

மேலும் இந்நூலில் சேலம் மாவட்ட புவியியல் அமைப்பு, அரசியல் நாட்டுப் பிரிவுகள், பண்டைய வணிகம், கல்வெட்டுகள், நாட்டுப் பிரிவுகள், நீர்ப்பாசன முறை, சமயங்கள், முக்கியத்துவம் வாய்ந்த ஊர்கள், பிற்சேர்க்கை பகுதி, சேலம் மாவட்டத்தின் முக்கிய நிகழ்வுகள் என்ற தலைப்புகளில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

மேலும் நான் கோயம்புத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேடு, ஈரோடு மாவட்டத் தொல்லியல் கையேடு தயாரித்த அனுபவத்தின் அடிப்படையில் இந்நூல் தயாரிக்கப்பட்டது.



இந்நூலினைப் பதிப்பிக்க துணைநின்ற பல அறிய செய்திகளைக் கொடுத்து உதவிய ஆணையர் பொறுப்பு முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும், இந்நூலினை உருவாக்க கணினி தட்டச்சு செய்த திரு. சி. மருதாசலம், தட்டச்சர், கோவை அவர்களுக்கும் மேலும் இந்நூலின் அச்சுப்பணியினை மேற்கொண்ட அச்சுப் பிரிவினருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெ. கௌதமபுத்திரன்

# சேலம் மாவட்டம் புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு

சேலம் மாவட்டம் குறிஞ்சி, முல்லை, மருதம் நிலங்கள் அடங்கிய மாவட்டம் ஆகும். இம்மாவட்டத்தின் வடக்கு எல்லையாக சேர்வராயன்மலை அமைந்துள்ளது. இம்மலைகளில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி மலர்கள் கிடைக்கிறது. மேலும் இம்மலையில் விளையும் தேக்கு, சந்தனம் போன்ற மரவகைகள் சங்ககாலம் தொட்டு நமக்கு வெளிநாட்டு தொடர்பை ஏற்படுத்தித் தந்துள்ளது. இந்த மலைப்பகுதியில் கிடைக்கின்ற பெருங்கற்கால சின்னங்கள், கல்வட்டங்கள் மற்றும் இதன் உட்பகுதியில் தாழிகள், கருப்பு சிவப்பு பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. இந்த சேர்வராயன் மலை, கொல்லி மலை, பச்சை மலை, அறுநூற்று மலை, ஆலவாய் மலைப் பகுதிகளில் மிளகு, மூங்கில், சந்தன மரங்களும் விளைந்து பெருமளவில் வாணிபத்தை வளர்த்துள்ளது. இந்த மலையில் மக்கள் கொங்கு சமவெளி மக்களுடன் உள்ள சமூகப் பொருளாதாரத் தொடர்பும் வைத்திருந்தனர் என்பது தெளிவு.

மேலும் சேலம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பெருங்கற்கால சின்னங்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக தொப்பூர், கெங்கவல்லி வட்டம், திட்டச்சேரி, செந்தாரப்பட்டி, மொடக்குவார்பட்டி, ஆணையாம்பட்டி, பச்சைமலை அடிவாரம் போன்ற பகுதிகளில் கிடைத்துள்ள பெருங்கற்கால சின்னங்களில் இரும்புப் பொருட்களும், விலையுயர்ந்த கல்மணிகளும் கிடைத்துள்ளது. ஒரு சில இடங்களில் மாடுகளின் உருவம் கொண்ட சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளன.

சேலம் மாவட்டத்தில் உள்ள மலைகளில் மற்றும் சமவெளிகளில் உள்ள மக்கள் மாடுகளை வளர்த்துள்ளனர். இந்த மலைகளிலேயே பட்டி போட்டு மாடுகளை தங்கவைத்துள்ளனர்.



அந்த பட்டிகளில் அடைக்கப்பட்டுள்ள மாடுகளை பாதுகாக்கும் பொறுப்பு மலையில் வாழும் புலையர்கள் என்ற பழங்குடியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த புலையர்கள் மாட்டுடன் இரவில் தங்கியிருக்கும் இடத்திற்கு "பட்டி" என்றும், மாடுகள் தண்ணீர் அருந்தும் இடத்திற்கு "மடை" என்றும் பெயரிட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் உள்ள மலைகளில் ஆயிரத்திற்கும் அதிகமான "பட்டிகளும்", தண்ணீர் "மடைகளும்" நிறைந்து காணப்படுகின்றது.

மாவட்டத்தின் வடக்குப்புறம் சேர்வராயன் மலை, கல்வராயன் மலை, மத்தியப் பகுதியில் பச்சை மலை, ஆலவாய் மலை போன்ற மலைகளில் சிறுசிறு ஓடைகள் உற்பத்தியாகி மலையடிவாரத்தில் உள்ள சமவெளிகளில் ஓடைகளாகவும், ஆறுகளாகவும் நீர் நிரம்பி ஓடியுள்ளது. இதனால் இப்பகுதி முழுவதும் குளிர்ந்த தட்ப வெப்ப நிலையும், கால்நடை தீவனமாகிய புல் நன்கு வளர்ந்துள்ளது. இதனால் கால்நடை வளர்ப்பு மேலோங்கியிருந்துள்ளது. சேலம் மாவட்டம் முல்லை நிலப்பகுதியாகும். சங்க இலக்கியங்களில் முல்லை நிலத்தின் உணவுகளாக கொள்ளு, வரகு, அவரை, துவரை ஆகிய தானியங்கள் குறிப்பிடப்படுகிறது. இந்த தானியங்கள் அனைத்தும் இம்மாவட்டத்தில் சங்ககாலம் தொட்டு மிகுதியாக விளைவிக்கப்பட்டு சமூகப் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இம்மாவட்டத்தில் கனிம வளங்கள் நிறைந்து காணப்படுகின்றது. இம்மாவட்டத்தில் இரும்புத்தாது, மாக்னசைட், உயர்வகை ஆபரண கல்மணிகளும் மிகுதியாக காணப்படுகின்றது. பண்டைய காலத்தில் இம்மாவட்டத்து ஆறுகளிலும், மலைகளிலும் கிடைக்கும். இரும்புத் தாதுக்களை உருக்கி பிரித்தெடுத்து இரும்பு கருவிகளை செய்து உரோமானியர்களுக்கு விலைக்கு விற்று வந்துள்ளனர். மேலும் இரும்பு உருக்கும் தொழில் பெருங்கற்காலத்திலிருந்து நடை முறையில் இருந்து வந்துள்ளது. பெருங்கற்காலச் சின்னங்களும், இரும்பு உருக்கும் தொழிலும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவை.

சேலம் மாவட்டத்து ஆறுகள் காட்டாறுகளாகும். அவற்றில் அடிக்கடி நீர் பெருக்கெடுத்து பெரிய அளவில் ஓடி கிழக்கு கடற்கரையில் கலக்கின்றது. உற்பத்தியாகும் ஆற்று நீரைத் தேக்கி

1000 ஆண்டுகளாக வேளாண்மைப் பாசனத்திற்கு பயன்படுத்தி வந்துள்ளனர். சோழர், விசயநகரர் மற்றும் கட்டி முதலிகள் ஆட்சிக் காலத்திலும் பல ஏரி, குளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் சேலம் மாவட்டத்தில் அணைகள் கட்டப்பட்டுள்ளன. எனவே பண்டைய காலம் முதல் கால்நடை வளர்ப்பு, விவசாயம் நல்ல முறையில் செய்வதற்கான புவியியல் அமைப்பு, தட்பவெப்பநிலை இருந்துள்ளது. ●



# தொல்பழங்காலம்

பண்டைய தமிழகத்தில் பல்வேறுபட்ட கருத்துக்களையும், வாழ்க்கை முறைகளையும் கொண்ட தொல்பழங்குடிகள் இருந்துள்ளனர். இவற்றிற்கு சான்றுகளாக தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கிடைக்கப்பெற்ற பெருங்கற்கால சின்னங்களிலிருந்து கிடைக்கும் பொருட்களிலிருந்து அறியலாம். தென்னிந்தியா முழுவதும் பெருங்கற்கால சின்னங்களின் இருப்பிடங்கள் உள்ளன. தமிழகத்தின் பெருங்கற்கால சின்னங்களின் காலம் கி.மு.300 என்று தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். மக்கள் பெருங்கற்காலச் சின்னங்களின் பண்பாட்டு முறையில் இரும்பின் பயன்பாட்டினை நன்கறிந்திருந்தனர். மேலும் ஈமச்சின்னங்களில் கிடைக்கும் தொல்பொருள்களில் இரும்பு 75% அதிகமாக வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இரும்புக் காலம் பெருங் கற்காலப் பண்பாட்டிலிருந்து தொடங்குவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த இரும்பு பயன்பாட்டில் அதிகமாக விவசாய கருவிகள், போர்க்கருவிகளுக்கும் பயன்படுத்தியுள்ளனர். மேலும் ஈமச்சின்னங்களில் மாடு, எருமை, குதிரை, சேவல், நாய் போன்ற விலங்குகளின் எலும்புக் கூடுகளும் இருந்துள்ளது. சேலம் மாவட்டத்தில் பெருங்கற்காலச் சின்னங்களான கல்லரன், கல்பதுக்கை, குத்துக்கல், தாழி ஆகிய ஈமச்சின்னங்கள் மிகுதியாக காணப்படுகின்றது.

பெருங்கற்கால மக்கள் உணவு உற்பத்தி செய்யும் விவசாயத் தொழிலை அறிந்துகொண்டிருந்தனர். குறிப்பாக புஞ்சை வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தல் ஆகிய தொழில்களை செய்து வந்துள்ளனர். ஆரம்பகாலத்தில் பெருங் கற்காலப் பண்பாட்டினர் இரும்பை உருக்கி கருவிகளை செய்து பிற குடியினருக்கும் பண்டமாற்று முறையில் இரும்புக் கருவிகளை விற்றுள்ளனர். இந்த கனிமவளங்களை பயன்படுத்த இரும்பு கருவிகளை உற்பத்தி செய்தவர்களும் விவசாயத் தொழில்,

தானியங்கள் உற்பத்தி செய்தவர்களும் சமூகத்தில் பொருளாதார மாற்றங்களை உருவாக்கி மற்றவரைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக இருந்துள்ளனர். இந்த பொருளாதார வளர்ச்சி, சமூக எழுச்சியினால் சமூக மாற்றங்கள் ஏற்பட காரணமானது. இன்று வரை பழங்குடியினர் ஒரு குறிப்பிட்ட நிலையிலிருந்து பொருள்களை உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், பண்டமாற்று முறையில் வியாபாரம் செய்தல் ஆகிய முறைகளைப் பின்பற்றி வந்துள்ளனர். இந்நிலையில் வணிக நகரங்களும், அரசு ஆட்சி முறை சமூகத்தில் ஏற்படுத்தியது. இந்நாளில் உரோமானியர் அரசின் கிழக்கெல்லையிலிருந்த தட்சசீலத்திற்கு பொருட்களை விற்பது, மற்றும் வாங்குவது போன்ற வெளிநாட்டு வாணிக தொடர்பும் ஏற்பட்டது.

பெருங்கற்கால பண்பாட்டு காலத்தில், நிலையான ஓர் இடத்தில் வாழ்க்கை தோன்றுதல், கனிம வளங்களை பயன் படுத்துதல் மற்றும் இரும்பு கருவிகளையும் உற்பத்தி செய்துள்ளனர். மேலும் மலைகளில் உற்பத்தியாகும் ஓடைகள், ஆறுகளில் வரும் நீரை, குடிநீர் பயன்பாட்டிற்க்கும், கால்நடை வளர்ப்பு பயன்பாட்டிற்கும் பயன்படுத்தியுள்ளனர். நாளடைவில் ஓடிவரும் நீர் ஆதாரங்களை தேக்கி குளம் அமைத்து நீர்ப்பாசனம், மற்றும் மீன் பிடித் தொழிலும் செய்து வந்துள்ளனர்.

தொடர்ந்து மனித முயற்சியினால் சேலம் மாவட்டத்தில் இரும்புத் தாதும் கனிம வளங்களும் மேலோங்கி காணப்பட்டது. இம்மாவட்டத்தில் காணப்படும் பெருங்கற்காலச் சின்னங்களின் அருகிலேயே கனிம வளப் பகுதிகள் நிறைந்து காணப்படுகின்றன. மேலும் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் தென்னிந்தியா வழியாக செல்லும் தட்சிணபதம் என்ற பெருவழி செல்லும் பகுதிகளில் கனிம சுரங்கங்கள் இருந்ததாகவும், இந்த கனிம சுரங்கங்களில் இரும்பு தாதுக்கள், மாக்னசைட், பொன், பச்சைக்கல், பளிங்குக்கல், பூனைக்கல், சந்திரகாந்தக்கல், அகேட், ஜேஸ்பர் போன்ற கனிமங்கள் வெட்டியெடுக்கப்பட்டன என்றும், இத்தொழில்கள் இந்த வட்டார மக்களிடையே பொருளாதார வளர்ச்சியும், சமூக மாற்றங்களையும், குடும்பத்தலைவர், குடிகளின் தலைவர், குடித்தலைவரின் ஆட்சி முறையும் உருவாக காரணமாக அமைந்துள்ளது. மேலும் இலக்கியங்களில் ஆயர்கள் கல்மணி தொடர்பான தொழில்களையும், வேட்டுவர்கள் மலைப்பகுதி



பொருட்களான சந்தன மரம், தேக்கு மரம், மயில் தோகை, காட்டுத் தேன், தினை தானியங்களையும் உற்பத்தி செய்து கையாண்டுள்ளனர் என்பதை குறிக்கின்றன.

**பெருங்கற்கால பானை ஓடுகளில் குறியீடுகள்**

சேலம் மாவட்டத்தில் பெருங்கற்காலச் சின்னங்கள் கல்வராயன்மலை, சின்னமாங்கோடு, வாழப்பாடி வட்டம் புழுதிக்குட்டை, கெங்கவல்லி வட்டம் மொடக்குவார்பட்டி (செந்தாரப்பட்டி), ஆணையாம்பட்டி, பச்சைமலை அடிவாரப் பகுதி மற்றும் அழகாபுரம், கல்லாநத்தம், தளவாய்பட்டி, மஞ்சினி போன்ற ஊர்களில் பெருங்கற்காலச் சின்னங்களான கல்வட்டங்கள் உள்ளன. இந்த பெருங்கற்கால சின்னங்களில் உட்பகுதியில் கிடைக்கப் பெற்ற ஓடுகள் கருப்பு சிவப்பு (Black and Red ware) பானை ஓடுகளில் குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இது போன்ற குறியீடுகள் உள்ள பானை ஓடுகள் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் கிடைத்துள்ளன. இந்த ஈமச்சின்னங்களில் உள்ள ஓடுகளில் வரையப்பட்டுள்ள குறியீடுகள் குறிப்பிட்ட குலத்தினை சார்ந்தவையாக இருக்கலாம் அல்லது ஒரு குடியினர் குறியாகவும் இருக்கலாம் என்று தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

**பண்டைய மகத பெருவழியும், யவன வணிகமும்**

சேலம் மாவட்டம் தொப்பூர் கணவாய் வழியாகவும், கோவை மாவட்டம் பாலக்காட்டு கணவாய் வழியாகவும் பண்டைய பெருவழிகள் இயங்கி வந்துள்ளன. பண்டைய நாளில் யவன வணிகர்கள் குமரிமுனையை சுற்றி வந்து பின் கிழக்கு கடற்கரையினை அடைவதற்கு பதிலாக விரைவில் அடைவதற்காக, பாலக்காட்டு கணவாயினையும், தொப்பூர் கணவாயினையும் தேர்ந்தெடுத்தனர். மேலும் கொங்கு நாட்டின் ஒரு பகுதியாகிய சேலம் கனிமவளம் மிக்க பகுதியாகவும் இங்கு உற்பத்தி செய்யப்பெற்ற இரும்பு கருவிகளையும், அழகு கல்மணிகளையும் வாங்குவதற்காக யவனர்கள் கொங்கு பகுதிக்கு வந்துள்ளனர். இங்கு வாங்கிய பொருட்களாகிய வாசனை திரவியங்கள், சந்தன மரப்பொருட்கள், மயில் தோகைகள் மற்றும் கனிம பொருள்களை வாங்கிக் கொண்டு இதற்கு ஈடாக பொற்காசுகளையும், வெள்ளிக்காசுகளையும் ரொக்கமாக

கொடுத்துவிட்டு சென்றுள்ளனர். இந்தியா முழுவதும் கிடைக்கின்ற உரோமானியர் காசுகளில் 70% கொங்கு சேலம் பகுதிகளில் கிடைத்துள்ளது. பாலக்காட்டு கணவாயிலிருந்து பிரிந்து சென்ற பெருவழிகள் பல பிரிவுகளாக பல பெயர்களில் கிழக்கு கடற்கரையையும், குமரிமுனையையும் அடைந்துள்ளது. இந்த பெருவழிகள் கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து வழக்கத்திலிருந்திருக்க வேண்டும் என்பது கௌடில்யரின் அர்த்தசாஸ்த்திரம் மற்றும் தட்சசீலம் அகழாய்வும் உறுதிப்படுத்துகின்றது.

சேலம் மாவட்டத்தில் கோணேரிப்பட்டி, செக்கடிப்பட்டி, எடப்பாடி மற்றும் சேலம் போன்ற ஊர்களில் சங்ககால காசுகள், இடைக்கால சேரர் காசுகள், இராசராச சோழன் காசுகள், போசாளர்கள் காசுகள், விஜயநகரக் காசுகள், மைசூர் உடையார் காசுகள், மதுரை நாயக்கர் காசுகள், ஹைதர்அலி, திப்புசுல்தான் காசுகள் மற்றும் பல்வேறு அரச மரபினர் காசுகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

# சேலம் மாவட்டத்தில் தாவளங்கள்

பண்டைய பெருவழிகளில் வணிகர்கள் தங்குவதற்கும், தங்கி செல்வதற்கும் தாவளங்கள் இருந்துள்ளது மற்றும் வணிகர்கள் தங்கி வணிகம் புரியும் இடம் தாவளங்கள் என்று அழைக்கப்பட்டுள்ளது. கொங்கு நாட்டு பாலக்காட்டு கணவாயி லிருந்து மூன்று பண்டைய பெருவழிகள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்றுள்ளது. அவற்றில் ஒன்று மேற்கு கடற்கரை, பாலக்காட்டு கணவாய், பேரூர், கோவை, அவிநாசி, சேலம், அயோத்தியாபட்டணம், ஏத்தாப்பூர், ஆறகளூர், கள்ளக்குறிச்சி. விழுப்புரம், திண்டிவனம் (எய்மா நாட்டு இடங்களில்) வழியாக காஞ்சிபுரம், கிழக்குக் கடற்கரை மாமல்லபுரத்தை அடைந்துள்ளது. இந்த பெருவழிக்கு மகதேசன் பெருவழி என்றும் அழைத்துள்ளனர். இந்த பெருவழியில் உள்ள எடப்பாடி, சேலம், செக்கடிபட்டி, கோனேரிப்பட்டி போன்ற ஊர்களில் உரோமானியர் களின் வெள்ளிக் காசுகளும் மற்றும் உள்ளூர் அரச வம்சத்தினரின் தங்கக் காசுகளும் பூமிக்கடியிலிருந்து ஏராளமாக கிடைத்துள்ளது.

மேலும் கொங்கு நாட்டிலிருந்து கிழக்குக் கடற்கரையை நோக்கிச் சென்ற இரண்டாவது பெருவழி இராசகேசரி பெருவழி ஆகும். இந்த இராசகேசரி பெருவழியானது பாலக்காட்டு கணவாய், பேரூர், வெள்ளலூர், சூலூர், பல்லடம், காங்கேயம், கரூர், உறையூர் வழியாக கிழக்குக் கடற்கரை காவிரிப்பூம்பட்டினத்தை சென்றடைந்துள்ளது.

மற்றொரு மூன்றாவது பெருவழி பாலக்காட்டு கணவாய், ஆனைமலை, வடபூதிநத்தம், கலையமுத்தூர், பழனி, திண்டுக்கல், மதுரை, திருத்தலங்கள் வழியாக அழகன்குளம், இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளது.

மேலும் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் பல பெருவழிகள் இருந்துள்ளதை குறிப்பு கூறுகின்றது. இக்கல்வெட்டுகளில்

இராசகேசரிப் பெருவழி, வீரநாரயணப் பெருவழி, சோழமாதேவி பெருவழி, கொழுமம் பெருவழி, கொங்கு குலபெருவழி என பல பெருவழிகள் பற்றிய செய்திகள் உள்ளது. மேலும் "பர்டன் ஸ்டீன்" அவர்கள் குறிப்பில் கொங்கு நாட்டில் பல பாண்டிய பெருவழிகள் இருந்துள்ளதை குறிப்பிட்டிருக்கிறார்.

**மகதேசன் பெருவழி மைல்கள்**

மகதை மண்டலத்து தலைநகரான ஆறகளூர் திருகாமஸ்வரர் கோயில் அருகில் உள்ள பலகை குத்துக்கல்லில் இவ்விடத்திலிருந்து பதினேழு காதம் தொலைவில் காஞ்சிபுரம் என்ற பொருள் கூறும் வட்டெழுத்திலும் மற்றும் படிக்க இயலாதவர் களுக்கு புரிந்து கொள்ளும் வகையில் அதே குத்துக்கல்லில் கல்வெட்டிற்கும் கீழ் 17 புள்ளிகள் செதுக்கப்பட்டுள்ளது. அதாவது 17 புள்ளிகள் காஞ்சிபுரம் 17 காதம் தூரத்தில் உள்ளது என்பதை உணர்த்துகின்றது.

**பெருவழியில் உள்ள தாவளங்களின் ஊர்கள்**

**1. வேம்படிதாவளம்**

சேலம் மாவட்டத்தில் மகதேச பெருவழியில் ஏராளமான வியாபாரிகள் தங்குமிடமான தாவளங்கள் இருந்துள்ளது. அவற்றில் இன்றும் பெயர் மாறாமல் வேம்படிதாவளம் என்ற ஊர் கோவை, சேலம் நெடுஞ்சாலையில் சங்ககிரியின் கிழக்கே காக்காபாளையம் அருகில் வேம்படிதாவளம் உள்ளது. பண்டைய நாளில் தங்கி வியாபாரம் செய்யும் வசதிக்காக வேப்ப மரங்கள் நிறைந்து வியாபார தளமாக இருந்துள்ளது.

**2. ஏத்தாப்பூர்**

தாவளம் பண்டைய நாளில் மகதேசன் பெருவழியில் உள்ள முக்கிய தாவளம் உள்ள ஊர் ஏத்தாப்பூர் ஆகும். இவ்வூரில் தங்கி வைஷ்ட நதியின் கரையில் அடர்ந்த மரங்கள் இருந்த இடத்தில் வியாபாரம் செய்துள்ளனர். இங்கு தாவளங்கள் அமைத்தும் தங்கி வணிகம் புரிந்துள்ளனர்.

**பண்டைய குடியும் வணிகமும்**

பண்டைய குடிகள் வணிகத்தினால் பொருள் வளம் மிக்க குடிகளாக உயர்ந்தனர். இக்குடிகளில் தலைமைச் சான்ற



குடும்பத்தினர் வணிகத்தில் ஈடுபட்டு வருவாய் ஈட்டினர். இந்த தலைமைச் சான்ற குடிகள் வருவாயில் ஒரு பகுதியை ஊர் பொது நலப்பணிக்கும், ஒரு பகுதியை தம் குடும்பத்திற்கும் வைத்துக் கொண்டனர். கோணேரிப்பட்டி, ஏத்தாப்பூர், அயோத்தியாபட்டணம், கல்லேரிபட்டி ஆகிய ஊர்களின் தொல்குடிகள் யவனருடன் வணிகத் தொடர்பு வைத்திருந்தனர் என்பதை நாம் அறிய முடிகின்றது.

# அரசியல் அமைப்பு

சேலம் மாவட்டம் கொங்கு நாட்டின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. அரசியல் பின்னணியை ஆய்வு செய்தபொழுது சங்ககால சேரர்கள் தொடர்ந்து ஆட்சி செய்து வந்துள்ளனர் என்பதை கொங்கு நாட்டில் குட்டுவன் கோதை என்ற மன்னன் வெளியிட்ட வெள்ளிக் காசுகளின் வாயிலாக அறியமுடிகிறது. இக்காசுகளின் எழுத்தமைதியைக் கொண்டு கி.பி.மூன்றாம் நூற்றாண்டு என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இருப்பினும் சில ஆய்வாளர்கள் குட்டுவன் கோதை ஆட்சியுடன் கி.பி. மூன்றாண்டுடன் சேரர் ஆட்சி முடிந்துவிட்டது என்கின்றனர். சங்க காலத்துக்கு பின் கொங்கு நாடு மற்றும் சேலம் பகுதியில் அரசியல் சூழ்நிலைகள் தெளிவற்றும் குழப்பம் நிறைந்தும் காணப்படு கின்றது. சேலம் மாவட்டத்தில் இக்காலகட்டத்தில் களப்பிரர்கள் தமிழ்நாட்டை படையெடுத்து ஆட்சிபுரிந்துள்ளனர்.

**இராட்டிடர்கள்** (இராட்டிரகூடர்கள்)

கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக சேலம் இருந்துள்ளது. இம்மாவட்டத்தில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் இராட்டிடர் என்ற அரச மரபினர் ஆட்சிபுரிந்துள்ளனர். இவர்களின் கடைசி மன்னன் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்டுள்ளான். இராட்டிடர்கள் யார் என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளது. இந்த இராட்டிடர்கள் "ரெட்டி மரபினர்" என்றும் "இராட்டிரகூடர்" என்றும் "களப்பிரர்" என்றும் மூன்று விதமான கருத்துக்கள் உள்ளது. இந்த இராட்டிடர் மரபினர் பற்றி "கொங்கு தேச ராஜாக்கள்" என்ற நூலில் மட்டுமே குறிப்பு உள்ளது. பழந்தமிழில் அரட்டு-அரிட்டா என்பதற்கு குறும்பு-குறும்பர் என்றும் தமிழ் அறிஞர்கள் பொருள் கூறுகின்றனர். கொங்கு நாட்டில் பண்டைய காலந்தொட்டு குறும்பர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தகுந்தச் செய்தியாகும்.



**கங்கர்கள்**

இராட்டிடர்களுக்கு பின் கொங்கு சேலத்தில் கங்கர்கள் ஆட்சி இங்கு இருந்துள்ளது என்பதை கொங்கு தேச ராசாக்கள் என்ற நூலில் குறிப்பிடப்படுகின்றது. "கொங்கனிவர்மன்" என்னும் மன்னன் கொங்கு நாட்டை ஆண்ட முதல் கங்க மன்னன் ஆவார். மேலும் கங்கர்கள் ஆட்சி தொடர்ந்து நடைபெற்றதற்கான கல்வெட்டு சான்றுகள் குறைந்தளவே உள்ளது. கங்கர்கள் வெளியிட்ட செப்பேடுகள் சிலவற்றில் கொங்கு நாடுகள் பற்றிய செய்திகள் குறிப்பிடுகின்றது.

**பாண்டியர்கள்**

கங்கர்களுக்கு பின் பாண்டியர்களில் கடுங்கோன் என்பவருக்கு பின் வந்தவர்கள் கொங்கு நாட்டைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர பலமுறை முயற்சி செய்துள்ளனர். இவருக்கு பின் தேர்மாறன், கோச்சடையன் ரணதீரன் ஆகியோரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. தேர்மாறன் என்னும் அரசன் கங்கராசனுடைய மகளை மணந்து கொங்கு நாடு முழுவதையும் பாண்டியர்களின் ஆட்சியின்கீழ் கொண்டு வந்துள்ளான் என்று வேள்விக்குடி செப்பேடு குறிப்பிடுகின்றது. இவனுக்கு பின் ஆட்சிக்கு வந்த பராந்தக நெடுஞ்சடையன் வீரநாராயணன் கொங்கு நாடு மற்றும் சேலம் பகுதிகளையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துள்ளான். மேலும் கொங்கு நாட்டினை வரகுணன் இராசசிம்மன், வீரநாராயணன், இரண்டாம் வரகுண பாண்டியனும் மற்றவர்களும் ஆட்சிபுரிந்துள்ளனர்.

**சோழர்கள்**

சேலம் நாட்டினை சோழர்களும் ஆட்சிபுரிந்துள்ளனர் என்று கொங்கு தேச ராசாக்கள் என்ற நூல் குறிப்பிடுகின்றது. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட திருத்தணிச் செப்பேடுகள் சோழர்கள் கொங்கு நாட்டினை ஆட்சி செய்துள்ளனர் என்பதை உறுதி செய்கின்றது. மேலும் இக்கருத்தினை உறுதி செய்ய கோவை குனியமுத்தூர்- அய்யாசாமி மலையில் இராசகேசரி பெருவழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பெருவழியை

பற்றிய செய்திக் கல்வெட்டில் உள்ளது. கல்வெட்டானது தமிழிலும், வட்டெழுத்திலும் எழுத்துக்கள் வெட்டப்பட்டுள்ளது. இந்த பெருவழி பாதையானது கண்டராதித்தன் காலத்தைச் சார்ந்தவை என்றும் மற்றொரு கருத்து இராசராசன் காலத்தைச் சார்ந்தவை என்றும் இரண்டு கருத்துக்கள் உள்ளது.

# இடைக்கால அரசியல் பின்னணி

சேலம் மாவட்ட வரலாற்றில் சங்க காலத்திற்குப் பின் அரசு, அரச வம்சத்தினர், அரசியல் பின்னணி தெளிவாக இல்லை. இப்பகுதியில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு காலத்தை சார்ந்த கல்வெட்டுகள், செப்பேடுகளின் செய்திகள் சிறிதளவு அரசியல் அமைப்பை அறிந்துகொள்வதற்கு உதவுகின்றது. சங்ககால அரசியல் வீழ்ச்சிக்குப் பின் இடைக்கால சேரர்கள் இப்பகுதியில் ஆட்சிபுரிந்துள்ளனர். அதற்கான கல்வெட்டுச் சான்றுகளும், செப்பேட்டுச் சான்றுகளும் கிடைக்கின்றன. நாமக்கலில் கிடைக்கப் பெற்ற வீரசோழனின் செப்பேடுகள் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சேரர்கள் பற்றிய செய்திகள் அறிய உதவுகின்றன. இந்த மரபினர் சங்ககால சேரர்களின் குட்டுவன் கோதை ஆகியோர் வழிவந்தவர்கள் என்பதை உணர முடிகின்றது.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் கொங்குநாடு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி நடைபெற்று வந்துள்ளது.

(1) சேலம், நாமக்கல் அடங்கிய பகுதி கொங்கன வீரசோழ மண்டலம் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டது.

(2) மற்றொரு பிரிவு ஈரோடு மாவட்டம், கோவை வட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், அவிநாசி வட்டம், திண்டுக்கல், பழனி வட்டங்களை உள்ளடக்கிய வடகொங்குப் பகுதி என்று பிரித்து ஆட்சி பகுதியாக இருந்துள்ளது.

(3) கோவை மாவட்டத்தில் பல்லடம், பொள்ளாச்சி, உடுமலை வட்டம், பழனி வட்டத்தில் மேற்குப் பகுதி அடங்கிய தென் கொங்குப் பகுதி ஆகியவை அரசியல் ஆட்சி பகுதியாக இருந்துள்ளது.

இந்த மூன்று பிரிவுகளில் "கொங்கணி சோழ வீரமண்டலம்" என்று அழைக்கப்பட்ட சேலம் பகுதியை தஞ்சை தலைமையிடமாக கொண்ட சோழர்களின் நேரடி ஆட்சியின்கீழ் இருந்துள்ளது.

**சேலத்தில் தஞ்சை சோழர்கள்**

1. விசயாலய சோழன் ........ 850 - 871
2. ஆதித்தன்-I 880-ல் 894 கொங்கு
3. பராந்தகன்-I 907,954
4. இராசாதி இராசன் ........ 1018 - 1050
5. இராசேந்தின்-II ........ 1052 - 1062
6. வீரராசேந்தின் ........ 1062 - 1070
7. முதல் குலோத்துங்க சோழன் ........ 1073 - 1118
8. விக்கிரம சோழன் ........ 1118 - 1135
9. இரண்டாம் குலோத்துங்கன் ........ 1123 - 1146
10. இரண்டாம் இராசராசன் ........ 1146 - 1178
11. இரண்டாம் இராசாதிராசன் ........ 1171 - 1186
12. மூன்றாம் குலோத்துங்கன் ........ 1178 - 1216
13. மூன்றாம் இராசராசன் ........ கி.பி.1217 - 1248

இச்சோழ வம்சத்தில் 24 அரசர்கள் சேலம் மாவட்ட பகுதி களில் ஆட்சிபுரிந்துள்ளனர். 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழ வம்சம் சீர்குலைய ஆரம்பித்துவிட்டது. இவர்கள் பல கோயில் களையும், நீர்ப்பாசன ஏரிகளையும், குளங்களையும் உருவாக்கி யுள்ளனர். இந்த வம்சத்தின் வழிவந்தவர்கள் பல சமூக சீர்த்திருந்தங்களையும், மாற்றங்களையும் செய்துள்ளனர்.

**சேலத்தில் பாண்டியர்கள்**

கொங்கு நாட்டை சோழர்களும், கொங்கு சோழர்களும், கங்கர்களும் ஆட்சிபுரிந்துள்ளனர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இம்மன்னர்கள் வலுவிழந்த நிலையில் மதுரை பாண்டியர்கள் முன்னேற தொடங்கினார்கள் இவர்களில் முதல் பாண்டிய மன்னன் "ஜடாவர்மன் குலசேகரன்" ஆவார்.

1. ஜடாவர்மன் குலசேகரன் I 1190 -1216
2. மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1216 -1237
3. சுந்தர பாண்டியன் II 1238 -1257
4. ஜடாவர்மன் சுந்தரன் I 1251 -1271
5. ஜடாவர்மன் வீரப்பாண்டியன் 1254 -1271



6. மாறவர்மன் குலசேகரன் 1268 -1310
7. ஜடாவர்மன் சுந்தரன் 1270 -1310

பாண்டியர்களின் கல்வெட்டு ஒன்று சேரன்மாதேவியில் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டு செய்தியானது மலைநாடு, சோணாடு, இருகொங்கு நாடுகள், ஈழம், தொண்டைநாடு ஆகிய நாடுகளை வென்று ஆட்சி நடத்தியுள்ளனர் என்ற செய்தி தெரிய வந்துள்ளது.

மதுரை பாண்டியர்களும் தளர்ச்சி அடைந்தபின் கொங்கு பாண்டியர்கள் கி.பி.1205 முதல் 1300 வரை ஆட்சிபுரிந்தனர்.

1. வீரபாண்டியன் 1265 - 1285
2. சுந்தரபாண்டியன் 1285 - 1300
3. குலசேகர பாண்டியன் - இவனைப் பற்றி மூன்று கல்வெட்டுகள்
4. திரிபுவன வீரபாண்டியன் - இவனைப் பற்றி நான்கு கல்வெட்டுகள்
5. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் - இவனைப் பற்றி கொங்கு நாட்டில் 13 கல்வெட்டுகள் உள்ளது.

**ஹொய்சாளர்கள் 1200-1325**

கி.பி.13-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டின் வடக்குப் பகுதியாகிய கன்னட நாட்டில் "ஹலபீடு" தலைநகரமாகக் கொண்டு ஹொய்சாளர்கள் ஆட்சி செய்து வந்துள்ளனர். இவர்கள் கொங்கு நாட்டின் மீது பலமுறை படையெடுத்து கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கொங்கு நாட்டின் சில பகுதிகளை கொங்கு பாண்டியர்களிடமிருந்து கைப்பற்றியுள்ளனர். அவர்களில் குறிப்பிடத் தகுந்த அரசர்கள்

1. விஷ்ணுவர்த்தன் -1110-1152
2. வீரவள்ளாள தேவன்-II -1173-1220
3. வீரசோமேஸ்வரன் -1235-1253
4. நரசிங்கதேவன்-III -1254-1292
5. வீரவள்ளாள தேவன்-III -1292-1341

ஹொய்சாளர்களின் ஆட்சியின் போது கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் டெல்லியிலிருந்து முஸ்லீம் படைத்தளபதி மாலிக்காபூர் தென்னாடு முழுவதும் படையெடுத்து கொள்ளை யடித்துக் கொண்டு வடக்கு டெல்லிக்கு திரும்பினான். இந்த மாலிக்காபூர் படையெடுப்பின் விளைவாக ஹொய்சாளர்களும் மதுரை பாண்டிய அரசுகளும் அழிந்துபோய்விட்டது. மாலிக்காபூர் படையெடுப்பு களுக்குப்பின் சுல்தான்கள் ஆட்சி கொங்கு நாட்டில் ஏற்பட்டது.

**கொங்கு நாட்டில் விஜயநகரர் ஆட்சி கி.பி. 1336**

விஜயநகரம் வித்தியாரண்யர் சிருங்கேரி பீடாதிபதி வழியில் வந்த வித்தியாரண்யர் உபதேசத்தில் தோற்றுவிக்கப்பட்ட நகரம் வித்தியாரண்ய நகரம் பெயர்பெற்று பின்னாளில் விசயநகரம் என பெயர்பெற்று பின்னர் விசயநகரர் அரசு என்று அழைக்கப்பட்டது. துங்கபத்திர ஆற்றங்கரையில் ஹரிஹரபுக்கர் என்பவர்கள் விசயநகர அரசை கி.பி. 1336-இல் தோற்றுவித்து சுமார் 300 ஆண்டுகள் விசயநகர அரசர்கள் சேலம் பகுதியை ஆட்சி புரிந்துள்ளனர். இந்த விசயநகர அரசர்கள் நான்கு வம்சா வழியாக அடுத்தடுத்து ஆட்சிபுரிந்துள்ளனர்.

**சங்கம வம்சம் 1336-1485 இந்த வம்சத்து மன்னர்கள்**

1. கம்பண்ண உடையார் II - 1368
2. வீரஅரியப்ப தேவர் - 1386-1397
3. வீர தேவராயன் - கி.பி. 1408
4. வீரஹரராயர் - 1400-1412
5. தேவராயர் II - 1419-1451

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசர்கள் சங்கம வம்சத்து அரசர்கள் ஆவார்கள். இவர்களுடைய கல்வெட்டுகள் ஒரு சில கொங்கு நாட்டில் காணப்படுகின்றது.

**சாளுவ வம்சம் 1485-1505 – சாளுவ வம்சத்து அரசர்கள்**

சங்கம வம்சத்திற்கு பிறகு சாளுவ வம்சத்து அரசர்கள் ஆட்சி யுரிமையை கைப்பற்றியுள்ளனர். அவர்களில் முக்கியமானவர்கள்.

1. நரசிம்மன் 1483-1492
2. இம்முடி நரசிம்மன் 1493-1505-ஆறகளூர் கல்வெட்டு



3. (3)புஜபலராயன்இம்முடி நரசராயன் 1492-ஆறகளூர் கல்வெட்டு
4. வீரநரசராயன் 1505-1492-ஆறகளூர் கல்வெட்டு

**துளுவ வம்சம் 1505 – 1570**

விசயநகரத்தில் சாளுவ வம்சத்திற்கு பிறகு துளுவ வம்சம் ஆட்சியுரிமையை கைப்பற்றியது. இந்த வம்சத்து அரசர்களில் சிலர்

1. நரசநாயக்கன்
2. வீரநரசிம்ம புஜபலராயன்
3. கிருஷ்ண தேவராயன் 1509-1529
4. அச்சுதராயன் 1530-1542
5. சதாசிவராயன் 1542-1570

இவர்களில் கிருஷ்ண தேவராயர் மிகவும் வல்லமை படைத்தவனாக கன்னடம், கொங்கு சேலம் பகுதிகளை கைப்பற்றி ஆட்சிப்புரிந்துள்ளார். இவர் காலத்து கல்வெட்டுகள் கொங்கு நாடு முழுவதும் மற்றும் சேலம் மாவட்ட கோயில்களிலும் காணப்படுகிறது.

**4. ஆரவீடு வம்சம்**

விஜயநகர பேரரசில் நான்காவது வம்சமாக ஆரவீடு வம்சத்தினர் ஆட்சிக்கு வந்தனர்.

1. இராமராயன்
2. திருமலையான்
3. சதாசிவன்
4. ஸ்ரீரங்கன்
5. வெங்கடபதிராயன்

இந்த ஆரவீடு வம்ச அரசர்கள் ஆட்சியிழந்த பொழுது இவர்களுடைய சாமந்தர்களாக இருந்த "நாயக்கர்" வம்சத்தினர் அரசாட்சியை கைப்பற்றினர். மேலும் கொங்கு நாட்டில் கி.பி.1350 முதல் 1600 வரை விசயநகர மன்னர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். இவர்களுடைய ஆட்சி காலத்தில் அமைதி நிலவியது, இதற்கான காரணம் விசய நகரத்தாரின் வெற்றியும் அரசியர் சாணக்கியமே காரணமாக இருந்தது.

## நாயக்கர்கள்

விசயநகர அரச வம்சத்தினர் தாங்கள் ஆட்சி செய்த நிலப்பரப்பினை ஆறு மாகாணங்களாக பிரித்து ஆட்சி புரிந்துள்ளனர். 1. ஆந்திரம் 2. கர்நாடகம் 3. சந்திரகிரி. 4. செஞ்சி 5. தஞ்சாவூர் 6. மதுரை என ஆறு மாகாணங்களாக பிரித்து ஆட்சி புரிந்துள்ளனர். மேலும் ஒவ்வொரு மாகாணத்திற்கும் தங்கள் சம்பந்தர்களாகிய நாயக்கர்களை தங்கள் பிரதிநிதியாக அமர்த்தி ஆட்சி செய்ய வழிவகுத்துள்ளனர். இவ்வாறு தமிழ் நாட்டில் செஞ்சி நாயக்கர் அரசு, மதுரை நாயக்கர் அரசு என நாயக்கர் வம்சத்தினர் உருவாகி ஆட்சிபுரிந்துள்ளனர். இவர்கள் விஜயநகர பேரரசின் கட்டுப்பாட்டின் கீழ் பிரதிநிதியாக ஆட்சிபுரிய வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஆட்சிபுரிந்துள்ளனர்.

மேலும் கொங்கு நாடு மற்றும் சேலம் பகுதிகள் மதுரை மாகாணத்து நாயக்கர்கள் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. மதுரை நாயக்கர்களுக்கு கீழ் பாளையப்பட்டுகள் இருந்துள்ளது. பாளையப்பட்டுக்களின் தலைவர்கள் பாளையக்காரர்களாக இருந்துள்ளனர்.

## நாயக்கர்கள் ஆட்சி கி.பி. 1529

விசயநகர சதாசிவராயரின் காலத்தில் கி.பி. 1505-இல் தஷிண முகமதிய சுல்தான்கள் விசயநகர பேரரசின் மீது படையெடுத்து விசயநகர பேரரசை அழித்து தங்களது ஆட்சியின் கீழ்கொண்டு வந்துள்ளனர். இதன் பின் 1575-இல் நாயக்க வம்சத்து அரசரான திருமலைராயன் அரசனானான். இவன் விசயநகர பேரரசை ஆறு பிரிவுகளாக பிரித்து ஆறு நாயக்கர் வம்சத்தினரை பிரதிநிதிகளாக நியமித்தான். மதுரை மாகாணத்திற்கு வேங்கடராயனும், தஞ்சையில் செவ்வப்ப நாயக்கனும் அரச பிரதிநதிகளாக ஆட்சிபுரிந்துள்ளனர்.

## மதுரை மாகாணமும் நாயக்க அரசர்கள்

| | |
|---|---|
| 1. விசுவநாத நாயக்கர் | 1529-1564 |
| 2. கிருஷ்ணப்ப நாயக்கர் | 1564-1572 |
| 3. வீரப்ப நாயக்கர் | 1572-1595 |



| | |
|---|---|
| 4. குமரகிருஷ்ணப்ப நாயக்கர் | 1595-1601 |
| 5. முத்துவீரப்ப நாயக்கர் | 1609-1623 |
| 6. திருமலை நாயக்கர் | 1623-1659 |

மதுரை நாயக்க வம்சத்து மன்னர்கள் கொங்கு நாட்டில், திருப்பணிகளையும், மண்டபங்களையும், நீர்ப்பாசனங்களையும் கட்டி வைத்தனர். திருமலை நாயக்கர் கல்வெட்டுகள் கொங்கு நாட்டில் குறிப்பாக சேலம் மாவட்ட கோயில்களில் மிகுதியாக காணப்படுகின்றது.

# மைசூர் அரசர்கள் ஹைதர்அலி, திப்புசுல்தான் காலத்தில் சேலம்

**முதலாம் மைசூர் போர்**

மைசூரில் விசயநகர அரசு, நாயக்கர் அரசு மற்றும் தளவாய் அரசு முடிவுற்ற நிலையில் கி.பி.1761-இல் ஹைதர் அலி மைசூர் இராஜ்ஜியத்தில் முழுப்பரப்பையும் கைப்பற்றி ஆட்சி புரிந்துள்ளார். மைசூரைச் சுற்றியுள்ள அரசுகளை அழித்துவிட்டு, வெளிமாநில அரசுகளின் மீது போர்த்தொடுத்து கைப்பற்ற தொடங்கினான். கி.பி. 1767-கி.பி. 1769-இல் முதல் மைசூர் போர் ஹைதர் அலிக்கும், ஆங்கிலேயர்களுக்கும் போர் மூண்டு ஹைதர் அலி வெற்றி வாகை சூடினான். இந்த முதலாம் மைசூர் போர் விளைவாக சேலம் மாவட்டத்தின் எல்லா ஊர்களும் ஈரோடு, கரூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் ஹைதர்அலியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**இரண்டாம் மைசூர் போர் (கி.பி. 1780–1784)**

கி.பி. 1780-இல் பிரெஞ்சு படைத்தலைவர்கள் உதவியுடன், தனது படையை ஆங்கிலேயர்களை நோக்கி செலுத்தி மங்களூரில் போர் நடந்தது. இந்த போரின் போது எப்படியோ ஹைதர் அலி இறந்து விட்டார். ஹைதர்அலியின் மகன் திப்புசுல்தான் போரை தொடர்ந்து நடத்தினான். இறுதியில் மங்களூரில் திப்பு சுல்தானுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி கொங்கு கோவை, சேலம் ஆகிய பகுதிகள் ஆங்கிலேயர்களின் ஆட்சியின்கீழ் வந்தது.

**மூன்றாம் மைசூர் போர் (கி.பி. 1785–1792)**

மூன்றாவது மைசூர் போர் திப்புசுல்தானுக்கும், ஆங்கிலேயர் களுக்கும் ஏழு ஆண்டுகள் தொடர்ந்தாற்போல் வெவ்வேறு இடங்களில் வெற்றி மற்றும் தோல்வி இருவருக்கும் மாறிமாறி



வந்தடைந்தது. இறுதியில் ஆங்கிலேயர்கள் வெற்றிபெற்று சேலம், கோவை, கோட்டை, கொத்தளங்கள் ஆகியவை ஆங்கிலேயர்களின் முழு கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**நான்காம் மைசூர் போர் (கி.பி. 1799)**

திப்புசுல்தான் ராயக்கோட்டை வழியாக வந்து "மைசூர் மாளவள்ளில்" போர் நடந்தது. இப்போரில் ஆங்கிலேயப் படை வீரன் ஒருவனால் போரின்போது திப்புசுல்தான் சுட்டுக் கொல்லப் பட்டான். மைசூர் முகமதியர்களின் ஆட்சி இதனுடன் முடிவடைந்தது. மைசூர் முகமதியர்களின் ஆட்சிக் காலத்தில் சங்ககிரி கோட்டை, கோயமுத்தூர் கோட்டை, நாமக்கல் கோட்டை, மற்றும் கோட்டைகளில் கொத்தளங்கள் உருவாக்கப்பட்டது. ஈரோட்டில் ஒரு மண் கோட்டையும் உருவாக்கப்பட்டது.

# சேலம் மாவட்டத்தில் ஆங்கிலேயர்கள் ஆட்சித் தொடக்கம்

மூன்றாம் மைசூர் போர் இறுதியில் கி.பி.1792-இல் சேலம் மாவட்டம் முழுவதும் ஆங்கிலேயர்களின் ஆட்சியின்கீழ் வந்துவிட்டது. சேலம் மாவட்டத்தின் முதல் ஆட்சித் தலைவராக "காப்டன் ரீட்" நியமிக்கப்பட்டார். நான்காம் மைசூர் போரில் 1799-இல் கொங்கு நாடு முழுவதும் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இதன் பிறகு கொங்கு நாடு, மற்றும் சேலம் மாவட்டம் அனைத்துப் பகுதிகளும் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. பின் கி.பி. 1802-இல் தமிழ்நாடு முழுவதையும் ஆங்கிலேயர்களின் ஆட்சியின்கீழ் கொண்டு வந்து பல ஜில்லாக்கள் உருவாக்கப்பட்டது. சேலம் ஜில்லாவிற்கு சேலம் தலைநகரார் உருவாக்கப்பட்டது. கிருஷ்ணகிரி தாலுக்காவாக மாற்றி அமைக்கப்பட்டது. ஆங்கிலேயர்களின் ஆட்சியில் பழைய நடைமுறைகளையே பின்பற்றினர். பொதுவாக கர்நாடக நவாப்புகள் நடைமுறைப்படுத்தி வந்த ஆட்சிமுறைகளையும், பெயர்களையும் வைத்துக் கொண்டனர். சேலமும், கோவையும், திப்பு சுல்தான் ஆட்சியின்கீழ் இருந்து வந்தபடியால், அவர் ஆட்சி நடைமுறைகளையோ, பெயர்களையோ மாற்றவில்லை. ஆட்சி நடைமுறையில் ஜில்லா, தாலுக்கா, பிர்க்கா, கிராமம் என அடுக்கு முறை பிரிவுகள் ஏற்படுத்தினர். ஜில்லாவுக்கு கலெக்டரும், தாலுக்காவிற்கு தாசில்தாரும், பிர்காவிற்கு ரெவின்யு இன்ஸ்பெக்டரும், கிராமத்திற்கு மணியக்காரரும் அதிகாரிகளாக இருந்தனர். இவர்களது ஆட்சியில் ஜில்லா நிர்வாக அரசாங்கத்தின் மைய இயந்திரமாக செயல்பட்டு வந்துள்ளது.

### ஆங்கிலேயர்களின் வரி முறைகள்

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் நிலவரி ஜில்லா நிர்வாகம் மூலம் வரி வசூல் செய்யப்பட்டது. ஆற்றுப்பாசனம்,



குளத்துப் பாசனம் உள்ள பாய்ச்சல் நன்செய் நிலங்களுக்கு அதிக தீர்வையும், கிணற்றுப் பாசனங்களுக்கு நடுத்தரத் தீர்வையும், மானாவாரி புஞ்சை நிலங்களுக்கு குறைந்த தீர்வையும் வரி வசூலிக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்ததும் நிலத் தீர்வையை மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான நிலத் தீர்வையை உண்டாக்கினர். கொங்கு, சேலம் மாவட்டங்களில் நேரடியாக வரி செலுத்தும் "ராயத்து (RYOTWARI) நேரிடை" வரியை வசூலித்தனர். மேலும் பண்டைய கால அரசர்கள் பரிசாக கொடுத்த தேவதானம், பிரம்மதேயம், சர்வமான்யம் ஊழிய மான்யம் என்ற பலவகை பிரிவு தீர்வைகள் முறைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டது. இவற்றில் மேல்வாரம், குடிவாரம், என்ற இரண்டு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டது. சேலம் ஜில்லாவில் நிலப்பிரபு மிட்டாக்களும், கோவையில் பாளையப்பட்டுக்களும் மற்றும் இத்துடன் அரசாங்கத்திற்கு கீழ் படிந்தவர்களுக்கு சில நில உரிமைகள் வழங்கப்பட்டு நடைமுறையில் இருந்தது.

# நாட்டுப் பிரிவுகள்

சேலம் மாவட்டத்தில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பல்வேறு நாட்டுப் பிரிவுகள் இருந்துள்ளது. "நாடு" என்பதன் பொருள் நிலம் மற்றும் காட்டுப் பகுதி அடங்கிய பகுதியாகும். இச்சொல் குறித்து "நாடு" என்பது காடழித்து உருவாக்கப்பட்டது என்றும் வேளாண்மை பகுதியும் அடங்கியதுதான் நாடு என்றும், கொங்கு நாட்டு சோழன் பூர்வபட்டியத்தில் நாட்டைப் பற்றி குறிப்பிடும் பொழுது காடுகளை அழித்து ஊர்ப்பகுதி, விவசாயப்பகுதி என உருவாக்கிய பின் இரண்டு பகுதியும் சேர்ந்ததுதான் நாடாகும் என்று குறிப்பிடப்படுகின்றது.

## நாடுகள்

நாடுகள் உருவான காலத்தைப் பற்றிய கருத்து அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துகள் உள்ளது. நாடு என்பது கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் வந்தது என்றும் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் வந்தது என்றும் கருத்துகள் உள்ளது. சேலம் மாவட்டத்தில் கி.பி.10-ஆம் நூற்றாண்டிலிருந்து பல்வேறு ஊர்களில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றது. மேலும் தஞ்சை சோழர் காலத்தில் சேலம் பகுதி நிர்வாக காரணங்களுக்காக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று "வடகரை ராசாச்சிரிய வளநாடு" இருந்துள்ளது. இந்நாட்டில் சேலம், நாமக்கல், இராசிபுரம், திருச்செங்கோடு ஆகிய ஊர்கள் அடங்கியிருந்தது. இன்னொரு நாட்டுப் பிரிவான "மகத மண்டலத்து சனநாத வளநாடு" என்ற பெயருடன் இருந்துள்ளது. இந்த மண்டல பிரிவில் ஆத்தூர் வட்டமும், ஆறகளூர் அடங்கிய பகுதியும் இருந்துள்ளது.

## வடகரை இராசாச்சிரிய வளநாடு

சேலம் மாவட்டத்தின் ஒரு பிரிவாகிய வடகரை இராசாச்சிரிய வளநாடு நிர்வாக காரணங்களுக்கு மேலும் உட்பிரிவு நாடுகளாக பிரிக்கப்பட்டது. அவற்றில் ஒன்று முஞ்சு வல்லரையர் நாடு, இப்பிரிவு



நாளடைவில் மேலும் நாடாழ்வார் நாடு, கொல்லிமலைநாடு, மின்னாமொழி நாடு, மழநாடு, ஏழூர்நாடு, பூந்துறைநாடு, பருத்திப்பள்ளிநாடு, பூவாணியர்நாடு, தூசூர் நாடு, வஞ்சிநாடு, வெள்ளரை நாடு, குன்றத்தூர் நாடு, இராசிப்புரநாடு என்றெல்லாம் பிரிந்து இருந்துள்ளது. மேலும் இந்த நாட்டுப் பிரிவுகள் அடங்கிய பகுதி வீரசோழ மண்டலம் என்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளது.

## மகத மண்டலத்து சனநாத வளநாடு

இப்பகுதியான ஆத்தூர் வட்டம் அடங்கிய பகுதியாகும். இந்த நாட்டுப் பிரிவு நாளடையில் நிர்வாக காரணங்களுக்காக ஆத்தூர் கூற்றம் என்ற பகுதியும் மேலும் துறவிநாடு, மாலந்துறவி நாடு, மற்றும் மாறடி சீமை என்ற பிரிவுகளாக பிரிந்து இருந்துள்ளது.

## சேலம் மாவட்டத்தில் சதுர்வேதிமங்கலம்

சேலம் மாவட்டத்தில் அரசர்களால், தெய்வப்பணி காரணங்களுக்காகவும், திருப்பணி காரணங்களுக்காகவும், இந்து தர்மகாரியங்களுக்காவும், பிராமணர்களுக்கும், பிராமணர்களின் சமூகத்திற்காகவும் அளிக்கப்பட்ட ஊர்கள் அடங்கிய பகுதி சதுர்வேதிமங்கலம் ஆகும்.

| | | |
|---|---|---|
| 1. | பொன்பரப்பின சதுர்வேதிமங்கலம் | - வீரபாண்டி, உத்தமசோழபுரம் |
| 2. | இராசாச்சிரயச் சதுர்வேதிமங்கலம் | - சேலம் |
| 3. | சிங்களாந்த சதுர்வேதிமங்கலம் | - மனப்பள்ளி |
| 4. | விக்கிரமகேசரி சதுர்வேதிமங்கலம் | - கதிராநல்லூர் |
| 5. | சத்திரிய சிகாமணி சதுர்வேதிமங்கலம் | - இருபுளி(நாமக்கல்) |
| 6. | முப்பாவை சமுத்திர சதுர்வேதிமங்கலம் | - சமுத்திரம் |

# சேலம் மாவட்டத்தில் குறுநில மன்னர்கள்

சேலம் மாவட்டத்தில் தஞ்சை பேரரசும், மதுரை பாண்டியர்களும், விசயநகர பேரரசும், ஹொய்சாளர் பேரரசும் கி.பி.10-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரை சேலம் மாவட்டத்தில் ஆட்சிபுரிந்துள்ளனர். இந்த பேரரசுகளின் மேலாதிகாரத்தின் கீழ்பணிந்தும், வரி செலுத்தியும், பேரரசுகளின் பிரதிநிதிகளாகவும் குறுநிலங்களை ஆட்சிபுரிந்துள்ளனர்.

**கட்டி முதலிகள்**

சேலம் மாவட்டத்தில் தாரமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிபுரிந்துள்ளனர். வரலாற்று ஆய்வாளர்கள் இவர்களை பாண்டியர்களின் ஆட்சி காலத்திலும் ஒய்சாளர்களின் ஆட்சி காலத்திலும் இப்பகுதியில் ஊர்த்தலைவர்களாக இருந்தவர்களே கட்டி முதலிகள் என்று அழைக்கப்பெறுகின்றனர் என்று குறிப்பிடு கின்றனர். இந்த ஊர்த்தலைவர்கள் சற்று உயர்வடைந்தவர்கள் நாயக்கர் என்றும் குறிப்பாக மதுரை நாயக்கர்களின் ஆட்சியின்போது பாளையக்காரர்கள் என்றழைக்கப்பட்டு தாரமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு கட்டிமுதலி என்ற பட்டத்துடன் ஆட்சிசெய்துள்ளனர். இவர்களின் ஆட்சிப் பகுதி தாரமங்கலம், ஓமலூர், பவானி, ஆத்தூர், ஆறகளூர் போன்ற பகுதிகளை ஆட்சிபுரிந்துள்ளனர். இவர்களைப் பற்றிய மிகுதியான கல்வெட்டுகள் ஆறகளூர், ஓமலூர், தாரமங்கலம், பவானி போன்ற இடங்களில் காணப்படுகின்றது.

**சின்னமநாயக்கன்**

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் செக்கடிபட்டி கிராமத்தில் பெருமாள் ரெட்டியார் வயலில் ஒரு குத்துக்கல்லில் பழமைவாய்ந்த கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டில் "சின்னமநாயக்கன்" என்ற "பாளையக்காரர்" கல்வெட்டுச் செய்தி உள்ளது. மேலும் இவருக்கு பட்டப்பெயர்களாக "சேலம் சின்னபூபாலன்" என்றும் "சின்னமகிபன்" என்று அழைக்கப்பட்டு வந்துள்ளனர். செக்கடிபட்டி கல்வெட்டில் இவனுக்கு ஆறு மக்கள் இருந்துள்ளனர் என்றும், இவனுடைய ஒரு மகன் பெயர் "இலட்சமி நாயக்கன்" என்பவர் ஆவார். இந்த இலட்சமிநாயக்கன் ஆத்தூரில் கல்கோட்டையைக் கட்டியுள்ளான். இதுமட்டும் இல்லாமல் வசிஷ்டநதியில் பல இடங்களில் நீர்ப்பாசன அணைகளையும், ஏரிகளையும் கட்டி நெல் விளையும் புஞ்சை நிலங்களாக மாற்றியுள்ளார் என்று கல்வெட்டுச் செய்திகள் குறிப்பிடுகின்றது. மேலும் இன்னொரு மகன் "வெங்கடப்ப நாயக்கன்" தனது தந்தையின் ஆணையின்படி மதுரை திருமலை நாயக்கர் திருச்சிராப்பள்ளி நோக்கி படையெடுத்தபொழுது, திருமலை நாயக்கனுக்கு ஆதரவாக படையுடன் சேர்ந்து திருச்சிராப்பள்ளி படைகளை தோற்கடித்துள்ளார் என்று பேளூர் கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகின்றது. இந்த சின்னம நாயக்கன் மற்ற பாளையக்காரனைவிட சிறந்த பாளையக்காரர்களாக விளங்கியுள்ளார்.

**ஆறகளூர் மகதை வானவரையர்கள்**

தஞ்சை சோழர் பேரரசின் கீழ் ஆறகளூரை தலைநகரமாகக் கொண்டு மகதைவாணர்கள் குறுநில மன்னர்களாக ஆட்சி புரிந்துள்ளனர். இந்த மகதைவாணர்களின் ஆத்தூர் வட்டத்தில் ஆத்தூர், ஆறகளூர், தியாகனூர் ஊர்களின் கோயில் கல்வெட்டு களிலும் கெங்கவள்ளி வட்டத்தில் தெடாவூர், வீரகனூர் சிவன் கோயில்களில் இவர்களின் கல்வெட்டுகள் உள்ளது. இந்த கல்வெட்டுகளில் இவர்களைப் பற்றி "இராசராச வானவ கோவரையன்" என்றும் "பொன்பரப்பினன் மகதைப் பெருமாள்" என்றும் "மகதேசன் உலகளந்த பெருமாள்" என்றும் குறிப்பிடப்படு கின்றது. இவர்கள் ஆட்சி செய்த பகுதி விழுப்புரம் மாவட்டத்தின் மேற்குப் பகுதியும், சேலம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியும் அடங்கியதாகும்.

**பொன்பரப்பு சோழகங்க தேவர்கள்**

சேலம் மாவட்டத்தில் சோழ அரசன் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் தொடர்ந்து சோழப் பேரரசு முடியும் வரை சேலம், இராசிபுரம் பகுதிகளை சோழகங்க தேவர்கள் ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். சோழர் ஆட்சியில் ஆறகளூர் மகதை

வானவர் ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து சிறிய குறிப்பிட்ட நிலப்பரப்பினை ஆட்சி செய்த குறுநிலத் தலைவர் ஆவார்கள், இவர்களில் அழகிய "சியானான சோழங்க தேவன்" என்பவன் தலைமையில் மல்லுரை அடுத்துள்ள "பொன்பரப்பி" என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்துள்ளான். கல்வெட்டில் சேலம் நாட்டு "பொன்பரப்பி" என்ற செய்திகள் குறிப்பிடப்படுகின்றன.

**பண்டைய நீர்ப்பாசனம்**

"நீரின்றி அமையாதுலகு" என்ற வள்ளுவர் வாக்கு பண்டைய தமிழர்கள் நீரின் முக்கியத்துவத்தை எந்த அளவிற்கு உணர்ந்திருந்தனர் என்பதற்கு சிறந்த முன் உதாரணமாகும். பண்டைய சேலம் மாவட்ட மக்கள் கால்நடைகளுக்காகவும், நீர்ப்பாசனத் தேவைக்காகவும், மக்கள் பயன்பாட்டிற்கும், கிணறுகளையும், ஏரிகளையும் உருவாக்கியுள்ளனர் என்பதற்கு பதிற்றுப்பத்து சான்றுக் கூறுகின்றது.

"பொன்செய் கனிச் சித்தின் பிணியுடைத்துச்
சிரனு சில ஊரிய நீர்வாய்ப்பந்தல்
கயிறு குறுமுகவை முயின மொய்க்கும்
ஆகெழு கொங்கு நாடு " பதிற்று -22

சங்க காலத்தை அடுத்து வந்த காலங்களில் நீர்ப்பாசன முயற்சிகள் சேலம் மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது.

சேலம் மாவட்டம் முல்லையும், குறிஞ்சியும் சேர்ந்த நிலப் பகுதியாகும். அதனால் மழை அளவு குறைவாக உள்ளது. அதனால் ஏரிகளையும், கிணறுகளையும், குளங்களையும் அமைத்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற முதல் நீர்நிலை கல்வெட்டு சான்று ஓமலூர் வட்டம் அம்மன் கோயில் பட்டியில் கிடைக்கப்பெற்ற முதல் தமிழ்பிராமிக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு

"வரம்பன் கோகூர் கிழார் மகன் வியக்கன்
கோபன் கனதேவன் தொட சுணை"



இக்கல்வெட்டு எழுத்து அமைப்பு கி.பி. 4-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவையாகும். கல்வெட்டு செய்தியானது, "வரம்பன்" என்ற பெயர் தலைமை பொறுப்பினை உணர்த்துகின்றது. இவன் கோகூர் என்ற ஊரின் தலைவனின் (கிழார்) மகன் கோபன் என்ற பெயர் ஆகும். இந்த பெயர் வைணவ மதத்துடன் தொடர்புடையதாகும். "கணதேவன்" என்பவன் குழுத் தலைவன் ஆவார். கி.பி. நான்காம் நூற்றாண்டில் சுனை நீர் வெட்டியதைப் பற்றி கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

மற்றொரு கல்வெட்டு ஓமலூர் வட்டம் டேனீஷ் பேட்டை என்ற ஊரின் ஏரியில் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு உள்ளது.

"ஸ்ரீ கிடங்கில் புலி கட்டியார் மகன்
நல்லி ஒட்டை கண்டது"

என்பது கல்வெட்டு வரியாகும்.

இக்கல்வெட்டில் "கிடங்கு" என்பது ஊரை குறிப்பதாகும். இவ்வூர் புலிகட்டியார் மகன் இந்த ஏரியின் மதகு தூம்பு (OUT LET) ஒன்றை கட்டினான் என்ற செய்தி அறியப்படுகிறது.

மற்றொரு கல்வெட்டுச் செய்தியானது சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் செக்கடிபட்டி கிராமத்தில் பெருமாள் தோட்டத்தில் உள்ள குத்துக்கல்லில் கல்வெட்டு உள்ளது. கல்வெட்டுச் செய்தியானது சேலம் பாளையக்காரன் சின்னமநாயக்கனின் மகன் இலட்சுமணன் நாயக்கர் பேளூர் கோட்டையை அமைத்து பேளூர் ஆற்றில் பல அணைகளைக் கட்டி நீர்ப்பாசன முறைகளை ஏற்படுத்தினார்கள் என்ற செய்தி அறியப்படுகிறது.

அரசு - மல்லைய நாயக்கர் அரசு
காலம் - கி.பி. 17-ஆம் நூற்றாண்டு
மொழி - தமிழ்

**கல்வெட்டு வரிகள்**

1. சர்வசித்ஸ்ரீ ஆணி மாதம் 1 தேதி ஸ்ரீ மது மல்லைய நாயக்கர்
2. மகன் பெத்தய நாயக்கர் பருவத செட்டியார்
3. மகன் ஏன்னி செட்டியார்க்கு ஏரி மானிய

4. ம் கொடுத்த விவரம் நம்முடைய காமியானி சேவ
5. நாட்டுக்கு செல்லும் தினைக்குளம் மல்லைய நா
6. யக்கர் கட்டுவித்த ஏரி உடைந்து போயிருக்கை யி
7. ல் அந் ஏரி பருவித செட்டி கட்டு வித்த படி யினாவே
8. மா ளியமாக விட்ட விவரம் அனை கட்டுக்கு தமக்
9. கு ஏரிகரை மட்டும் குழி 400 தேவர் குட்டை
10. க்கு மேற்க்கு உத்திமட்டும் குழி 600 ஆக யிப்படி
11. குழி 1000 மும் புத்திர பவுத்திர பாரம்பர்யம்
12. மானியமாக அனுபவித்துக் கொண்டு
13. யிருக்கவும் இந்த பிறகாரம் அனுபவித்துக் கொண்டு
14. ஆசந்திர காலமும் ஆசாந்திர தாறகவும் அனுபவித்துக் கொண்டு சுகத்தி
15. லே இருக்கவு இப்படிக்கு சம்மதித்து சேவுமல்லை
16. ய நாயக்க புத்திரன் பேத்தைய நா
17. யக்கர் காணியாச்சி சாசன பட்டயம்

மற்றொரு கல்வெட்டுச் செய்தியானது சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம் தம்மம்பட்டி அருகில் உள்ள பிள்ளாமதில் கிராமத்தில் ஆற்றின் மேல்புறம் எழுத்துப்பாறை கல்வெட்டுச் செய்தியானது ஆறகளூர் வாணவ கோவரையர்களின் படைத்தலைவன் "இராமன் சோழகன்" என்பவன் பிள்ளமதில் கிராமத்தில் கிணறு ஒன்றினை வெட்டி ஊர் மக்களுக்காக வழங்கினான் என்ற செய்தி அறியப்படுகின்றது.

**கல்வெட்டு**

அரசு - வாணாதிராயர்கள்
காலம் - கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
மொழி - தமிழ்

**கல்வெட்டு வரிகள்**

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மூளை ஊ
2. தைந அஞ்சாத க
3. ண்ட நல் ஊற



4. கிணறு மண
5. லூர் கிழவன்
6. இராமன் சோ
7. ழ கோன் நல்
8. வாளை வெட்டு
9. வார் நாயன்
10. தன்மம்.

**சேலம் மாவட்டத்தில் தற்போது உள்ள நீர்ப்பாசன அணைகள் பட்டியல்**

1. லட்சுமி சமுத்திரம் ஏரிப்பாசனம்
2. மேட்டூர் அணை - 1934-இல் கட்டப்பட்டது
3. மூக்குத்தி பாளையம் - நீர்ப்பாசன ஏரி (சேலம் கி.பி.13-ஆம் நூற்றாண்டு)
4. பனைமரத்துப்பட்டி - அணை நீர்ப்பாசன முறை
5. தும்பல் ஆற்றுப்பாசனம்
6. தொப்பூர் ஆற்றுப்பாசனம்
7. வாணி ஆற்று நீர்ப்பாசனம்
8. மணி முத்தாறு நீர்ப்பாசனம்

**ஏரிகள் குளங்கள் மற்றும் நீர்நிலைகளின் பெயரில் ஊர்கள்**

சேலம் மாவட்டத்தில் ஏரிகள், குளங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளது. பல கல்வெட்டுகளில் ஏரிகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளது. இம்மாவட்டத்தில் பல குறிப்பிடத் தகுந்த ஏரிகள் உள்ளது. ஊர்கள் தோறும் ஏரிகள் உள்ளது. ஏரிகளின் பெயரில் சில ஊர்கள் உள்ளது. உதாரணமாக பெரிய ஏரி, சித்தேரி, துலுக்கனூர் ஏரி, தொடாவூர் ஏரி, வீரகனூர் ஏரி, பணி ஏரி போன்ற ஊர்களின் பெயர்கள் ஏரி என குறிப்பிடத் தகுந்தவையாகும். மேலும் ராச வாய்க்கால், மணிமுத்தாறு வாய்க்கால், தொப்பூர் ஆற்று வாய்க்கால், சுவேதநதி வாய்க்கால், பனைமரத்துப்பட்டி, அணை வாய்க்கால், சரபங்க நதி வாய்க்கால் போன்ற வாய்கால்கள் உள்ளது. இந்த நீர்ப்பாசன கால்வாய்கள் மூலம் வரலாற்றுக் காலம் முதல் தற்போது வரை இந்த நீர்ப்பாசன முறைகளை விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

# சமயங்கள்

சேலம் மாவட்டம் கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக உள்ளது. மேலும் கொங்கு நாட்டில் காபாலீகம் என்றும் சைவம் பிரிவு இருந்துள்ளது. கொங்கு நாட்டு சிவாலயங்களில் சிலவற்றிற்கு "கபாலீச்சுரம்" என்ற பெயர் உள்ளது. ஈரோடு மாவட்டம் ஈரோடு மடவிளாகம், கோவை சேவூர் ஆகிய ஊர்களில் உள்ள சிவன் கோயில்களில் "அருத்திரா காலீசுரம்" என்றும் "காபாலீசுரம்" என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இது கபாலீக சமயத்தினைப் பற்றிச் செய்தியை உணர்த்துகின்றன.

**காளமுகம்**

சேலம் சுகவனேஸ்வரர் கோயில், கிளி வண்ணமுடையார் கோயில் காளமுகம் வழிபாடு செய்தமைக்கு கல்வெட்டு சான்றுகள் உள்ளது. இராசிபுரம் என்ற ஊர் பெயர் குறிப்பிடத்தக்கது. காளமுக முனிவர்கள் பெயர்கள் "ராசி" என்ற விகுதியுடன் முடியும் கங்கராசி பண்டிதர், அமிர்தராசி பண்டிதர், நாகராசி பண்டிதர் ஆகிய பெயர்களை உதாரணமாக கூறலாம். ராசி என்ற காளமுக முனிவர் பெயரால் இராசிபுரம் என்ற பெயர் உருவாகியிருக்க வேண்டும், மேலும் காளமுகம் மடங்கள் தோன்றுவதற்கு முன் உதாரணமாக இருந்துள்ளது. மேலும் கொங்கு சேலம் பகுதிகளில் 12-ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் மடங்கள் இருந்தமைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

**பாசுபதம்**

பாசுபத வைணவ மடம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் உருவானது என்று ஒரு பிரிவினரும் மற்றொரு பிரிவினர் பாசுபதம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது என்றும் இருவித கருத்துக்கள் நிலவுகின்றது. பாசுபதத்தில் போற்றப்படும் மகேஷ்வரர் வழிபாடு குஷாணர்கள் காலத்தில் மிகவும் செல்வாக்கு பெற்றிருந்தது என்பதற்கு "வீமகட்டிஸஸ்" காசுகளே உதாரணமாக உள்ளது. இந்த



வீமகட்டிஸஸ் கி.பி. முதல் நூற்றாண்டிலே வாழ்ந்தவன் ஆவான் மற்றும் பாசுபதத்தில் சில சீர்த்திருத்தங்களையும் செய்த இலகுளீசர் "இலா" நாட்டினைச் சேர்ந்தவர், இலகுளீச பாசுபதம் பழமை வாதத்தினை பின்பற்றுகின்றது. இந்த இயக்கம் யோகத்தைப் பற்றியும், பக்தி நெறிகளைப் பற்றியும் இலகுளீசம் பாசுபதம் பரப்புகின்றது. பசுபதம் சமயம் சமய சிற்பங்கள் அண்மையில் தமிழ்நாட்டில், மதுரை அரிட்டாப்பட்டியிலும், கோவை பேரூரிலும் கிடைக்கப் பெற்றுள்ளது. மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள கோயில்களில் சுண்ணாம்பு சுதை உருவங்களும் தேரில் உள்ள மரச்சிற்பங்கள் பாசுபத இலகுளீசத்தை உணர்த்துகின்றது என்று அறிஞர்கள் விவரிக்கின்றனர்.

**கொங்கேழ் சிவாலயங்கள்**

கொங்கு நாட்டில் கல்வெட்டுகளில் கி.பி.12-ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகள் கொங்கேழ் சிவாலயங்கள் பற்றி குறிப்புகள் கிடைக்கின்றது. இதில் குறிப்பாக ஐந்து கல்வெட்டுகள் ஏழு சிவாலயங்களைப் பற்றிய செய்தி உள்ளது. இந்த கல்வெட்டு செய்தி உள்ள சிவாலயங்கள் அவிநாசி, பாரியூர், திங்களூர், விசயமங்கலம், கூகலூர் ஆகிய ஊர்களின் சிவன் கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் சிவன் கோயில்கள் அரசுக்கு செலுத்தி வந்த "ஒட்டச்சு" என்ற வரியினை நீக்கியமை பற்றியும் அரசன் ஆணையில் வடகொங்கு நாட்டுப் பகுதியில் இருபது நாட்டு சாமாந்தார்- அவிநாசி, திருமுருகன்பூண்டி, கரூர், வெஞ்சமாங்கூடல், கொடுமுடி, பவானி, அன்னூர் ஆகிய ஊர்களில் உள்ள கோயில் தனத்தார் ஆகியோர்களுக்கு அரசன் ஓலை கொடுத்ததாக சுட்டப்படுகின்றது. இதில் ஏழு ஊர் தனத்தார் மற்றும் ஏழு சிவாலயங்களைப் பற்றியும் குறிப்பு வருகின்றது.

சேலத்தில் சைவ மடமும், மற்றும் ஒரு காளமுக மடம், சைவ மடம் இருந்துள்ளது. கோவையில் பேரூரில் இலகுளீச பாசுபத மடமும், மற்றும் நெரிஞ்சிப் பேட்டையில், வீரசைவ மடமும் இருந்துள்ளது. பிரித்தாணியர்கள் வருகைக்கு முன் சேலம் மாவட்டத்தில் பல சைவ மடங்கள் இருந்துள்ளது.

வைணவ மதமும், சேலம் மாவட்டத்தில் செழித்தோங்கி இருந்துள்ளது. பெரும்பாலான ஊர்களில் வைணவ மதத்தின் கோயில் வெவ்வேறு பெயரில் உள்ளது குறிப்பிடத் தக்கவையாகும்.

**ஜைனமதம்**

ஜைனமதம் இந்தியா முழுவதும் பரவும் போது தமிழ்நாட்டிலும் காலூன்றியது. தமிழ்நாட்டில் ஜைன மதம் பண்டைய பெருவழிகள் செல்லும் வழியில் உள்ள ஊர்களில் பரவியது, மற்றும் மகதை பெருவழி சேலம் மாவட்டத்தில் செல்லும் ஊர்களில் ஜைனமத சான்றுகளும், மகாவீரர், தீர்த்தங்கரர் சிற்பங்கள் கிடைத்துள்ளது. குறிப்பாக தம்மம்பட்டி அருகில் உள்ள "கருமாப்புரம்" ஜைனமதம் சான்றுகள் இருந்துள்ளது. ஆனால் காலப் போக்கில் மறைந்துள்ளது. கருமாப்புரம் என்ற பெயர் ஜைனமத தொடர்புடைய தருமாப்புரம் என்ற பெயரிலிருந்து மருவி வந்துள்ளதாக தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

இன்னும் கெங்கவல்லி வட்டம் வீரகனூர் என்ற ஊரில் தீர்த்தங்கரர் சிற்பங்கள் இருந்ததாகவும், இந்த சிற்பங்கள் உள்ள இடங்களில் குடியிருப்புகள் வந்துள்ளதாகவும் கூறுகின்றனர். வீரகனூர் என்ற பெயர் ஜைனமதம் "வீரகட்" அல்லது "விருகன்" என்ற ஜைனமத தீர்த்தங்கரர் பெயரிலிருந்து பரவியதாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

கொள்ளிமலை "அரப்பன்னீஸ்வரர்" சிவன் கோயில் ஜைனமதம் கோயிலிலிருந்து இந்துமதக் கோயிலாக மாறியுள்ளது. மேலும் "அறப்பள்ளி" ஜைனர்களின் இருப்பிடமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**புத்தமதம்**

சேலம் மாவட்டத்தில் புத்தமதம் பரவியிருந்தது என்பதற்கு சான்றாக சேலம் குகையில் புத்தமத துறவிகள் தவம் செய்து தங்கியுள்ளனர், சேலம் குகை பகுதி புத்தமதம் மையமாக இருந்துள்ளது. மகதை மண்டலம் ஆறகளூர் புத்தமத மையமாக இருந்துள்ளது. இவ்வூரில் ஒரு பகுதியாக தியாகனூர் கிராமத்தில் இன்றளவும் புத்தருக்கு கோயில் ஒன்று உள்ளது. இந்த ஊரில்



வேப்பமரத்துக்கு அடியில் இன்னொரு புத்தர் சிற்பம் உள்ளது. இந்த கற்சிற்பங்கள் தமிழ்நாட்டிலே மிகப்பெரிய இரண்டு புத்தர் கற்சிற்பங்கள் என்பது குறிப்பிட தகுந்தச் செய்தியாகும்.

சேலம் - ஆத்தூர் வட்டம் மணி விழுந்தான் கிராமத்தில் இன்றும் மிகப் பெரிய புத்தர் சிற்பம் உள்ளது. மேட்டூருக்கு அருகில் "புத்தனேரி" என்ற ஊரில் புத்தர் வழிபாட்டு தலம் ஒன்று உள்ளது. மற்றும் இவ்வூரில் உள்ள ஏரிக்கு "புத்தன் ஏரி" என்ற பெயர் இருந்துள்ளது. காலப்போக்கில் இவ்வூரை புத்தனேரி என்று அழைத்து வருகின்றனர்.

**கிருத்துவ மதம்**

சேலம் மாவட்டத்தில் கிழக்கிந்திய கம்பெனி, மற்றும் பிரிட்டிஷாரின் வருகைக்கு பின் கிருத்துவ மதம் பரவியது. மேலும் கி.பி.1877 லண்டன் மிஷினரி சேலத்தில் உருவாகி கிருத்துவ சர்ச் கோயில்களையும், பள்ளிக்கூடங்களையும், தர்மகாரியங்களையும் செய்து கிருத்துவ மதத்தை பரப்பியுள்ளனர். சேலம் மாவட்டத்தில் பல ஊர்களில் குறிப்பிடத் தகுந்த கல்வி நிறுவனங்கள், தேவாலயங்கள், கல்லரைத் தோட்டங்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தி கிருத்தவ மதத்தை பரப்பினார்கள்.

**முஸ்லீம் மதம்**

சேலம் மாவட்டத்தில் மாலிக்கபூர் வருகையின் போதும், மைசூர் முஸ்லீம் அரசர்கள் ஹைதர்அலி, திப்புசுல்தான் வருகையின் போதும் மற்றும் இவர்கள் ஆட்சியின் போதும் பல பள்ளிவாசல்களும், தர்காக்களும், மதரசாக்களும், ஈத்கா மைதானங்களும் உருவாயின. முஸ்லீம் சமூதாயத்தில் ஜமாத் என்ற சபையும், முத்தவல்லி போன்ற நிர்வாகி அமைப்பினரும் உருவாக்கப்பட்டது. முஸ்லீம் மன்னர்களின் ஆட்சியின்போது சேலம் மாவட்டத்தில் "பாரமஹால்" என்ற மாவட்ட நிர்வாக ஆட்சி அமைப்பை உருவாக்கினர். கோட்டை பகுதியில் ஹைதர்அலி, திப்புசுல்தான் காலங்களில் பல கோட்டையும், கொத்தளங்களும், பள்ளிவாசல்களும், சங்ககிரி கோட்டையும், ஓமலூர் கோட்டையும் புதுப்பிக்கப்பட்டு இவர்களின் ஆட்சியின்கீழ் இருந்துள்ளது.

# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்

## ஆத்தூர் வட்டம்

### ஆறகளூர்

ஆறகளூர் ஆத்தூர் மாவட்டத்தில் உள்ள ஊராகும். இவ்வூர் வாணாதிராயர்களின் தலைமையிடமாக இருந்துள்ளது. இங்கு திருகாமீஸ்வரர் சிவன் கோயில் உள்ளது. சுமார் 45 கல்வெட்டுகள், சோழர்கள், பாண்டியர்கள், விசயநகரர், நாயக்கர், கட்டிமுதலிகள் காலத்து கல்வெட்டுகள் உள்ளது. கரிவரதராச பெருமாள் கோயிலும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோயிலாகும். இக்கோயிலில் விசயநகரர் காலத்துக் கல்வெட்டுகள் உள்ளது. மேலும் 20-க்கும் மேற்பட்ட வரலாற்று கால கோயில்கள் உள்ளது.

### தியாகனூர்

தியாகனூர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊராகும். இவ்வூரில் தமிழ்நாட்டிலே புத்தருக்கு ஒரு பழமையான கோயில் உள்ளது. இத்துடன் பழமையான மிகப் பெரிய அளவில் புத்தர் சிற்பமும் உள்ளது. இங்குள்ள மக்கள் புத்தர் கோயிலை வழிபட்டு வருகின்றனர். தியாகனூர் புத்தமதத்துடன் தொடர்புடைய ஊராகும். மேலும் சீனத்து புத்தமத துறவி "தியாகன்" வாழ்ந்த ஊர் என்பதால் இவ்வூர் தியாகனூராக அழைக்கப்பட்டு வருகின்றது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### கல்லாநத்தம்

கல்லாநத்தம் ஆத்தூர் வட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். இவ்வூரைப் பற்றிச் செய்தி ஒன்று, ஆத்தூர் கோட்டை கரிய நர்மலேஸ்வரர் கோயிலுக்கு தானமாக "துலுக்கான நாயக்கர்" என்னும் குறுநில சிற்றரசர் இக்கிராமத்தை வழங்கியுள்ளார். இக்கொடையைப் பற்றி ஆத்தூர் கோட்டை கரியநிர்மலேஸ்வரர்



கோயில் கல்வெட்டு மூலமாக அறியமுடிகிறது. மேலும் இவ்வூரில் வரலாற்றுக் கால கோயில்களாக மாரியம்மன் கோயில், விநாயகர் கோயில், பெருமாள் கோயில் போன்ற கோயில்கள் உள்ளது.

### நரசிங்கப்புரம்

நரசிங்கப்புரம் வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த ஊராகும். இவ்வூரில் வரலாற்றுக் கால சிவன் கோயில் உள்ளது. இக்கோயில் கருவறை மேற்கு பக்க சுவரில் கிருஷ்ணதேவராயர் காலத்து கல்வெட்டுகளில் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலம், நன்கொடையாகப் பெறப்பட்டது என்பதை பற்றியக் குறிப்பு உள்ளது.

### கருமந்துறை கரியகோயில்

இவ்வூர் சேலம் நாட்டுப் பிரிவுகளில் "பெரிய கல்ராயன் நாட்டுப்" பிரிவில் உள்ள ஊராகும். இங்கு மலைவாழ் மக்கள் வணங்கும் கரியராமன் கோயில் உள்ளது. இக்கோயில் ஆறகளூர் வானாதிராயர் அரசனின் படைத்தளபதி இக்கோயிலுக்கு பொன் (Gold) கொடையாக அளித்துள்ளான் என்று கரிய வரதராச பெருமாள் கோயில் கல்வெட்டுச் செய்தி உள்ளது.

### பெத்தநாயக்கன்பாளையம்

பெத்தநாயக்கன்பாளையம் ஆத்தூர் வட்டத்தில் உள்ள ஊர்களில் பெரிய ஊராக உள்ளது. இவ்வூர் வஷிஷ்ட நதியின் தென்கரையில் உள்ளது. நாயக்க அரசவம்சத்தில் சின்னம நாயக்கன் என்பவர் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் இவ்வூரின் பாளையக்காரராக ஆட்சி நிர்வாகம் புரிந்துள்ளார். இவர் நினைவாக இவ்வூரை பெத்தநாயக்கன்பாளையம் என்று அழைக்கப்படுகின்றது.

### ஆத்தூர்

இவ்வூர் வஷிஷ்ட ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள தால் ஆத்தூர் என பெயர் ஏற்பட்டது என்பதை உணர முடிகின்றது. வரலாற்றுக் காலம் முதல் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஊராக இருந்துள்ளது. நாட்டுப் பிரிவுகளில் "ஆத்தூர் கூற்றத்து" என பல கல்வெட்டுகளில் குறிப்பிடுகின்றது. இங்கு பழமையான "காயநிர்மலேஸ்வரர்" என்ற சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலில் சோழர் காலத்து கல்வெட்டுகளும், விசய நகரர், கட்டிமுதலி கல்வெட்டுகளும், விஷ்ணு கோயிலும் உள்ளது.

இவ்வூரில் கருகற்களால் கட்டப்பட்ட கோட்டை உள்ளது. இக்கோட்டையானது கட்டிமுதலி அரசரான லட்சுமண நாயக்கரால் கட்டப்பட்டுள்ளது. இக்கோட்டையை மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையினர் பாதுகாத்து வருகின்றனர்.

**வளையமாதேவி**

வளையமாதேவி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊராகும். இவ்வூர் சோழ வம்ச அரசி வானவன் மாதேவி என்பவர் பெயரால் உருவாக்கப்பட்ட ஊராகும். இன்று இப்பெயர் மருவி "வளைய மாதேவி" என்று அழைக்கப்படுகின்றது.

## கெங்கவள்ளி வட்டம்

**தம்மம்பட்டி**

இவ்வூர் சுவேத நதிக்கரையின் தென்கரையில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊராகும். இங்கு வரலாற்றுச் சின்னங்களாக நரசிங்கபெருமாள் கோயில் உள்ளது. இக்கோயிலில் விசயநகரர் ஆட்சியின் போது கி.பி.15-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் உள்ளது. இக்கல்வெட்டுகளில் இக்கோயிலுக்கு விசயநகர அரசர் கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தில் பல ஊர்களை தானமாகவும், இத்துடன் வியாபாரிகள் தாங்கள் விற்பனை செய்யும், தானியம், தறித்தொழில் (Textiles) பொருட்களுக்கு விற்பனையில் ஒரு பகுதியை வரியாக மகமை வரி செலுத்த வேண்டும் என்ற வரி முறையைப் பற்றி கல்வெட்டுச் செய்தியும் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

**செந்தாரப்பட்டி**

இவ்வூர் தொன்மையான ஊராகும். இங்கு வரலாற்றுச் சின்னங்களாக சிவன் கோயில், விஷ்ணு கோயில், அம்மன் கோயில், தருமராச கோயில் போன்ற கோயில்கள் வரலாற்று சின்னமாக உள்ளது. இத்துடன் இதன் தெற்குப் பகுதியில் உள்ள மொடக்குவார்பட்டி என்ற இடத்தில் ஆறு நடுகற்கள் (புலிக்குத்திக்கல்) (Hero Stone) உள்ளது. இத்துடன் இம்மலையின் அடிப்பகுதியில் பெருங்கற்காலச் சின்னங்கள் உள்ளது குறிப்பிடத் தகுந்த செய்தியாகும்.



**கெங்கவள்ளி**

இவ்வூர் சுவேத நதியின் வடகரையில் அமைந்துள்ளது. இவ்வூரில் வரலாற்றுச் சின்னங்களாக, சிவன் கோயில், பெருமாள் கோயில், தருமராச கோயில், விநாயகர் கோயில், அங்காள பரமேஸ்வரி கோயில் போன்ற கோயில்கள் குறிப்பிடத் தகுந்தவையாகும். இவற்றில் சிவன் கோயில் விசயநகரர் காலத்தைச் சார்ந்தவையாக இருக்கலாம்.

**தெடாவூர்**

இவ்வூர் சுவதே நதியின் வடகரையில் அமைந்துள்ளது. இவ்வூரில் சோழர் காலத்தைச் சார்ந்த சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலில், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகளும், ஆறகளூர் வானவ கோவரையன் அரசன் காலத்து கல்வெட்டுகளும் உள்ளது. இக்கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடைகளைப் பற்றியும் கொடையாக அளித்த ஊர்களைப் பற்றியும் செய்திகளாக உள்ளது.

**வீரகனூர்**

கெங்கவள்ளி வட்டத்தில் அமைந்துள்ள பழமையான ஊராகும். இவ்வூரில் வரலாற்றுச் சின்னங்களாக கங்கா சௌந்திரேஸ்வரர் கோயில், பெருமாள் கோயில், அம்மன் கோயில், மதுரைவீரன் கோயில் போன்ற கோயில்கள் உள்ளது. இவற்றில் சிவன் கோயிலில் ஏராளமான கல்வெட்டுகள் உள்ளது. இக்கல்வெட்டுகளில் (கி.பி.1249) மூன்றாம் இராசேந்திரன் சோழன் காலத்துக் கல்வெட்டுகளும், கி.பி.15-ஆம் நூற்றாண்டு விசயநகரர் கிருஷ்ணதேவராயர் காலத்துக் கல்வெட்டுகளும் உள்ளது. இக்கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்களையும், பொன், பொருட்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. மேலும் இவ்வூர் "வீரஅருகன்" என்னும் ஜைனமத துறவின் பெயரிலிருந்து வீரகனூர் பெயர் வந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**வெள்ளையூர்**

இவ்வூர், தொன்மையான ஊராகும். இவ்வூரில் கரிவரதராசப் பெருமாள் கோயில் வரலாற்றுச் சின்னமாக உள்ளது. இக்கோயில்

கட்டடக்கலை அமைப்பை நோக்கும் பொழுது விசயநகரர் காலத்தைச் சார்ந்தவையாக இருக்கலாம் என்பதை உணர முடிகின்றது.

**கோணோப்பட்டி**

இவ்வூரில் ரோமன் கத்தோலிக்க கிருஸ்தவர் பேராலயம் உள்ளது. இவ்வூரில் கிருஸ்தவ மெசினரி கி.பி. 1850-56-இல் ஏற்படுத்தப்பட்டு பல சமூக சீர்த்திருத்தங்களை செய்துள்ளது. மேலும் இவ்வூரில் உரோமானியர்கள் காலத்து வெள்ளிக் காசுகளும், தங்க ஆபரணங்களும் பூமிக்கடியில் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த வெள்ளிக் காசுகள் கி.பி. முதலாம் நூற்றாண்டில் சேலம் மாவட்டத்தில் உரோமானியர்கள் வணிக தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை உறுதி செய்கின்றது.

## சேலம் வட்டம்

**உத்தமசோழபுரம்**

இவ்வூர் திருமணிமுத்தாற்றில் மேற்கு கரையில் அமைந்துள்ளது. இவ்வூர் சோழர் காலத்தில் பெருவழியில் அமைந்துள்ளதால் முக்கிய வியாபார தளமாகவும், சோழர் காலத்தில் இவ்வூருக்கு "கரப்புரம்" என்றும் "மேல்தலை காவிரிப்பூம்பட்டிணம்" என்றும் பெயர் இருந்துள்ளது. இங்குள்ள கரபுரநாதர் கோயிலில் வெவ்வேறு காலத்தைச் சார்ந்தக் கல்வெட்டுகள் உள்ளது. கி.பி.1027-இல் சோழன் முதலாம் இராசேந்திரன் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகளும், கி.பி.16-ஆம் நூற்றாண்டு விசயநகரர் கிருஷ்ண தேவராயர் காலத்துக் கல்வெட்டுகளும், இக்கல்வெட்டுகளில் ஒன்றில் உள்ளூர் "உத்தம சோழன் செட்டி" வியாபாரி இக்கோயிலுக்கு அளித்த கொடையைப் பற்றியும், அரசர்கள் அளித்த கொடையைப் பற்றியும் கல்வெட்டுச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

**சீரகப்பாடி**

இவ்வூர் சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊராகும். இவ்வூரில் குன்றின் மேல் பழநியாண்டவர் கோயில் உள்ளது. இக்கோயிலில் கி.பி.1247 காலத்தைச் சார்ந்த சோழர் மூன்றாம் இராசராசன் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டுச் செய்தியானது சேலம் நாட்டு சீரகபாடியில் "மாணிக்கன்" என்பவர் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடையைப் பற்றியும், ஏரிப்பாசனம் தண்ணீர் செல்லும் நிலங்கள் பற்றியும் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.



**வீரபாண்டி**

இவ்வூர் திருமணிமுத்தாற்றின் மேற்கு கரையில் அமைந்துள்ளது. வீரபாண்டி என்ற பெயர் பாண்டிய மன்னன் வீரபாண்டியன் என்பவரின் பெயரில் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்றும் இவ்வூரில் வரலாற்றுக் கால ஏரி ஒன்றும் உள்ளது. இங்கு நடுகல் மற்றும் சதிக்கல் ஒன்றும் உள்ளது. இவ்வூரில் போர் வீரன் ஒருவன் வீரபாண்டியனிடம் போரிட்டு இறந்து போனான். இவனுக்கு ஒரு நடுகல் புடைப்புச் சிற்பமும் இறந்து போன வீரனின் மனைவி உடன்கட்டை ஏறி தீப்பாய்ந்ததால் இவள் நினைவாக தீப்பாய்ஞ்ச அம்மன் கோயில் ஒன்றும் உள்ளது. மேலும் இவ்வூரில் வரலாற்றுச் சின்னங்களாக ஆணைக்கால் அம்மன், தர்மராச கோயில், பெருமாள் கோயில், மாரியம்மன் கோயில், விநாயகர் கோயில் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

**சித்தர் கோயில்**

இவ்வூர் சேலம் நகரின் தென் மேற்கே அமைந்துள்ளது. இங்கு சித்தர் கோயில் கஞ்ச மலையில் சுமார் 3000 அடி உயரத்தில் உள்ளது. உள்ளூர் மக்கள் இம்மலையை அம்மாசி மலை என்றும் சித்தர் கோயிலை அம்மாசி கோயில் என்றும் அழைக்கின்றனர். இம்மலையில் வாழ்ந்த சித்தர் ஒருவரின் பெயர் சித்தேஸ்வரர். இவர் பெயராலே இக்கோயில் சித்தர் கோயில் என்று அழைக்கப்படுகின்றது. இக்கோயில் உள்ள கஞ்ச மலையிலிருந்து மருத்துவ குணமுள்ள பல சுணை நீர் ஓடைகள் வருகின்றது. இங்கு பக்தர்கள் புனித நீராடுவது குறிப்பிடத் தகுந்த செய்தியாக உள்ளது.

**அன்னதானப்பட்டி**

இவ்வூர் சேலம் தென்மேற்குப் பகுதியில் திருமணி முத்தாற்றில் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. அன்னதானப்பட்டி

என்ற பெயர் "ஆனந்தரிப்பட்டி" (Andheripatti) என்ற பெயரிலிருந்து அன்னதானப்பட்டி என்று மருவி வந்ததாக கூறுகின்றனர். இப்பகுதியில் திரௌபதி அம்மன் கோயில், மாரியம்மன் கோயில் வரலாற்றுச் சின்னங்களாக உள்ளது.

## ஓமலூர் வட்டம்

### கருப்பூர்

இவ்வூர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊராகும். இவ்வூரில் வரலாற்றுச் சின்னங்களாக கைலாசநாதர் கோயில், பெருமாள் கோயில், மாரியம்மன் கோயில், விநாயகர் கோயில் வரலாற்று சின்னங்களாக உள்ளது. இங்குள்ள கைலாசநாதர் கோயிலில் கி.பி.16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வீரன் மற்றும் அவரது மனைவியும் நடுகல் சிற்பமாக பரிவார தெய்வமாக திருச்சுற்றில் உள்ளது. மேலும் கைலாசநாதர் கோயிலில் (கி.பி.1244) மூன்றாம் இராசராசன் காலத்துக் கல்வெட்டும் போசல அரசர் வீரராமநாதனின் (கி.பி.1269) காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகளும் உள்ளது. இக்கல்வெட்டுகளில் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடையைப் பற்றிய செய்திகள் குறிப்பிடப்படுகின்றது.

### அம்மன்கோவில்பட்டி

இவ்வூரில் கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்பிராமி கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு பண்டைய தமிழ் எழுத்து அமைப்பு, வளர்ச்சி மற்றும் அன்றைய சமூக நிலையை அறிந்து கொள்வதற்கும் தமிழ் அறிஞர்களுக்கும், வரலாற்று ஆசிரியர் களுக்கும் பெரிதும் சான்றாக இருந்து வழிகாட்டியாக உள்ளது.

### அமரர்குந்தி

இவ்வூர் கட்டி முதலிகள் ஆட்சி காலத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊராக இருந்துள்ளது. இங்கு வரலாற்று சின்னங்களாக சண்டேஸ்வரர் கோயில், விநாயகர் கோயில், வீரேசுவரர் கோயில் உள்ளது குறிப்பிடத் தகுந்தவையாகும். சண்டேஸ்வரர் கோயில் கல்வெட்டில் அமரர்குந்தி சௌடேஸ்வரி அம்மன் கோயில், சேலம் குகையில் வாழ்ந்த திருமலை செட்டியார்



என்பவர் புதுப்பித்து கொடுத்ததைப் பற்றிய கல்வெட்டு செய்தியுள்ளது. மேலும் தேவர் அடியாள் கிணறு ஒன்றும், இதன் அருகில் கல்தொட்டி ஒன்றும் உள்ளது. இக்கல்வெட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தக் கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டுச் செய்தியானது இவ்வூரின் சாமக்கவுண்டன் மகன் மாராயக் கவுண்டன் கல்தொட்டியை அமைத்து கொடுத்ததைப் பற்றிய கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றது.

### தசவிளக்கு

இவ்வூர் ஓமலூர் வட்டத்தில் பழமையான ஊராகும். இங்கு வரலாற்று சின்னமாக சிவன் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலில் குமுதப்படையில் கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியன் இரண்டாம் சடையவர்மன் காலத்துக் கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டுச் செய்தியானது பூவானி நாட்டின் தசவிளக்கு கிராமத்தில் வெள்ளாளர் கண்ணந்தை குளத்தைச் சார்ந்த பெருமாள் கவுண்டர் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடை பற்றிய செய்தியுள்ளது.

### இலவம்பட்டி

இலவம்பட்டி தாரமங்கலத்திற்கு தெற்கில் அமைந்துள்ளது. இவ்வூரில் "கன்னிமார் பாழி" என்ற பாறையில் கி.பி. 1655-இல் தமிழ் கிரந்தம் எழுத்து கலந்தக் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டில் திருமலை நாயக்கர் மன்னர் ஆட்சியின்போது தாரமங்கலத்தை ஆட்சிசெய்த இம்முடிகட்டி முதலி என்ற சிற்றரசன் தாரமங்கலம் கைலாசநாதருக்கு "இளவம்பட்டி" என்ற ஊரைத் தானமாக அளித்ததைப் பற்றியக் கல்வெட்டுச் செய்தி உள்ளது.

### டேனீஷ்பேட்டை

ஓமலூர் வட்டத்தில் 1956-இல் "டேனிஷ்மேரி" என்ற அம்மையார் பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்து பல சமூக தொண்டுகளை செய்து வந்துள்ளார். இவருடைய தொண்டின் ஞாபகமாக இப்பெயர் பெற்றிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். மேலும் இவ்வூரில் இராமமூர்த்தி நகர் அருகில் பெரிய ஏரி உள்ளது. இந்த ஏரியின் மதகு அருகில் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டுச் செய்தியானது ஸ்ரீ இடங்கில் புலியார்

மகன் "நல்லி" என்பவர் இந்த ஏரிக்கு மதகை அமைத்து கொடுத்தான் என்ற செய்தி அறியப்படுகின்றது.

**தாரமங்கலம்**

இவ்வூர் வரலாற்று சிறப்பு வாய்ந்த ஊராகும். இங்குள்ள கைலாசநாதர் கோயில் தமிழ் நாட்டின் கட்டட கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. தாரமங்கலம் என்பதன் பொருள் பிராமணர்களுக்காக உருவாக்கப்பட்ட ஊர் என்றும் அவர்களுக்கு தானமாக அளிக்கப்பட்ட ஊர் என்றும் பொருள் கூறுகின்றனர். தாரை என்றால் புனிதமான நீர் தீர்த்தம் என்றும், தேவி சிவகாமி அம்மையாரை சிவபெருமானுக்கு தாரைவார்த்துக் கொடுத்த இடம் என்று மற்றொரு பொருளும் உண்டு. இங்கு வரலாற்றுச் சின்னங்களாக கைலாசநாதர் கோயில், ஆலடி விநாயகர் கோயில், பத்ரகாளியம்மன் கோயில், ஏகாம்பரேஸ்வரர் கோயில், கன்னிமார் கோயில், மாரியம்மன் கோயில், முனியப்ப சுவாமி கோயில், வரதராசசுவாமி கோயில், வேலாயுதசாமி கோயில் போன்ற கோயில்கள் உள்ளது. தாரமங்கலத்தைச் சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் மேட்டூர், ஓமலூர், சங்ககிரி, எடப்பாடி வட்டங்கள் உள்ளது. கி.பி. 1280-இல் மைசூர் மன்னர்கள் பின்னர் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் ஆட்சி ஆளுமைக்கு கீழும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் விசயநகரர் ஆட்சிக்கு பின்னர் மதுரை நாயக்கர் ஆட்சியும் பின்னர், கட்டிமுதலிகள் ஆட்சியும் மற்றும் விசயநகர அரசு பிரதிநிதிகள் சிக்கன்ன தேவராயர்கள் ஆட்சியின் கீழும் இருந்துள்ளது. மற்றும் மூன்றாம் மைசூர் போருக்குப்பின் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி பொருப்பில் வந்துள்ளது.

**ஓமலூர்**

இவ்வூர் ஓமலூர் என்ற பெயர் ஹோமம் (ஹோம குண்டம்) என்ற பெயரிலிருந்து வந்ததாகவும், "வாமணன்" என்ற பெயரிலிருந்து "ஓமனன்" என்று மருவி வந்தது என்றும் செவிவழி செய்திகள் கூறுகின்றது. மேலும் பாளையக்காரர்களின் ஆட்சிக் காலத்தில் "ஆமலூர்" என்ற பெயர் நிர்வாகத்திற்காக பிரிக்கப்பட்டு வைக்கப்பட்ட பெயராகும் என்றும் மேலும் "ஓமனர்" என்பது ஜைனமதத்தினருடன் தொடர்புடைய ஊர் என்று கூறுகின்றனர். மேலும் இவ்வூர் மைசூரிலிருந்து தொப்பூர் கணவாய் வழியாக



மதுரை, கொங்கு நாடுகளுக்கு செல்லும் பெருவழியில் உள்ள ஊர் அதனால் மைசூர் மன்னர்கள். ஹைதர் அலி, திப்புசுல்தான் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் மாறிமாறி வந்துள்ளது. இங்கு சரபங்க என்ற ஆறு ஓடுகிறது. பழமையான கோட்டையும் இவ்வூரில் இருந்துள்ளது. கட்டிமுதலி களின் ஆட்சிக் காலத்தில் இக்கோட்டை புதுப்பிக்கப்பட்டு படைகலன்களின் இருப்பிடமாக இருந்துள்ளது.

## சங்ககிரி வட்டம்

**இடங்கண்ண சாலை**

"இடங்கனம்" என்பதன் பொருள் ஒரு வகை உலோகம் கிடைக்கும் இடம் என்றும், மற்றொரு பொருள் இலங்கடார் என்பவர் சாலை இருந்த ஊர் என்று கூறுகின்றனர். இவ்வூரில் வரலாற்றுச் சின்னங்களாக சௌந்திரராச பெருமாள் கோயில், விநாயகர் கோயில், அம்மன் கோயில் உள்ளது. இங்குள்ள பெருமாள் கோயில் சுவரில் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு கி.பி.14-ஆம் நூற்றாண்டு, கொங்குராச தேவர் என்ற அரசரின் காலத்தைச் சார்ந்தவையாகும். மேலும் இக்கல்வெட்டு செய்தியானது. உள்ளூர் வெள்ளாளர்களும், வாணியர்களும் அளித்த கொடையைப் பற்றிக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

**இளம்பிள்ளை**

இவ்வூர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊராகும். இவ்வூர் கட்டிமுதலி அரசன் இளமான கட்டிமுதலி காலத்தில் உருவாகியுள்ளது. மற்றொரு கருத்து "களங்கை சித்தர்" காலத்தில் உருவானது என்ற கருத்தும் உள்ளது. இங்கு வரலாற்றுச் சின்னங்களாக சௌடேஸ்வரி அம்மன் கோயில், படைவெட்டி அம்மன் கோயில், மாரியம்மன் கோயில் ஆகியவை உள்ளன.

**மாசிநாயக்கன்பட்டி**

இவ்வூர் "மாசிநாயக்கன்" என்ற பாளையக்காரர் நினைவாக உருவாகியுள்ளது. இந்த மாசிநாயக்கன் அயோத்தியாபட்டினம் கோதண்ட ராமசுவாமி கோயிலைக் கட்டியுள்ளார் என்பது ஆய்வின் போது தெரியவந்துள்ளது.

### மூக்குத்திபாளையம்

இவ்வூர் "சுந்தை வேட்டுவன்" கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் உருவாக்கினான் என்றும், இவன் வரலாற்று ஆவணங்களில் "ஏழுகரை நாட்டு" "அக்கசாலை கங்கை" என்று குறிப்பிடுகின்றனர். அக்கசாலை என்பதன் பொருள் நாணயங்கள் அச்சடிக்கும் இடமாகும். இதனை அடுத்து "அக்கசாலை நல்லூர்" என்று ஊர் உள்ளது குறிப்பிடத் தகுந்தவையாகும். இங்கு பெரிய விலாங்கை என்ற ஏரியும் உள்ளது.

### மோளூர்

இவ்வூரில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து வெள்ளாளர் சமூகத்தைச் சார்ந்த கவுண்டர் பிரிவுகள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். இங்கு வரலாற்று சின்னங்களாகச் சென்றாய பெருமாள் கோயில், நல்லப்புள்ளி அம்மன் கோயில், பங்கஜவள்ளி அம்மன் கோயில் உள்ளது. மற்றும் மோரூர் மலையில் வரலாற்று கால கோட்டை அழிந்தநிலையில் உள்ளது குறிப்பிடத் தகுந்தவையாகும்.

### வைகுந்தம்

இவ்வூர் வைகுந்தம் வைணவ ஸ்தலமாகும். இவ்வூரில் வரலாற்றுச் சின்னங்களாக லட்சுமிநாராயணப் பெருமாள் கோயில், செல்லிஅம்மன் கோயில், வாகீஸ்வரர் கோயில், பொம்மக்கா கோயில் உள்ளது. இவற்றுடன் மலையின் மேல் விஷ்ணு கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயிலாக நடைமுறையில் உள்ளது.

### காடையாம்பேட்டை

இவ்வூர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊராகும். இதன் பழமையான பெயர் "பொன்னார்கூடல்" ஆகும். இவ்வூர் பொன்னி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. மேலும் பழமையான சிவன் கோயில் ஒன்று இங்கு இருந்துள்ளது. இக்கோயிலுக்கு காடேஸ்வரர் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. மற்றொரு வரலாற்றுச் சின்னமாக விஷ்ணு கோயில் உள்ளது குறிப்பிடத் தகுந்தவையாகும்.



## மேட்டூர் வட்டம்

### காவிரிபுரம்

இவ்வூர் மேட்டூர் வட்டத்தில் காவிரியாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. இது சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட ஊர் என்றும், வெள்ளாளர்களும், செட்டியார் சமூகத்தினரும் வரலாற்று காலம் முதல் இங்கு தலைவர்களாக இருந்து வந்துள்ளனர். காவிரிப்புரத்திற்கும், கிழக்கு கடற்கரையில் உள்ள காவிரிப் பூம்பட்டினத்திற்கும் வரலாற்று காலத்தில் தொடர்பு இருந்ததாக செவிவழி செய்திகள் கூறுகின்றது. மேலும் மைசூர் அரசர்கள் ஹைதர் அலி, திப்புசுல்தான் மைசூர் போரில் இங்குதான் படைக்கலன்களை நிறுத்தி போர் புரிந்துள்ளனர். மேலும் இவ்வூரில் பழமையான கோட்டை இருந்துள்ளது. மற்றும் வரலாற்று சின்னங்கள் இருந்து அழிந்துள்ளது.

### வனவாசி

இவ்வூர் வரலாற்றுக் கால ஊராகும். இவ்வூர் வரலாற்றில் "பனவாசி" என்றும் "வீரசோழநல்லூர்" என்றும் அழைக்கப்படுகிறது. புனவாசி என்ற பெயர் "வனவாசி"யாக மாறியுள்ளது என தொல்லியல் ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். மேலும் மகாபாரத பாண்டவர்கள் இங்கு வந்து தங்கியதாகவும், இதன் பெயரால் வனவாசம் என்பதற்கு பதிலாக வனவாசி என்று பெயர் மாறியுள்ளது. வரலாற்றுச் சின்னங்களாக செல்லாண்டி அம்மன் கோயில், மாரியம்மன் கோயில், கொப்பு கொண்ட ராமசுவாமி கோயில், விநாயகர் கோயில் போன்ற கோயில்கள் உள்ளது. மேலும் 1956-இல் பூமிக்கடியிலிருந்து 19 தங்க நாணயங்களும், வெள்ளிக் காசுகளும் கிடைக்கப்பெற்றுள்ளது குறிப்பிடத் தகுந்தவையாகும்.

### பொத்தனேரி

இவ்வூர் பழமையான ஏரியின் பெயர். புத்தன் ஏரி, பிற்காலத்தில் புத்தனேரி என்று மருவி பொத்தனேரியாக மாறியிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். மேலும் பெருங்கற்காலச் சின்னங்களில் காணப்படும் கருப்பு சிவப்பு பானை ஓடுகள் (Black and Red Ware) இங்கு கிடைத்துள்ளது. இன்னும்

இவ்வூரில் பழமையான வரலாற்றுச் சின்னங்களாக வரதராசப் பெருமாள் கோயில், பட்டாத்து அம்மன் கோயில், மாரியம்மன் கோயில் ஆகிய கோயில்கள் இங்கு உள்ளன. இங்கு கன்னட எழுத்துடன் கூடிய வேடக்கல் நடுகல் (Hero Stone) ஒன்றும் உள்ளது குறிப்பிடத் தகுந்தவையாகும்.

**ஜலகண்டபுரம்**

இவ்வூர் மேட்டூர் வட்டத்தில் உள்ள பழமையான ஊராகும். இங்கு ஜலகண்டேஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயிலுக்கு சோழர் காலத்திலும், நாயக்கர் காலத்திலும், கட்டிமுதலி காலத்திலும் நிலங்கள் தானமாக வழங்கப்பட்ட செய்திகள் பற்றிய குறிப்புகள் உள்ளது.

**வீரக்கல்**

இவ்வூரில் நடுகல் (Hero Stone) உள்ளது. இந்த நடுகல்லின் வேறு பெயர் வீரக்கல் ஆகும். ஊர் மக்களுக்காக வீரச்செயல்கள் புரிந்து மரணம் அடைந்த வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் ஆகும். இவ்வூரில் வரலாற்று சின்னங்களாக பத்திரகாளி அம்மன் கோயில், பெருமாள் கோயில்கள் இருப்பது குறிப்பிடத் தகுந்தவையாகும்.

**சோழப்பாடி**

இவ்வூர் பழமையான ஊராகும். இங்கு கட்டிமுதலி காலத்தில் கட்டப்பட்ட கோட்டை, கொத்தளங்கள் இருந்துள்ளது. ஆனால் காலப்போக்கில் அழிந்து ஸ்டேன்லி நீர்த்தேக்கத்தில் மறைந்துள்ளது என்றும் செவிவழி செய்திகள் மூலம் அறியப்படுகிறது.

**மேட்டூர்**

இவ்வூர் காவிரி ஆற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. கிழக்கு இந்திய கம்பெனி, பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் பல தொழிற்சாலைகள், இரயில்வே நிலையம், மற்றும் மேட்டூர் அணை, நீர்ப்பாசனத்திற்காக கட்டப்பட்டுள்ளது குறிப்பிடத் தகுந்தவையாகும்.



**ஆந்திக்கரை**

இவ்வூர் வரலாற்றுடன் தொடர்புடைய ஊராகும். இங்கு வரலாற்று சின்னமாக கரியமாணிக்க பெருமாள் கோயில் உள்ளது. இக்கோயிலுக்கு அருகில் மண்ணால் செய்யப்பட்ட கோட்டைமேடு உள்ளது. இத்துடன் கரியமாணிக்க பெருமாள் கோயிலில் ஜெயின் துறவியின் கற்சிற்பம் உள்ளது. இந்த கற்சிற்பத்தை உள்ளூர் மக்கள் "குறும்பர் சாமி" என்று வழிபட்டு வருகின்றனர்.

**நங்கவள்ளி**

இவ்வூர் வரலாற்று பெருமை வாய்ந்த ஊராகும். இவ்வூரின் பெயர் "நரசிங்க பாலி" என்ற பெயரிலிருந்து வந்திருக்கலாம் என்று கூறுகின்றார்கள். இன்னும் இங்குள்ள குளத்தினை, தாயின் பாலி என்றும், நங்கை பாலி என்றும் அழைத்து வருகின்றனர். இக்குளத்தின் பெயரால் இவ்வூர் "நங்கவள்ளி" என்று அழைக்கப்படுகின்றது. வரலாற்று சின்னங்களாக லட்சுமிநரசிம்ம பெருமாள் கோயில், சிவன் கோயில், அங்காளம்மன் கோயில் ஆகிய கோயில்கள் உள்ளன. இங்கு கால்நடை வளர்ப்பு நிலத்தில் புதிய கற்கால கருவிகள் கிடைத்துள்ளது.

## எடப்பாடி வட்டம்

**பூலாம்பட்டி**

இவ்வூர் காவிரியாற்றின் கிழக்குக் கரையில் அமைந்துள்ளது. கட்டிமுதலி அரசர்கள் காலத்தில், வரதராச பெருமாள் கோயில் மற்றும் கைலாச நாதர் கோயில், அனுமார் கோயில் வரலாற்று சின்னங்களாக உள்ளது குறிப்பிடத் தகுந்தவையாகும்.

**இரும்புலி**

இவ்வூர் திருமணிமுத்தாற்றின் கரையில் உள்ளது. இதன் பெயர்க் காரணம் மாறுப்பட்ட கருத்துக்கள் உள்ளது. (1) இருப்புள்ளி, (2) இலுப்புள்ளி (3) இகம்புலி (4) இருப்பாலி என்ற பெயரிலிருந்து வந்தது என்றும் இருப்பாலி என்பது புத்தமத ஜைன மதத் துறவிகளுடன் தொடர்புடைய பெயர் என்றும் கூறுகின்றனர்.

மேலும் இவ்வூரில் வரலாற்று சின்னங்களாக அத்தனூர் அம்மன் கோயில், பெருமாள் கோயில், காளியம்மன் கோயில், கொண்டத்து அம்மன் கோயில், சிவன் கோயில்கள் குறிப்பிடத்தகுந்தவையாகும்.

**கச்சப்பள்ளி**

இவ்வூர் கச்சப்பள்ளி தெலுங்கு மொழியிலிருந்து "கச்சுழி", கச்சுலு" போன்ற வார்த்தைகள் வளையல் தொடர்புடைய ஊர் என்றும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றது. இவ்வூரில் வரலாற்று சின்னங்களாக ஏகாம்பரேஸ்வரர் கோயில், கஸ்தங்கரிநாதர் கோயில், செல்லாண்டியம்மன் கோயில்கள் உள்ளது.

**எடப்பாடி**

இவ்வூர் எடப்பாடி வட்டத்தின் தலைமையிடமாக உள்ளது. ஆற்காடு முஸ்லிம் மன்னர் மாபூஸ்கான் காலத்து வெள்ளிக் காசுகள் கிடைக்கப்பெற்றது இவ்வூரின் சிறப்பு செய்திகளாகும்.

## ஏற்காடு வட்டம்

**ஏற்காடு**

இவ்வூர் சேர்வராயன் மலையில் உள்ளது. சேலம் நகரின் வடக்குப் பக்கம் இயற்கை அரணாக அமைந்துள்ளது. ஏற்காடு மலைப்பகுதியில் கற்கால கருவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் மலைவாழ் மக்களின் குலதெய்வத்தின் கடவுளின் பெயர். "சோவராயன்" என்று அழைக்கப்படுகிறது. மற்றொரு கோயிலின் பெயர் "இராஜேஸ்வரி அம்மன் கோயில்" குகைக் கோயிலாக உள்ளது. இந்த குகைக் கோயில் மலை உச்சியில் சிறிய வாயிலுடன் கூடிய குகையில் மூலஸ்தானம் உள்ளது. இந்த குகையின் நுழைவாயில் ஏற்காட்டிலும், குகையின் மறுபக்கம் கர்நாடகம் எல்லையான மைசூர் மலைப்பகுதியில் இருப்பதாகவும் மலைவாழ் மக்கள் செவிவழிச் செய்திகளாகக் கூறி வருகின்றனர். மேலும் ஏற்காட்டை மையமாக வைத்து அறுபத்தி ஏழு மலைவாழ் மக்கள் கிராமங்கள் உள்ளது. மேலும் ஏற்காடு வரலாறு தொண்டை மண்டலத்து காஞ்சிபுரத்திலிருந்து தெலுங்கு மொழி பேசும் படைத் தலைவர்கள் மற்றும் அரச வம்சத்தினர் ஏற்காடு பகுதிக்கு வந்து



மலைவாழ் மக்கள் வாழும் பகுதியை ஆட்சி செய்தனர் என்பது செவிவழிச் செய்தியாக அறியப்படுகின்றது. மேலும் கி.பி. 1820-இல் கிழக்கிந்திய கம்பெனியின் "சர் தாமஸ்" ஆட்சியாளராக வந்து பல கட்டுமானப் பணிகளையும், சாலை வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளார். மற்றொரு பிரிட்டிஷ் ஆட்சியாளர் கி.பி.1829-ல் "டேவிட்காக்பன்" (David Cock Bun) என்பவர் பல மலைத் தோட்டங்களான காப்பி தோட்டம், தேயிலை தோட்டங்கள் உருவாக்கி சமூக, பொருளாதார வளர்ச்சியில் பல மாற்றங்களை ஏற்படுத்தினார்.

## வாழப்பாடி வட்டம்

**அயோத்தியாப்பட்டினம்**

சேலம் மாநகரின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந்துக்களின் கடவுளாக இராமர் பிறந்த இடமாகிய அயோத்தி நினைவாக இவ்வூருக்கு அயோத்தியாப்பட்டினம் என்ற பெயர் வந்ததாகவும், இவ்வூரிலிருந்து தான் இராமர் இலங்கையை நோக்கி சென்று இராவணனுடன் போரிட்டு அழித்ததாகவும், அதன் நினைவாக இவ்வூர் அயோத்தியாப்பட்டினம் என்று பெயர் வந்ததாக செவிவழிச் செய்திகள் கூறுகின்றது. மேலும் இவ்வூரில் கோதண்ட இராமர் கோயில் உள்ளது. இக்கோயில் நாயக்க அரசர்களால் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் நுழைவு வலது இடப்புறம் பிற்காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் உள்ளது. மேலும் இவ்வூரின் மையப் பகுதியில் அனுமார் கோயில் வீதியில் குத்துக்கல் ஒன்று உள்ளது. இக்கல்லில் தேய்ந்த நிலையில் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டுச் செய்தியானது ஆளநற்த வருஷம் என்று ஆரம்பித்து "சீதாராமன் செட்டி" என்பவர் பற்றியச் செய்தியும் உள்ளது. இக்கல்வெட்டுச் செய்தி முழுமையாக அறிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளது.

**குறிச்சி**

வாழப்பாடி வட்டத்தில் அறநூற்று மலைச் செல்லும் சாலையில் பேளூருக்கு அருகில் உள்ளது. இவ்வூரில் காளியம்மன்

கோயிலுக்கு அருகில் குத்துக்கல்லில் நாயக்கர் காலத்தைச் சார்ந்த கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டில் கொண்டப்ப நாயக்கர் ஆட்சியில் குறிச்சி கிராமத்தை பேளூர் தோனீஸ்வரர் கோயிலுக்கு தானமாக அளிக்கப்பட்டதைப் பற்றி கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகின்றது.

**புழுதிக்குட்டை**

இவ்வூர் அடர்ந்த மரம், செடி, கொடிகள் உள்ள அறநூற்று மலையின் அடிவாரத்தில் உள்ளது. வரலாற்றுச் சின்னங்களாக கரியராமர் கோயில், மற்றும் அம்மன் கோயில் உள்ளது. கரியராமர் கோயில் முன்புறம் உள்ள உரல் கல்லில் வட்டெழுத்து கல்வெட்டு தேய்ந்த நிலையில் உள்ளது.

**வாழப்பாடி**

இவ்வூர் வரலாற்று காலத்தில் பண்டைய பெருவழியில் உள்ள ஊராகும். இந்தியாவின் மேற்கு கடற்கரை, பாலக்காட்டு கணவாய், பேரூர், கோவை, அவிநாசி, சேலம், ஆத்தூர், ஆறகளூர் கிழக்கு கடற்கரை காஞ்சிபுரம் செல்லும் மகதேசன் பெருவழியில் உள்ள ஊராகும். தாவளமும், வியாபாரிகள் தங்கி வியாபாரம் செய்யும் இடமுமாக இருந்துள்ளது என்பதைக் கல்வெட்டுகள் செய்திகள் உணர்த்துகின்றது.

**மாசிநாயக்கன்பட்டி**

இவ்வூர் நாயக்க மன்னர்களில் மாசிநாயக்கன் என்னும் குறுநில அரசன் பெயரால் தோன்றியுள்ளது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த மாசிநாயக்கன் அரசன் அயோர்த்தியாப்பட்டனம் "கோதண்டராமா" கட்டியுள்ளார் என்றும், அயோத்தியாப்பட்டினத்திற்கு வரலாற்று காலத்தில் "மாசி நாயக்கன்பட்டி" என்ற பெயர் அழைக்கப்பட்டது என்றும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றது.

**பேளூர்**

வாழப்பாடி வட்டத்தில் உள்ள பழமையான ஊராகும். இவ்வூரில் வரலாற்றுக் கால தான்தோன்றீஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயில் சோழ அரசர்களின் கல்வெட்டுகள், விசயநகர



அரசர்களின் கல்வெட்டுகள், நாயக்கர் கால கல்வெட்டுகள் உள்ளது. இக்கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடைப் பற்றிய செய்திகள் அறிய உதவுகின்றது. மேலும் இவ்வூரின் வடக்கு பகுதிகள் கோட்டையாக இருந்துள்ளது. தற்பொழுது இந்த கோட்டை இடிக்கப்பட்டு விவசாய நிலமாக உள்ளது. மேலும் வரலாற்றுக் கால ஏரி உள்ளது குறிப்பிடத்தகுந்தச் செய்தியாக உள்ளது.

# கல்வெட்டுச் செய்திகளும் இருப்பிடமும்

சேலம் மாவட்டத்தில் பெரும்பாலான கல்வெட்டுகள் கோயில் களிலும், சில கல்வெட்டுகள் மலைப்பாறைகளிலும், ஏரியின் மதகுகளின் அருகில் பலகை கல்லிலும், தண்ணீர் வெளிச் செல்லும் தூம்புகளிலும், நடுகல்லிலும், ஒரு சில ஊர்களில் குத்துக் கல்லிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றது. சேலம் மாவட்டத்தில் எல்லா வட்டங்களிலும் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளது. இம்மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது. ஓமலூர் வட்டத்தில் அம்மன்கோயில்பட்டி என்ற கிராமத்தில் பாறையில் கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் பிராமி கல்வெட்டாகும்.

இம்மாவட்டத்தில் சேர அரசர்களின் ஆட்சிக் கால கல்வெட்டு களும், சோழர்களின் கல்வெட்டுகளிலும், பாண்டியர் ஆட்சிக் கால கல்வெட்டுகளும், விசயநகர அரசர்கள் கால கல்வெட்டுகளும், ஒய்சாளர்களின் காலக் கல்வெட்டுகளும், கொங்குச் சோழர்களின் கல்வெட்டுகளும், கொங்கு பாண்டியர்களின் கல்வெட்டுகளும், மற்றும் குறுநில மன்னர்கள், நாயக்கர்கள் கால கல்வெட்டுகளும் கட்டிமுதலி ஆட்சிக் கால கல்வெட்டுகளும் ஏராளமாக கிடைத்துள்ளது.

சோழ அரசர்களில் முதலாம் இராசேந்திரன் ஆட்சிக் காலத்துக் கல்வெட்டுகள் ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தில் நாமக்கல் வட்டம், கூலிப்பட்டி குத்துக்கல்லிலும், கதிராநல்லூர் சிவன் கோயிலிலும் இவர்களுடையக் கல்வெட்டுகள் உள்ளது. மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்துக் கல்வெட்டுகள் கெங்கவள்ளி வட்டம் தெடாவூர் ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் கல்வெட்டுகள் உள்ளது. இந்த கல்வெட்டுகளில் இவர்கள் மெய்க்கீர்த்திகள், ஆட்சியாண்டு, சமூக நெறிமுறைகள் பற்றிய செய்திகள் குறிப்பிடத்தகுந்தவையாகும்.



**பாண்டியர்கள் கல்வெட்டுகள்**

சேலம் மாவட்டத்தில் பாண்டியர்களின் கல்வெட்டுகள் அதிக அளவில் கிடைக்கின்றது. பாண்டியர்கள் கல்வெட்டுகளில் முதன்மையான கல்வெட்டு பாண்டியன் முதலாம் சடையவர்மன் சுந்திரபாண்டியன் கல்வெட்டாகும். இம் மன்னனின் காலம் கி.பி. 1256 ஆகும். சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் கோப்பரகேசரி வர்மன் காலத்து கல்வெட்டில் "கிளி வண்ணமுடையார்க்கு" நந்தா விளக்கு எரிக்க பொன் கொடை அளித்தமைப் பற்றி குறிப்பிடு கின்றது. தாரமங்கலத்து கைலாசநாதர் கோயிலில் சுந்தர பாண்டியன் கல்வெட்டு, இரண்டாம் சுந்தரவர்மன் கல்வெட்டு, ஐந்தாம் சடையவர்மன் சுந்தரன் கல்வெட்டுகள் உள்ளது. இக்கல்வெட்டுகளில் இவர்களுடைய மெய்க்கீர்த்திகள், ஆட்சி யாண்டு, கோயில்களுக்கு அளிக்கப்பட்ட கொடையைப் பற்றியச் செய்திகள் தெரியவருகின்றது.

**விசயநகரர் அரசர்களின் கல்வெட்டுகள்**

விசயநகரர் அரசர்களின் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் சேலம் ஆத்தூர் வட்டம், ஆறகளூர் கிராமத்தில் திருகாமீஸ்வரர் கோயிலிலும், கரிவரதராசர் கோயிலிலும், தாரமங்கலத்து கைலாசநாதர் கோயிலிலும், தம்மம்பட்டி பெருமாள் கோயிலிலும் இவர்கள் காலத்துக் கல்வெட்டுகள் மிக அதிக அளவில் உள்ளது. இவர்கள் காலத்துச் சிறப்புக்குரிய கல்வெட்டு ஒன்று வரதராச பெருமாள் கோயிலில் உள்ள இக்கல்வெட்டு கிருஷ்ணதேவராயர் ஆட்சியாண்டில் கி.பி. 1519-இல் கோயில் திருப்பணி, நற்காரியங்கள் செய்தமைக்காக ஸ்தானிகர்கள் மூன்று பேருக்கு அரசர் பொன்னாடை அணிவித்து அவர்களை சிறப்பித்து வாழ்த்தி யுள்ளார் என்ற செய்தி குறிப்பிடத் தகுந்தவை யாகும். இவர்கள் காலத்தில் சேலம் மாவட்டத்தில் பல பெரிய திருக்கோயில்கள் புணரமைக்கப்பட்டு கோயில் நிர்வாகம், நன்கொடைகள், மானியம் போன்ற முறைகள் நல்ல முறையில் இருந்துள்ளது என்பது கல்வெட்டுச் செய்திகள் மூலம் அறியப்படுகின்றது.

**ஒய்சாளர்கள் கல்வெட்டுகள்**

ஒய்சாள மன்னர்கள் கல்வெட்டுகள் ஆறகளூர் திருகாமீஸ்வரர் கோயிலிலும், கரிவரதராசர் கோயிலிலும் தாரமங்கலம் கைலாசநாதர்

கோயிலிலும் கல்வெட்டுகள் உள்ளது. இவர்கள் காலத்திலும் சேலம் மாவட்டக் கோயில்கள் பல புணரமைக்கப்பட்டு திருப்பணிகள் நடைபெற்றுள்ளது. சேலம் மாவட்ட கல்வெட்டுகளில், கொங்கு சோழர்களின் கல்வெட்டுகள் ஒருசில மட்டுமே உள்ளது.

சேலம் மாவட்டக் கல்வெட்டுகள் மூலம் சேலம் மாவட்டத்தினை, தஞ்சை சோழர்கள், மதுரை பாண்டியர்கள் இவர்களின் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. இவர்களுடன் சோழர், பாண்டியர்களுக்கு கீழ்ப்படிந்த கட்டிமுதலி வம்சத்தினர் போன்ற சிற்றரசர்களும் ஆட்சிபுரிந்துள்ளனர். கொங்கு நாட்டின் காவிரியாற்றுக்கு மேற்கே கொங்குச் சோழர்களும் மற்றும் கொங்கு பாண்டியர்களும் ஆட்சி புரிந்துள்ளனர். காவிரி ஆற்றுக்கு கிழக்கே தஞ்சை சோழர்களும், மதுரை பாண்டியர்களும் இடையிடையே விசய நகர பேரரசுகளும். ஒய்சாளர்களும் தனது பங்கிற்கு சிறிது காலம் ஆட்சிபுரிந்துள்ளார்கள் என்பதை கல்வெட்டுகள் மூலம் அறியப்படுகின்றது. இந்த மன்னர்களின் ஆட்சி காலம், ஆட்சிப் பரப்பு, சமூக நிலை போன்றவற்றை அறிந்துகொள்ள பெரிதும் துணையாக நிற்கிறது.

**தாரமங்கலம் கெட்டிமுதலி கல்வெட்டுகள்**

தாரமங்கலம் பகுதி கெட்டிமுதலிகள் என்ற மரபினர் கட்டி முதலிகளாக ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் சமகாலத்து பேரரசுகள் விசயநகர அரசர்களுக்கும், ஒய்சாளர்களுக்கும், பாண்டியர்களுக்கும் பணிந்து, கப்பம் கட்டியும் சிற்றரசாக ஆட்சி புரிந்துள்ளனர், தாரமங்கலம் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டின் 24 பிரிவுகளில் இவ்வூர் கொங்கன வீரசோழ மண்டலத்தில் வடபூவாணி நாடு பிரிவாக இருந்து வந்துள்ளது. இந்த செய்தியானது தாரமங்கலத்து கைலாசநாதர் கோயில் கல்வெட்டில் கொங்கன வீரசோழ மண்டலத்து வடபூவாணி நாட்டு தாரமங்கலம் என்று குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு விசயநகர அரசர்கள் அச்சுதராயர், சதாசிவராயர் ஆட்சி காலத்துக் கல்வெட்டாகும். இந்த கல்வெட்டில் "வணங்கா முடி கட்டிமுதலி" என்பவர் பெயர் வருகின்றது. இந்த வணங்காமுடி கட்டிமுதலி விசயநகரர் ஆட்சியின்போது தாரமங்கலத்தை தலைநகராகக் கொண்டு குறுநில சிற்றரசை ஆட்சி புரிந்தவா் என்பது



அறியப்படுகின்றது. இந்த வணங்காமுடி கட்டி முதலியும், இவனுடைய வழிவந்தவர்கள் வண்ணத்தடுக்கும், புலிக்கொடியும் உள்ள வணங்காமுடி முதலியார் இன்னும் நல்லுடையார், கோட்டை முதலியார் "இம்முடி கட்டி முதலியார்" போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவார்கள். வணங்காமுடி கட்டிமுதலி மரபினர் சங்க இலக்கியங்களிலும் குறிப்பிடுகின்றனர். இவர்களை தொண்டை மண்டலத்து வேளாளர் மரபினர் எனவும், மற்றொரு கருத்து இவர்கள் கொங்கு நாட்டைச் சார்ந்த கொங்கு வேளீர் என்றும் இன்னும் ஒரு கருத்து அவர்கள் உள்ளூர் கவுண்டர்களின் ஒரு பிரிவினர் என்றும் ஆய்வாளர்கள் கருத்தை தெரிவிக்கின்றனர். ஆனால் தாரமங்கலக் கைலாசநாதர் கோயில் கல்வெட்டுகளில் இந்த கட்டிமுதலிகள் வெள்ளாளர் நிலக்கிழார், வணங்காமுடி முதலியார் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இன்னும் ஒரு கருத்து இவர்கள் வேளாளர் மரபினர் என்றும் கூறுகின்றனர். இவர்களைப் பற்றிய கல்வெட்டுகள் இவர்களுக்கு "மஸதகுடோரி", "மகுட சூடாமணி", "வண்ணத் தடுக்கும் வாடா மாலையும், புலிக்கொடியும் உள்ள வணங்காமுடி முதலியார்" என்ற பல்வேறு பட்டங்கள் சூட்டப்பட்டுள்ளது. இந்த கட்டிமுதலிகள் தாரமங்கலத்தை சுற்றியுள்ள கிராமங்களில் நீர்ப்பாசன ஏரிகளையும், குளங்களையும் செய்வித்து நீர் ஆதாரங்களை பெருக்கியுள்ளனர். விவசாயம் தழைத்தோங்கி சமூக பொருளாதார மாற்றங்களை செய்துள்ளனர். பல ஊர்களில் கோயில்களைக் கட்டியும், பழைய கோயில்களை புணரமைத்து குடமுழுக்கும், திருப்பணிகளையும் செய்துள்ளனர். தாரமங்கலம் கைலாயநாதர் கோயில் இவர்களுக்கு குலதெய்வ கோயிலாக இருந்துள்ளது. இக்கோயிலுக்கு கணக்கிலடங்கா பொன்னையும், நிலங்களையும் தானமாக அளித்து கோயில் நடைமுறைகளை கட்டிகாத்து வந்துள்ளனர். இக்கட்டிமுதலிகள் சிதம்பரம் நடராசரை வணங்கியபின் அங்கு தங்குவதற்கு சிதம்பரத்தில் "வணங்காமுடி" என்னும் மடத்தினையும், சத்திரங்களையும் கட்டி கடவுள் திருப்பணி செய்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை கல்வெட்டுச் செய்திகள் மூலம் அறியப்படுகின்றது.

**முக்கிய கல்வெட்டு உள்ள ஊர்கள்**

**ஆத்தூர் வட்டம்**

1. ஆறகளூர்
2. ஆத்தூர்
3. நரசிங்கபுரம்
4. தியாகனூர்
5. கருமந்துறை
6. கல்பகனூர்

**கெங்கவள்ளி வட்டம்**

1. தெடாவூர்
2. வீரனூர்
3. புளியங்குறிச்சி
4. தம்மம்பட்டி
5. செந்தாரப்பட்டி
6. உலிப்புரம்
7. பில்லாமதில்

**ஓமலூர் வட்டம்**

1. தாரமங்கலம்
2. சோரகை
3. சக்கரை செட்டிபட்டி
4. டேனிஷ் கோட்டை
5. அமரர் குந்தி
6. அம்மன் கோயில் பட்டி
7. கோபிநாதப்புரம்
8. தசவிளக்கு
9. இலவம்பட்டி
10. கருப்பூர்

**வாழப்பாடி வட்டம்**

1. பேளூர்
2. செக்கடிப்பட்டி



3. குறிச்சி
4. அயோத்தியாபட்டினம்

**சேலம் வட்டம்**

1. உத்தமசோழபுரம்
2. சீரகபாடி
3. சேலம்
4. பனமரத்துப்பட்டி
5. சித்தர்கோயில்
6. குமாரசாமிபட்டி
7. சுக்கம்பட்டி
8. வீராணம்

**எடப்பாடி வட்டம்**

1. மேச்சேரி
2. நங்கவள்ளி

**சேலம் மாவட்டத்தில் உள்ள முக்கிய கல்வெட்டுகள் சில:**

**சேலம் வட்டம்**

**ஊர் : உத்தமசோழபுரம்**
பெருமாள் கோயில் மேற்கு வயலிலுள்ள பாறையில் கல்வெட்டு உள்ளது.

அரசர் : விசயநகரர், கிருஷ்ண தேவராயர்

காலம் : கி.பி.1516

மொழி : தமிழ்

**கல்வெட்டுச் செய்தி**

உத்தமசோழ செட்டி மகன் ஆதித்ததேவசெட்டி என்பவர் மேல்தலைக் காவிரிப்பூம்பட்டினமாகிய சேர நாட்டு உத்தம சோழபுரத்து அழகிய பெருமாளுக்குத் திருநாள் மற்றும் விழாக்களுக்கு அவ்வூரில் உள்ள குடிகள் மீதான தறிவரி, மனை வரி முதலியவற்றுடன் முத்திரைக் காசுகள் மானியமாக கொடுத்தமை பற்றிக் கூறுகின்றது.

**கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ மஹாப்ரதாப கிருஷ்ணராயற்கு செல்லா
2. நின்ற சகாத்தம் 1438-இன் மேல் செல்லா நின்ற தாதுவருஷம் கார்த்திகை மாதம் 20
3. சேல நாட்டு உத்தமசோழச் செட்டி முதலியப் பள்ளி உடையான் இளைய நயினார்
4. செட்டியார் ஆதிச்சதேவ செட்டியார் சேர நாட்டு உத்தமசோழபுரம் ஆன மேல்
5. தலைக்காவேரிப்பூம்பட்டினத்து அழகிய பெருமாளுக்
6. கு திருநாள் இல . . வைக்க உத்தமசோழபுரத்தில் குடி இருக்
7. கிற திரு . . தம்பிராரு . . குடிகளுக்குத் தறிக்கடமை மனைவரி
8. ஆயத்துக்கு உண்டான சமூ ..க்கும் முத்திரைக்காசு 30 காசு 100ம்
9. உண்டான பல இறையும் சந்திராதித்தவரைச் சறுவமான்னியம்
10. ஆக பூறுவத்திலே நடக்கம்படிக்கு சறுவமானியம் ஆக சந்தி
11. றாதித்தவரைக்கும் நடக்கும்படக்கு சிலையிலும் செம்பிலும் வெட்டிக்குடுத்
12. தோம் இந்தன்மத்தை பரிபலனம் பண்ணனவன் ஸ்ரீ வயிஷ்ணவர் பொற்
13. பாதம் பெறக்கடவான் ஆகவும் சரிபாதம் என் தலைமேல் இதுக்கு அகித
14. ம் பண்ணினவன் கெங்கைக் கரையிலே குரால் பசுவைக் கொன்ற
15. தோஷத்திலே போகக்கடவான். ஏழெச்சம் அறுவான் ஏழு சிவாலயத்தை யழித்த ப
16. ாவத்திலே போவான் ஆசரியணைத் துரோகம் பண்ணின பாவத்தில் போவான்.



**ஆத்தூர் வட்டம்**

**ஊர் : தெடாவூர்**

கல்வெட்டு உள்ள இடம்: ஏகாம்பர சுவாமி கோயில் மண்டப வடக்குப்புறச்சுவர்

காலம் : கி.பி.1183

அரசன்: சோழன், மூன்றாம் குலோத்துங்கன்

மொழி : தமிழ்

**கல்வெட்டுச் செய்தி**

குலோத்துங்க சோழவாணகோவரையர் திருவேகம்பமுடைய நாயனார்க்கு பூசைக்கும், திருப்பணிக்கும், திருநாள் செலவுக்கும் நன்செய் நிலமும், புன்செய் நிலமும் கொடையாக அளித்த செய்தியைப்பற்றி குறிப்பிடுகின்றது.

1. ஸ்வதிஸ்ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 5-ஆவது குலோத்துங்க சோழ வாணகோவரையனேன் மலா
2. டாகிய நைநாத வளநாட்டு ஆற்றூர் கூற்றத்து மேல் கங்கைபாடி நாட்டில் தடாவூர் உடையார் திருவேகம்ப முடைய நாயிநார்கு
3. இவூர் வாரபற்று பெரியேரி நஞ்செய் நிலம் 'இரைபுஞ்சை கரை புஞ்சை பொட்டை புஞ்சை ஆற்றுக்கு வடக்கு நலம் 45லிம் இநிலத்
4. ..த்திகைப் பச்சை மாதரிசாதை ஆள் அமஞ்சி அனைத்தாயங்களும் இருன்து இன்நாயநாற்க்கு பூசைகரும் திருப்பணிக்கம் திருநாள் அழிவுக்கும் சன்தி
5. ராதித்தவரையும் முதல்லடங்க இறையிலியாக குடுத்தோம் இப்படிக்கு குலோத்துங்க சோடி வாணகோவரையன் எழுத்து
6. . . . எதிரிலி சோழ வேளாளர் ஸ்ரீ மாகேசுவரர் ரக்ஷை

**ஊர் : வீரனூர்**

கல்வெட்டு உள்ள இடம்:ஆற்றின் தென்கரை சிவன் கோயில் கோபுரத் திண்ணையிலுள்ள_கல்வெட்டு

காலம் : கி.பி. 14-ஆம் நூற்றாண்டு
அரசர் : விஜயநகரர், கிருஷ்ணதேவராயர்
மொழி : தமிழ்

**கல்வெட்டுச் செய்தி**

வீரகனூர் வீரசோழ நல்லூரிலுள்ள சிவபெருமானின் பெயர் திருமஞ்சன அழகிய நம்பிரானார் என்பதாகும். அக்கோயில் வழிபாடு முதலியவற்றுக்காக எல்லப்ப நாயக்கர் என்பவர் வெள்ளையூர் என்ற ஊரைச் சர்வமானியமாக விட்டமை பற்றியச் செய்தியாக உள்ளது.

**கல்வெட்டு வரிகள்**

1. ஸ்வஸ்திஸ்ரீ மத் மஹாம்மண்டலேஸ் வரந் ஹரியராய விபாடந் பாஷைக்குத் தப்புவராய கண்டந் மூவராய கண்டந் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு
குடாதான் . . ஈழமண்டல மும்மமந் தறை கொண்ட . .
2. திர சத சமுத்திராதிபதி ஸ்ரீ கிருஷ்ண தேவ மஹாராயர் பிறுதிவி ராஜ்யம்
பண்ணி அருளாநின்ற சகாத்தம் 1414 இதன் மேல் செல்லா நின்ற சித்தியாபானு
சம்வத் இஷய நாயிற்று பூறுவ பக்ஷத்து திறுதிகையு
3. மகதை மண்டலத்து ஆற்றூர் நாட்டு ஆற்றூர் கூற்றத்து வீசோழ நல்லூர்
உடையவர் திருமஞ்சனமழகியதம்பிரானார்க்கு எல்லப்ப நாயக்கர் தனம சாதனம்
பண்ணிக் குடுத்தபடி . . கிருஷ்ணதேவ மஹாராயர் தன்ம
4. ம் எழுந்தருளப் பண்ணி பரிகலமு கட்டளை பண்ணி வெள்ளை ஊர் கிராமம்
ஒன்றுக்கு நான்கெல்லைக்குட்பட்ட நஞ்சை புஞ்சை மாவடை மரவடை குளவடை
பலபட்டடை கரசர . . பலவும் உள்படவும் இந்த கிராமத்தில் சதுர்ச்சீ . . .
5. பூமி . . தெச்சு நாழியங்களும் உள்பட திருமஞ்சன மழகிய தம்பிரானாற்க சறுவ



மானியமாகக் கட்டளையிட்ட படியாலே இந்த தன்மம் சந்தராதித்த வரையும்
நடத்த கடவதாகவும் இந்த தனமத்துக்கு அகதம் பண்ணினவர்கள் . . .

**ஓமலூர் வட்டம்**

**ஊர் : தாரமங்கலம்**
கல்வெட்டு உள்ள இடம்: இளமீசுவரர் கோயில் முன்மண்டபத்தின் கிழக்குப்புறச் சுவரில் கல்வெட்டு உள்ளது.
அரசர் : விசயநகரர், அச்சுததேவமகாராயர்
காலம் : 1540
மொழி : தமிழ்

**கல்வெட்டு செய்தி**

வடபூவாணிய நாட்டுத் தாரமங்கலத்தைச் சார்ந்த வேளாள நிலக்கிழார் இம்மடி கட்டி முதலியார் அந்நாட்டின் காவேரிப்பட்டி என்னும் கிராமத்தை கோட்டை சமுத்திரம் எனப் பெயர் மாற்றம் செய்து எல்லைகளை வரையறுத்து அந்தணர்களின் வசிப்பிடமாக அளித்த செய்திக் குறிப்பிடுகிறது.

**கல்வெட்டு**

1. உ ஸ்வஸ்தி ஸ்ரீ விஜ (யாத்) சதய கவியுக வருஷம் 4640 இதன்மேற் செல்லா நின்ற சாறுவரி
2. சித்தரை மாதம் 1 தேதி ஸ்ரீ வீரப்பதாப அச்சுதேவ மஹாராயர் ப்ருத்விராஜயம் பண்ணியருளுகையில் அவர் வாயில்
3. கும்மளண்ணகளுக்கு குன்றத்தா ர்த்துறகஞ் செல்லு நாளில் கொங்கான வீர சோழ மண்டலத்து வடபூ
4. வாணிய நாட்டுத் தாரமங்கலம் வெள்ளாழ(ா)ர் நீலங்கிழார் மஸ்தக குடோரி மகுட சூடாமணி வண்ணத் தடுக்
5. கும் வாடாமாலையும் புலிக்கொ(டி)யும் உள்ள வணங்கா முடி முதலியார் நல்லுடைஅப்பர் கோட்டை

6. முதலியார் இம்மடி கட்டிமுதலியார் இன்னாட்டு காவேரிப்பட்டியைக் கோட்டை சமுத்திரமென்னும் நா
7. மதேயம் பண்ணி அக்கறாரம் விட்டேன் யிதுக்கெல்லை கிழக்குப் புலிக்கல் தெற்குச் சிற்றாறு
8. மேற்கு காவிரி வடக்கு கலிவிடங்கந் தெற்கு ஏரி யறித

# பிற்சேர்க்கை

## புதிய கற்காலக் கருவிகள்

பண்டைய மனிதன் உணவிற்காக வேட்டையாடுவதற்கும், மனிதன் பயன்படுத்திய ஆயுதம் கற்கருவிகள் ஆகும். இந்த கற்கருவிகள் தரம் உயர்த்தப்பட்டு எளிமையாக கையாளப் படுவதற்கு கற்கருவிகள் மாற்றியமைத்து பயன்படுத்தினான். இந்த நிலையை தொல்லியல் அறிஞர்கள் புதிய கற்காலம் (Neolithic Culture) என்று அழைக்கின்றனர். இந்த புதிய கற்கால கருவிகள் சேலம் மாவட்டத்தில் மிகுதியாக கிடைக்கப் பெற்றுள்ளது. இம் மாவட்டம் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பொழுது "ராபர்ட் புருஷ்பூட்" (Robert Bruce Foote) என்ற ஆங்கிலேயர் சேர்வராயன் மலைப் பகுதி, ஏற்காடு, போதிமலை, கல்வராயன் மலை போன்ற பகுதிகளில் ஏராளமான புதிய கற்கால கற்கருவிகளை ஆய்வு செய்து சேகரித்துள்ளார்.

### சேலம் மாவட்டத்தில் பெருங்கற்காலச் சின்னங்கள் காணப்படும் இடங்கள்

| ஊர்கள் | வட்டங்கள் |
|---|---|
| 1. அழகாபுரம் | - சேலம் |
| 2. ஆத்தூர் | - ஆத்தூர் |
| 3. தளவாய்பட்டி | - ஆத்தூர் |
| 4. கல்லாநத்தம் | - ஆத்தூர் |
| 5. மஞ்சினி | - ஆத்தூர் |
| 6. பில்லாமதில் | - கெங்கவள்ளி |
| 7. ஆணையாம்பட்டி | - கெங்கவள்ளி |
| 8. செந்தாரப்பட்டி | - கெங்கவள்ளி |
| 9. நங்கவள்ளி | - மேட்டூர் |
| 10. சின்னமாங்கோடு-கருமந்துறை | - ஆத்தூர் |

# சேலம் பெயர்க் காரணம்

வரலாற்று ஆய்வாளர்களிடையே சேலம் பெயா் பற்றிய மாறுபட்ட கருத்துக்கள் உள்ளது.

1. சங்க கால குறுநில மன்னர்களில் "சியால கட்டி முதலி" குறுநில மன்னர் இருந்துள்ளார். இந்த அரசன் காலம் முதல் சேலம் பகுதி "சியலம்" என்று அழைக்கப்பட்டு வந்தததாகவும் இந்த சியலம் என்ற வார்த்தை மருவி சேலம் என வந்திருக்கலாம் என்று கூறுகின்றனர்.
2. சேர்வராயன் மலையும், அதன் சுற்றுப்புற பகுதியும், "சேலம் ராயன்" மலை என்றும் இதுவே மருவி சேலம் என்று பெயர் வந்தது என்றும்
3. சேரர்களின் ஆதி பூர்வீகம், பிறப்பிடங்கள்-சேரம், சேயிலம், சேலைய, சியலம், சேரளம், கேரளம் அடங்கிய பகுதிகள் என்றும் சேரர்கள் பூர்வீக இடமாகிய மேற்கண்ட இடப் பெயர்களிலிருந்து "சேலம்" என்ற பெயர் மருவி வந்திருக்கும்
4. "சேலம்" என்றால் அமைதி (Peace) மலைகளும், மலைச் சார்ந்தப் பகுதிகளிலும் அமைதி தவழ்கின்றது என்றும்- Shalem, Selim, Solomon, Shalman, Shalmaneswar - இந்த வார்த்தைகள் அனைத்தும் ஜெருசலம் (Jerusalelm) என்ற பெயரும், ஜெருசலத்திலிருந்து மருவி சேலம் பெயர் வந்திருக்கலாம், மேலும் சேலம் என்ற வார்த்தை "Unidntified Kingdom of Melchizedak" என்று பைபிளில் பாகம் 14:18-இல் பத்தியில் உள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.
5. அதியமான் ஆட்சி காலத்தில் "சீலம்" என்றும் இப்பெயர் மருவி சேலம் என்று மருவி வந்திருக்கலாம் என்று கூறுகின்றார்கள்.



## சேலம் மாவட்டத்தை ஆட்சி செய்த அரசர்கள்

1. சேர மன்னர்கள் - சங்க காலம்
2. கங்கர்கள் - கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை
3. இடைக்கால சேரர்கள் - கி.பி.10-ஆம் நூற்றாண்டு வரை
4. சோழர்கள் - கி.பி.10-11-ஆம் நூற்றாண்டு வரை
5. கொங்குச் சோழர்கள் - கி.பி.14-ஆம் நூற்றாண்டு வரை
6. கொங்கு பாண்டியர்கள் - கி.பி.14-ஆம் நூற்றாண்டு
7. ஹொய்சாளர்கள் - கி.பி.14-ஆம் நூற்றாண்டு பிற்பகுதி
8. விசயநகரர் - கி.பி.14-16-ஆம் நூற்றாண்டு வரை
9. நாயக்கர்கள் கட்டி முதலிகள்-கி.பி.17-18-ஆம் நூற்றாண்டு
10. பிரித்தாணியர் - கி.பி.18-19-ஆம் நூற்றாண்டு வரை

## சேலம் மாவட்ட கிராம தெய்வங்கள்

1. கூத்தாண்டவர் - தெடாவூர்
2. முனியப்பன் (ம) தலைவெட்டி முனியப்பன், சேலம், கெங்கவள்ளி, தாரமங்கலம்
3. செல்லாண்டியம்மன் - செல்லியம் பாளையம்
4. மதுரை வீரன் கோயில் - கெங்கவள்ளி
5. கருப்பு கோயில் - ஆணையாம்பட்டி
6. பொன்காளியம்மன் கோயில் - வீரகனூர்
7. சௌடேஸ்வரி அம்மன் கோயில் - சேலம்
8. தருமராச கோயில் - செந்தாரப்பட்டி
9. தீப்பாய்ஞ்சம்மன் கோயில் - வீரபாண்டி
10. புற்றுக்கண் மாரியம்மன் கோயில் - மஞ்சினி
11. காளியம்மன் கோயில் - குறிச்சி- பேளூர்
12. கரியராமர் கோயில் - புழுதிக்குட்டை
13. பெரியசாமி கோயில் - சார்வாய் கிராமம் - ஆத்தூர்
14. அம்மன் கோயில் - கருப்பூர் - ஓமலூர்

# சேலத்து கோட்டைகளும், கோட்டை மேடுகளும்

சேலம் மாவட்டம் மலைகளும், கற்பாறைகளும் நிறைந்த குன்றுகளும், தேசிய பெருவழியில் அமைந்துள்ளதால் இம்மாவட்டத்தின் ஏராளமான கோட்டைகளும், கோட்டை மேடுகளும் நல்ல நிலையிலும் அழிந்தும் காணப்படுகின்றன. மேலும் இந்த கோட்டைகளுக்கு துர்க்கம் என்ற பெயரும் இருந்துள்ளது.

**ஆத்தூர் கோட்டை**

இவ்வூர் வசிஷ்ட நதியின் வடகரையில், கருங்கற்களால் கட்டப்பட்ட கோட்டையும், கொத்தளங்களும் இன்றளவில் நல்ல நிலையில் இருந்துள்ளது. இந்த கற்கோட்டையை விசயநகர அரசின் சிற்றரசாகிய நாயக்க வம்ச லட்சுமணன் நாயக்கன் என்பவரால் இக்கோட்டை கட்டப்பட்டது என்றும் இக்கோட்டையில் தானிய களஞ்சியமும், படைகளின் இருப்பிடமும், குலதெய்வ கோயிலும் கட்டியுள்ளனர். கி.பி. 1708-இல் கிழக்கிந்திய கம்பெனி ஆத்தூர் கோட்டையை கைப்பற்றி ஆட்சி செய்துள்ளது.

**சங்ககிரிக் கோட்டை**

ஓர் உயர்ந்த மலையில் வட்ட வடிவமான பாறையில் கட்டப்பட்டுள்ளது. இக்கோட்டையின் மேலே தண்ணீர் குளங்களும், கோயில்களும், கொடித்திட்டு மற்றும் தானிய களஞ்சியமும் உள்ளது. மைசூர் அரசர்கள், ஹைதர்அலி, திப்புசுல்தான் இக்கோட்டையில் தங்கி ஆங்கிலேயர்களுடன் போர்புரிந்துள்ளனர். இக்கோட்டையை விசயநகர சிற்றரசர் "தாளவாய் அரியநாதன்" என்ற சிற்றரசரால் கட்டப்பட்டது என்று செவிவழி செய்திகள் கூறுகின்றது. திப்புசுல்தான் காலத்தில் இக்கோட்டை "முசாபார்பாத்" என்ற பெயர் சூட்டப்பட்டு அழைக்கப்பட்டு வந்துள்ளது.

**சேலம் கோட்டை**

சேலம் கோட்டையானது சேலம் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. இக்கோட்டையானது விசயநகர பேரரசின் குறுநில மன்னன் சின்னப்ப நாயக்கன் என்பவரால், கல்லாலும், மண் மதிற்சுவர்களாகவும் கட்டப்பட்டுள்ளது. தற்பொழுது இக்கோட்டையின் உள்பகுதியில் மசூதி, மற்றும் பெருமாள் கோயில் வரலாற்று சின்னங்களாக உள்ளது. இக்கோட்டையானது ஹைதர்அலி ஆட்சியின் போது இவனுடைய படைத்தளபதி "இஸ்மாயில்கான்" இக்கோட்டையை நிர்வாகம் செய்து வந்துள்ளான். இக்கோட்டையின் நுழைவு வாயில் வடக்குப்புறம் அமைந்துள்ளது. இக்கோட்டையின் மேற்குப் பக்கம் கிருஸ்துவ சௌத் இந்தியன் பள்ளிக்கூடம் இருக்கும் பக்தியாகும். இக்கோட்டையின் கிழக்கு, தெற்கு பக்கங்கள் மணிமுத்தாறும், இந்த ஆற்றின் கரையும் இயற்கையாகவே அரண்களாக சேலத்திற்கு அமைந்திருந்துள்ளது. இக்கோட்டையின் உட்புற பகுதியில் பல கொத்தளங்களும், பீரங்கி மேடுகளும், முஸ்லீம் படைகள் தங்குமிடஙங்களும் இருந்துள்ளது. இக்கோட்டையை மையமாக வைத்து இக்கோட்டையானது கி.பி.1792-இல் கிழக்கிந்திய கம்பெனி பிரிட்டிஷ் படையின் கீழ் வந்தது.

**ஓமலூர் கோட்டை**

ஓமலூரில் 14-ஆம் நூற்றாண்டு முதல் கொங்கு நாட்டு அரசியலில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்துள்ளது. இவ்வூர் சரபங்க நதியின் கிழக்கு கரையில் இருந்துள்ளது. இக்கோட்டையின் உள்பரப்பளவு சுமார் 25 ஏக்கர் பரப்பளவாக இருந்துள்ளது. மேலும் கட்டிமுதலி அரசர்கள் காலத்தில் இக்கோட்டையை மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இக்கோட்டை யானது தொப்பூர் பெருவழியில் அமைத்துள்ளார் மைசூர் போரில் பெரிதும் பயன்பாட்டில் இருந்துள்ளது. இக்கோட்டையின் உள்புறம் இரண்டு இந்து மதக் கோயில்கள் இருந்துள்ளது. ஒன்று விஸ்வநாத ஈஸ்வரர் கோயில் , மற்றொன்று பெருமாள் கோயில் விசயராகவ பெருமாள் கோயில் இந்த இரண்டு கோயில், மதுரை திருமலை நாயக்கர், இராணிமங்கம்மாள், கட்டி முதலி அரசர்கள் இக்கோயில் களுக்கு பல்வேறு கொடைகள் அளித்து சிறப்பித்து வணங்கி

வந்துள்ளனர். மேலும் இக்கோட்டையின் பாதுகாப்பு அரணாக மேற்கு பக்கம் சரபங்க நதியும், மற்றும் மூன்று பக்கங்களும் மண்ணால் செய்யப்பட்ட வலிமையான மண் மதிற்சுவர்கள் இருந்துள்ளது. மேலும் மைசூர் போரின்போதும், ஆங்கிலேயர் களின் ஆட்சியின் ஆட்சி கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை நல்ல நிலையில் இருந்துள்ளது. அதன்பின் இக்கோட்டை காலத்தின் சீற்றத்தால் அழிந்துவிட்டது என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

**ஆறகளூர் கோட்டை**

இவ்வூர் மகதை வானவரையர்களின் வானவராயர் அரசர் வம்சத்தினர் ஆறகளூரை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்துள்ளனர். இந்த வாணவராயர்கள் இவ்வூரில் பெரிய கோட்டையை உருவாக்கி ஆட்சிபுரிந்துள்ளனர். இக்கோட்டையானது கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முற்றிலும் அழிந்துவிட்டது. ●

# சேலம் மாவட்டத்து நடுகற்கள்

**கருப்பூர்**

ஓமலூர் வட்டம் கருப்பூரில் சிவன் கோயில் திருச்சுற்று பரிகாரத்தில் பரிவாரத் தெய்வங்களுக்கு தனித்தனியே தெய்வச் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உள்ள தெய்வச் சிற்பங்களில் ஒன்று ஒரு தலைவன் தலைவி புடைப்பு சிற்பங்கள் நடுகல் சிற்பமாக உள்ளது. இது முக்கியத்துவம் வாய்ந்த நடுகல் ஆகும்.

**செந்தூரப்பட்டி**

கெங்கவள்ளி வட்டத்தில உள்ள பழமையான ஊராகும். இவ்வூரின் தென்புறம் சுமார் 2கி.மீ. தொலைவில் மொடக்குவார் பட்டி என்ற இடம் உள்ளது. இந்த இடத்தில் ஆறு நடுகற்கள் உள்ளது. ஒவ்வொரு கல்லிலும் வீரர் ஒருவர் புலியை குத்துவது போன்று புடைப்புச் சிற்பங்களாக உள்ளது. இந்த புலிக்குத்தி நடுகற்களில் வட்டெழுத்தும் பொறிக்கப்பட்டு நடுகற்களாக உள்ளது.

**புத்தனோி**

இவ்வூர் மேட்டூர் வட்டத்தில் உள்ள சிறிய கிராமம் ஆகும். இவ்வூரில் வரலாற்றுக்கால கோட்டையிருந்து அழிந்துள்ளது. இத்துடன் இவ்வூரில் நடுகல் எழுத்துடன் உள்ள ஒரு கற்சிற்பத்தில் வீரன் புடைப்பு சிற்பமாகவும், வீரனின் கால் பகுதியில் கன்னட எழுத்து கல்வெட்டும் உள்ளது. கல்வெட்டு "பல்லவ மல்லன்" என்ற எழுத்துவரி உள்ளது இந்த வீரனின் பெயர் பல்லவ மல்லனாகவும் இருக்கலாம் என்பதை உணர முடிகிறது.

**வீரக்கல்**

இவ்வூர் மேட்டூர் வட்டத்தில் உள்ள ஊராகும். இவ்வூரின் பெயரே வீரக்கல் (HERO STONE) மேலும் இவ்வூரில் ஒன்றுக்கு மேற்பட்ட நடுகற்கள் உள்ளது குறிப்பிடத் தகுந்தச் செய்தியாகும்.

**வீரப்பாண்டி**

இவ்வூர் சேலம் வட்டத்தில் திருமணி முத்தாற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ள ஊர். இவ்வூர் பாண்டிய மன்னன் வீரபாண்டி ஆட்சியின் போது ஒரு போர் வீரன் போரின் போது இறந்துப்பட்டுள்ளான், இதனை அறிந்த ஊர் மக்கள் இந்த போர் வீரனின் நினைவாக நடுகல்லும், இவ்வீரனின் மனைவியும், உடன் கட்டை ஏறி தீப்பாய்ந்தாள். தீப்பாய்ஞ்ச இவனுடைய மனைவிக்கு சதிக்கல்லும் ஏற்படுத்தி நடுகற்கள் தெய்வங்களாக தீப்பாய்ஞ்சம்மன் கோயில் வைத்து வணங்கி வருகின்றனர்.

**செல்லியம்பாளையம்**

இவ்வூர் ஆத்தூர் வட்டத்தில் உள்ள ஊராகும். இவ்வூரில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செல்லியம்மன் கோயில் உள்ளது. இக்கோயில் அருகே பெரிய அளவில் ஆலமரம் உள்ளது. இம்மரத்து அடியில் இரண்டு நடுகற்கள் புடைப்புச் சிற்பங்களாக உள்ளது. இந்த நடுகல் சிற்பங்களை மக்கள் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

**நாகவள்ளி**

இவ்வூர் மேட்டூர் வட்டத்தில் உள்ளது. இவ்வூரில் முனியப்பன் கோயில் அருகில் கி.பி.17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இரண்டு நடுகற்கள் உள்ளது. உள்ளூர் மக்கள் "குலன் காலன்" என்ற வீரன் வீரத்தீரச்செயல் புரிந்தமைக்காக இவனுக்கு நடுகல் ஏற்படுத்தினார்கள் என்ற செய்தி செவிவழிச் செய்தியாக அறியப்படுகிறது.

**நாழிகல்பட்டி**

இவ்வூர் சேலம் வட்டத்தில் உள்ள ஊராகும். இவ்வூரை கோட்டைக்காடு (Fort Hillock) நுழைவாயிலில் உள்ளது. இவ்வூரில் பழமையான கோட்டையும் உள்ளது. இவ்வூரில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விவசாய நிலத்தில் ஒரு வீரன் அல்லது தலைவன் குதிரை மீது போருக்கு புறப்படுவது போன்று புடைப்பு சிற்பமாக உள்ளது. மேலும் புடைப்பு சிற்பத்தின் கீழ் வரிசையில் மற்றொரு வீரன் வில் அம்பு ஏந்தி போர் புரிவது போன்றும் புடைப்பு சிற்பமாக நடுகல் உள்ளது. ●

# சேலம் மாவட்டத்தில் நாணயங்கள்

**உரோமானியர் காசுகள்**

கெங்கவள்ளி வட்டம், கோனேரிப்பட்டி என்ற கிராமத்தில் கி.பி. 1856-இல் கிறிஸ்தவ மத கோயில் கட்டுவதற்காக பூமியை தோண்டும் போது 35 உரோமானியர்கள் காசுகளும் வெள்ளிக் காசுகளும் தங்க ஆபரணங்களும் கிடைத்துள்ளது. இந்த உரோமானியர் காசுகள் பண்டைய பெருவழியில் உரோமானியர்கள் சேலம் மாவட்டத்தில் வணிக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்பதை உணரமுடிகின்றது.

**செக்கடிபட்டி**

ஆத்தூர் வட்டம், செக்கடிபட்டி கிராமத்தில் கி.பி. 1949-இல் 60 தங்க காசுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. இக்காசுகளை ஆய்வு செய்த தொல்லியல் அறிஞர்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக இருக்கலாம் என்று கூறியுள்ளார்கள்.

**வனவாசி**

மேட்டூர் வட்டத்தில் வனவாசி கிராமத்தில் கி.பி. 1956-இல் பூமிக்கடியிலிருந்து 19 தங்க காசுகளும், வெள்ளிக் காசுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்த ஊர் தாரமங்கலத்தை ஆட்சி செய்த விசயநகரர், ஹொய்சாளர்கள், நாயக்கர்கள், கட்டி முதலிகளும், பாளையக்காரர்களும் ஆட்சிபுரிந்துள்ளனர். இந்த அரச வம்சத்தினர் ஒருவரால் பயன்படுத்தப்பட்ட காசுகளாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**எடப்பட்டி**

இவ்வூரில் ஆற்காடு முஸ்லீம் அரசர் மாபுஸ்கான் காலத்து வெள்ளிக் காசுகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

**சேலம்**

சுகவனேஸ்வரர் கோயில் திருப்பணியின் போது 164 கிழக்கிந்திய கம்பெனி நாணயங்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. ●

# சேலம் மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்கள்

| கோயில்கள் | ஊர் | வட்டம் |
|---|---|---|
| 1. காமீஸ்வரர் கோயில் | ஆறகளூர் | ஆத்தூர் |
| 2. கற்பூரநாதர் கோயில் | உத்தமசோழபுரம் | சேலம் |
| 3. கரிவரதராசப் பெருமாள் கோயில் | ஆறகளூர் | ஆத்தூர் |
| 4. கரிய ராமர் கோயில் | கருமந்துறை | ஆத்தூர் |
| 5. கோதண்ட ராமர் கோயில் | அயோத்தியாபட்டிணம் | வாழப்பாடி |
| 6. கோட்டை மாரியம்மன் கோயில் | சேலம் | சேலம் |
| 7. குமரகிரி தண்டாயுதபாணி கோயில் | சேலம் அம்மாபேட்டை | சேலம் |
| 8. நஞ்சுண்டேசுவரர் கோயில் | எடப்பாடி | எடப்பாடி |
| 9. பிரசன்ன வெங்கட்ரமண்ணா கோயில் | செவ்வாய்பேட்டை | சேலம் |
| 10. சித்தர் கோயில் | கஞ்சமலை சேலம் | சேலம் |
| 11. சௌந்திர ராச பெருமாள் கோயில் | சேலம் | சேலம் |
| 12. சௌடேஸ்வரி கோயில் | சேலம | சேலம் |
| 13. சுகவனேஸ்வரர் கோயில் | சேலம் | சேலம் |
| 14. தான்தோன்றீஸ்வர் கோயில் | பேளூர் | அயோத்தியாபட்டணம் |
| 15. கைலாசநாதர் கோயில் | தாரமங்கலம் | ஓமலூர் |
| 16. நரசிங்க பெருமாள் கோயில் | தம்மம்பட்டி | கெங்கவள்ளி |
| 17. கரியநிர்மலேஸ்வரர் கோயில் | ஆத்தூர்-கோட்டை | ஆத்தூர் |
| 18. கங்கா சௌந்திரேஸ்வரர் கோயில் | வீரகனூர் | கெங்கவல்லி |
| 19. ஏகாம்பரேஸ்வர் கோயில் | தொடவூர் | கெங்கவல்லி |
| 20. பசுபதீஸ்வரர் கோயில் | மேச்சேரி | எடப்பாடி |
| 21. இலக்குமி நரசிம்மர் கோயில் | நங்கவள்ளி | மேட்டூர் |
| 22. சிவன் கோயில் | நரசிங்கபுரம் | ஆத்தூர் |

# சேலம் மாவட்டத்தில் ஜைனமத, புத்தமதத் திருத்தலங்கள்

சேலம் மாவட்டத்தில் ஜைனமதம், புத்தமதம் பரவியிருந்தது என்பதற்கு சான்றுகளாக ஜைன, புத்தமதத் துறவிகள் வந்து சென்று தம்முடைய மதப்பணிகளையும், மதக்கொள்கைகளையும் பரப்பி போதித்துள்ளனர். அவ்வாறு வந்து சென்ற துறவிகளின் பெயராலும் அல்லது அந்த துறவிகள் தங்கியிருந்த இடங்களின் பெயராலும் அல்லது ஜைன, புத்தமதத் துறவிகளின் கற்சிற்பங்கள் கிடைத்துள்ள சிற்பங்கள் உள்ள ஊர்களும் உள்ளது. கீழ்கண்ட இடங்களில் ஜைன, புத்தமதங்கள் தொடர்புடைய ஊர்கள் உள்ளது.

**ஜைன மதத்திருத்தலங்கள் உள்ள ஊர்கள்**

1. கருமாப்புரம் - கெங்கவள்ளி வட்டம்
2. வீரகனூர் - கெங்கவள்ளி வட்டம்
3. அயோத்தியாபட்டணம் - வாழப்பாடி வட்டம்
4. ஓமலூர் - ஓமலூர் வட்டம்
5. ஆண்டிக்கரை - மேட்டூர் வட்டம்
6. தாதகாப்பட்டி - சேலம்

**புத்தமதத் மதத்திருத்தலங்கள் உள்ள ஊர்கள்**

1. சேலம் குகை - சேலம்
2. தியாகனூர் - ஆத்தூர்
3. மணிவிழுந்தான் - ஆத்தூர்
4. ஆறகளூர் - ஆத்தூர்
5. வீரகனூர் - கெங்கவள்ளி
6. கருமாப்புரம் - கெங்கவள்ளி (தம்மம்பட்டி)
7. தாதகாப்பட்டி - சேலம்
8. புத்தனேரி - மேட்டூர்



**சேலம் மாவட்டத்து மலைகள்**

1. கல்வராயன் மலை - கருமந்துறை
2. சேர்வராயன் மலை - சேலம்
3. பச்சை மலை - தம்மம்பட்டி
4. அறுநூத்து மலை - பேளூர்
5. மன்னு கொண்ட மலை - ஓமலூர்
6. ஒருகல் மலை - கொங்கனாப்புரம்
7. பாலமலை - மேட்டூர்
8. பைத்தூர் மலை - ஆத்தூர்
9. சீதா மலை - மேட்டூர்
10. போயர் மலை - மஞ்சினி ஆத்தூர்
11. பொய்மான்கரடு - சங்ககிரி
12. கஞ்ச மலை - சித்தர் கோயில் - சேலம்

**சேலம் மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசன அணைகள் பட்டியல்**

1. லட்சுமி சமுத்திரம் ஏரிப்பாசனம்
9. மேட்டூர் அணை - 1934-இல் கட்டப்பட்டது
10. மூக்குத்திப் பாளையம் - நீர்ப்பாசன ஏரி (சேலம் கி.பி.13-ஆம் நூற்றாண்டு)
11. பனைமரத்துப்பட்டி - அணை நீர்ப்பாசன முறை
12. தும்பல் ஆற்றுப்பாசனம்
13. தொப்பூர் ஆற்றுப்பாசனம்
14. வாணி ஆற்று நீர்ப்பாசனம்
15. மணி முத்தாறு நீர்ப்பாசனம்

**ஏரிகள், குளங்கள்**

சேலம் மாவட்டத்தில் ஏரிகள், குளங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளது. பல கல்வெட்டுகளில் ஏரிகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளது. இம்மாவட்டத்தில் பல குறிப்பிடத் தகுந்த ஏரிகள் உள்ளது. ஊர்கள் தோறும் ஏரிகள் உள்ளது. ஏரிகளின் பெயரில் ஊர்கள் உள்ளது. உதாரணமாக பெரிய ஏரி, சித்தேரி, துலுக்கனூர் ஏரி, பணி ஏரி போன்ற ஊர்களின் பெயர்கள் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

**ஆற்றுக் கால்வாய்கள்**

சேலம் மாவட்டத்தில் கொங்குச் சோழர்கள், ஹொய்சாளர்கள், விசயநகர அரசர்கள், கட்டி முதலிகள் போன்ற அரசர்கள் ராச வாய்க்கால், மணிமுத்தாறு வாய்க்கால், தொப்பூர் ஆற்று வாய்க்கால், சுவேதநதி வாய்க்கால், பனைமரத்துப்பட்டி அணை வாய்க்கால், சரபங்க நதி வாய்க்கால் போன்ற வாய்க்கால்கள் உள்ளது. இந்த நீர்ப்பாசன கால்வாய்கள் மூலம் வரலாற்றுக் காலம் முதல் தற்போது வரை இந்த நீர்ப்பாசன முறைகளை விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

# சேலம் மாவட்டத்தில் காலம் வாரியாக நடந்த நிகழ்வுகள் (chronology)

## தொல்பழங்காலம் பின் வரலாற்றுக்கு முந்தைய சேலம்(Pre-history)

1. பழைய கற்காலம் பண்பாடு
2. திராவிடர் மத்திய தரைகடல் பகுதியிலிருந்து
3. பழங்குடியினர் மற்றும் வேட்டுவர் உள்ளூர் ஆதிவாசிகள்

**கி.மு. காலம் சேலத்தில் (BC)**

கி.பி. 2000 - 200 கி.மு. AD - புதிய கற்காலப் பண்பாடு
கி.பி. 1000 - 200 கி.மு. AD - இரும்புக் காலம்
கி.பி. 500 - 450 கி.மு. AD - ஜைன மதம்
கி.பி. 560 - 480 கி.மு. AD - புத்த மதம்

**கி.மு. மூன்றாம் நூற்றாண்டு**

அதியமான் ஆட்சிக் காலத்தில் சேலம் என்ற பெயர் சீலம் (Seelam) பெயரிலிருந்து வந்தது.

**சேலம்**

முதலாம் நூற்றாண்டு - ஆட்சி செய்த அரசர்கள்

1. கோசர் - அரசு
2. அத்தன்ஏரி - கொல்லிமலை
3. அதியமான் நெடுமான் அஞ்சி
4. கட்டி அரச வம்சத்தினர்- அகநானூறு

இரண்டாம் நூற்றாண்டு

1. பாண்டியன் நெடுஞ்செழியன்
2. இரும்பொறை ஆட்சி —— கொல்லிமலை

3. அவ்வையார்
4. கபிலர்

நான்காம் நூற்றாண்டு

1. அம்மன் கோவில்பட்டி பிராமி எழுத்து
2. அதியமான் மரபினர் ஆட்சி
3. பல்லவர் ஆட்சி உருவாகுதல்
4. முதல் 7-ஆம் நூற்றாண்டு வரை

கங்கர்கள் ஆட்சி

ஆறாம் நூற்றாண்டு

1. பக்தி பிரச்சார இயக்கம் - அப்பர் சேலம் மாவட்ட சைவ கோயில்களுக்கு வருகை புரிதல்
   கி.பி.570 முதல் 630 வரை மகேந்திர வர்மன் பல்லவன் ஆட்சி பரவுதல்

கி.பி. ஏழாம் நூற்றாண்டு

1. ஜைனம், புத்தமதம் - செல்வாக்கு குறைவடைதல்
2. வேட்டுவர் - வெள்ளாளர் - போர்
3. அதியமான் - இந்துமதம் மாறுதல்
4. நடுகல் - நங்கவள்ளி உருவாகியுள்ளது
5. கி.பி.630-668- நரசிம்மவர்மன் பல்லவன்

கி.பி. எட்டாம் நூற்றாண்டு

1. அதியமான் குனசீலன் - நாமக்கல் நரசிமமர் குகை கோயில் கட்டுதல்
2. அதியமான் பாண்டிய மன்னர்களால் தோற்கடிக்கப்படுதல்
3. இந்து தத்துவஞானி சங்கரர் - பக்தி இயக்கம்

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு

1. பல்லவர்கள் பாண்டியர் வெற்றி கொள்ளுதல்
2. ஆதித்ய கரிகால சோழர் கொங்குநாட்டைக் கைப்பற்றுதல்

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு

1. சேலம் மாவட்டத்தில் பல்லவ அரசு வீழ்ச்சியடைந்தது.



2. கொல்லிமலை மலவராயன் சந்திரசோழன் அரியணை ஏறினான்
3. பராந்தக சோழன்-I ஆட்சியின் கீழ் வந்தது 906-955
4. இராசராசன்-I 985-1014

கி.பி. 11-ஆம் நூற்றாண்டு

1. இராசேந்திர சோழன் I-1012-1044
2. குலோத்துங்க சோழன் I-1070-1120
3. ஹொய்சாளர் ஆட்சி பரவுதல் - 1080

கி.பி. 12-ஆம் நூற்றாண்டு

1. ஆறகளூர் - வானதிராயர் வானர் கோவரையன் ஆட்சி தோன்றுதல்
2. குலோத்துங்க சோழன் III-1178 -1218

கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

1. ஹொய்வாளர் மகதை மண்டலத்தை கைப்பற்றுதல் - 1206 -1218
2. ஹொய்சாளர் அரசர் நரசிம்மர்-II
3. ஹொய்சாளர் அரசர் வீரகோமேஸ்வரர்-1233-1267
4. சடையவர்மன் சந்திரபாண்டியன்-1251-1271
5. வீரபாண்டிய தேவன்-1253-1265
6. ஹொய்சால அரசன் வீரராமநாதன் 1254-1295

கி.பி. 14-ஆம் நூற்றாண்டு

1. மாலிக்காபூர் படையெடுப்பு -1310 .
2. விசயநகர பேரரசு கட்டுப்பாட்டில் சேலம் - 1368-1565

கி.பி. 15-ஆம் நூற்றாண்டு

1. சாளுக்கிய அரசு பரவுதல்
2. பாளையக்காரர்கள் சிற்றரசர்கள் தோன்றுதல்

கி.பி. 16-ஆம் நூற்றாண்டு

1. சேந்தமங்கலம் - இராமச்சந்திரன் நாயக்கர் ஆட்சி
2. மோரூர் காங்கேயன் சிற்றரசு ஆட்சி பரவுதல்

3. கிருஷ்ண தேவராயர் ஆட்சி-1509-1529
4. மதுரை நாயக்கர் ஆட்சி-1559-1740

கி.பி. 17-ஆம் நூற்றாண்டு

1. காங்கேயர்கள் சிற்றரசு
2. வணங்காமுடி கட்டி சிற்றரசு
3. ஆரை இம்முடி ஆல இளையன் சிற்றரசர்
4. கட்டி முதலி சிற்றரசு
5. சிக்க தேவராசன் தாளவாய் அரசன் (மைசூர் ஆட்சியாளர்)

கி.பி. 18-ஆம் நூற்றாண்டு

1. மைசூர் ஹைதர்அலி ஆட்சியின் கீழ் வருதல் - 1782
2. திப்புசுல்தான் ஆளுமை - 1783

கி.பி. 19-ஆம் நூற்றாண்டு

கிழக்கிந்திய கம்பெனி, பிரிட்டிஷ் ஆளுமையின் கீழ் வந்தது.

## சேலம் மாவட்டத்தில் நடந்த சமூக மாற்றங்கள்

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு

ஜைனமதம் - சேலம் மாவட்டத்தில் பரவுதல் சேலம் என்ற பெயர் "சீலம்" என்ற பெயரிலிருந்து மாறுகின்றது.

கி.மு.258 - புத்தமதம் சேலம் மாவட்டத்தில் பரவுதல்.

கி.மு.250 - அசோகன் பாலி எழுத்து "சத்திய புத்திரன்" குறிப்பிடுகின்றது.

கி.மு.200 - போகர் - தமிழ் சித்தர் - வைத்திய முறை உருவாகுதல்.

கி.பி. முதலாம் நூற்றாண்டு

கோனேரிப்பட்டியில் மோனியர் வணிகம் - தொடர்பான உரோமானியர் நாணயங்கள் பூமிக்கடியில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளது.

தமிழ் புலவர் அவ்வையார் சேலத்திற்கு வந்துள்ளார்.



கி.பி. ஆறாம் நூற்றாண்டு

பக்தி இயக்கம் அப்பர்- சேலம் கோயில்களுக்கு வருகை புரிந்துள்ளார்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டு

அதியமான சைவ மதத்திற்கு மதம் மாறியுள்ளார்.

நங்க வள்ளி-பழமையான நடுகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டு

அதியமான் குனசீலன் நாமக்கல் குகை கோயிலை உருவாக்கினார்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

ஜைனமதம் மற்றும் புத்தமதம் சேலம் மாவட்டத்தில் மறைய தொடங்கியது.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு

பல்லவர் ஆட்சி சேலம் மாவட்டத்தில் முடிவுக்கு வந்தது.

கி.பி. 11-ம் நூற்றாண்டு

அருணகிரிநாதர் சேலம் மாவட்டத்தில் பக்தி இயக்கம் மேற்கொண்டார்.

1. ஹொய்சாள அரசர் விநாதியத்தியா காலத்தில் சேலம் மாவட்டம் ஹொய்சாளர் ஆட்சியின்கீழ் வந்துள்ளது.
2. இராசராசன் வானரையர் கோவரையன் ஆறகளூர் கரிவரதராச பெருமாள் கோயிலை கட்டியுள்ளார்.
3. பேளூர் தான்தோன்றீஸ்வரர் கோயில் கட்டப்பட்டுள்ளது.
4. சோழ கங்க தேவன் அரச வம்சம் சேலம் மாவட்டத்தில் ஒரு பகுதியை ஆட்சி புரிந்தது.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

1. தாரமங்கலம் கைலாச நாதர் கோயில் கட்டப்பட்டது.
2. கி.பி.1218-இல் ஹொய்சாளர்கள் மகதை மண்டலத்தினை கைபற்றினர்.

3. கி.பி.1236 நங்கவல்லி சிவன்கோயில் கட்டப்பட்டுள்ளது.
4. கி.பி.1265-இல் சேலம் சௌந்திரராசப் பெருமாள் கோயில் கட்டப்பட்டுள்ளது.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டு

1. சங்ககிரி கோட்டையை தளவாய் அரியநாதரால் கட்டப்பட்டுள்ளது.
2. கி.பி.1310-மாலிக்காபூர் சேலம் வழியாக படையெடுப்பு.
3. கி.பி.1368-1565 சேலம் விசயநகரப் பேரரசின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டு

1. சேலம் கஞ்ச மலையில் சுந்திரம் சித்தர் அவர்களால் சித்தர் ஆஸ்ரமம் உருவாகியுள்ளது.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டு

1. ஆத்தூர் கி.பி. 1513-இல் விசயநகரர் ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டது.
2. கி.பி.1514-இல் இராமப்ப நாயக்கர் விசயநகர அரச பிரதிநிதிகள் சங்ககிரியில் ஆட்சி செய்துள்ளார்.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டு

1. சிவாக்கி தமிழ் சித்தர் வாழ்ந்துள்ளார்.
2. இலட்சுமண நாயக்கர் பேளூர் கோட்டையையும்- கோயில் மண்டபத்தையும் கட்டியுள்ளார்.
3. தாரமங்கலம் கைலாசநாதர் கோயில் விரிவுப்படுத்தப்பட்டு பல்வேறு நிலம் மற்றும் பல்வேறு நன்கொடைகள் அளிக்கப்பட்டது.
4. பெத்தநாயக்கன் பாளையம் ஆளுமையில் ஆத்தூர் வந்துள்ளது.
5. கி.பி.1660-இல் சிக்க தேவராசன்- சங்ககிரி, தொப்பூர், ஓமலூர் பகுதியை தன் பொறுப்பில் ஆட்சி செய்துள்ளான்.
6. கி.பி.1689- சிக்க தேவராசன் சேலம் மாவட்டத்தை கட்டி முதலி சிற்றரசர்களிடமிருந்து முழுமையாகக் கைப்பற்றி யுள்ளார்.



கி.பி. 18-ஆம் நூற்றாண்டு

1. வானவரையர் தலைவன் கல்வராயன் மலையில் கரியராமன் கோயிலை கட்டியுள்ளார்
2. கி.பி.1761-இல் ஹைதர்அலி மைசூர் அரசராக பதவியேற்றார்
3. கி.பி.1767-1769 முதல் மைசூர் போர்
4. கி.பி.1768 ஆத்தூர் கோட்டை கிழக்கிந்திய கம்பெனி பிரிட்டிஷ் படை ஆத்தூர் கோட்டையை கைப்பற்றியது.
5. கி.பி.1768-இல் சேலம் கோட்டையை பிரிட்டிஷ் படை கைபற்றியது.
6. கி.பி.1780-84 இரண்டாம் மைசூர் போர்
7. கி.பி.1782-ஹைதர்அலி மறைவு- திப்புசுல்தான் தலைமை பொறுப்பு
8. கி.பி.1784- சங்ககிரிக் கோட்டை திப்புசுல்தான் பெயரான முசாபார்பாத் என்று பெயர் சூட்டப்பட்டது.
9. கி.பி.1786 - காரனவாலீஸ் - கிழக்கிந்திய கம்பெனி பிரிட்டீஸ் கவர்னர் ஜெனரலாக பதவியேற்றார்.
10. கி.பி.1790 -1792 - மூன்றாம் மைசூர் போர்
11. கி.பி.1792 - சேலம் கோட்டை கிழக்கிந்திய கம்பெனியின் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் வந்தது.
12. ராயத்து வரி நடைமுறைக்கு வந்தது.
13. சேலம் வட்டம் - சங்ககிரி வட்டம் உருவானது.
14. கி.பி.1799 -1801- சேலம் மாவட்ட தலைநகரமானது மற்றும் "பாரமஹால் மற்றும் சேலம்" என்றழைக்கப்பட்டது.
15. கி.பி.1799 நான்காம் மைசூர் போர் நடைபெற்றது.
16. திப்புசுல்தான் மரணமடைந்தார்.
17. பாரமஹால் சேலம் மாவட்டம் பாரமஹால் மற்றும் தாலக்காட் என்று பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டது.

கி.பி. 19 -ஆம் நூற்றாண்டு


1. கொங்கு புலவர் சங்கம் உருவானது
2. 1801-மெக்னால்டு சேலம் மாவட்ட பொறுப்பாளராக பதிவியேற்றார்.
3. 1802-சின்னமலை - பிரிட்டிஷ் படையுடன் போர் புரிந்தார்.

4. 1802-04- ஜமீன்தார் முறை நிர்வாகம் உருவானது.
5. 18703-சேலம் நீதிபரிபாலனம் நிர்வாகம் உருவானது.
6. 1808-சேலம் மாவட்டத்தில் 27 வட்டங்கள் உருவாக்கப்பட்டது.
7. கி.பி.1827-இல் சேலம்-லண்டன் மிஷினரி உருவாக்கப் பட்டது.
8. கி.பி.1842-இல் சேர்வராயன், ஏற்காடு ஆகிய மலைப் பகுதி முழுவதும் பிரிட்டீஸ் ஆளுகையின்கீழ் வந்தது.
9. கி.பி.1857-இல் சேலம் கெஷட் வெளிவந்தது.
10. கி.பி.1857-58-சிப்பாய் கலகம்
11. கி.பி.1858-சேலம் அரசு மருத்துவமனை உருவானது.
12. கி.பி.1859-இல் காவல் துறை அமைப்பு உருவானது
13. கி.பி.1861-இல் சேலம் - திருப்பத்துார் இரயில் பாதை அமைக்கப்பட்டது.


**துணைநின்ற நூல்கள்**

1. கொங்கு நாட்டு வரலாறு, கோ.ம. இராமசந்திரன் செட்டியார்.
2. History of Kongu – V. Ramamoorthy, M.A.
3. கோயமுத்தூர் மாவட்ட தொல்லியல் கையேடு, இரா. பூங்குன்றன்., பெ. கௌதமபுத்திரன்.
4. கொங்கு வரலாற்று ஆய்வுகள் - டாக்டர்.மா. கணேசன்.
5. ஆவணம் இதழ்-12, தமிழக தொல்லியல் கழகம், பதிப்பாசிரியர், முனைவர் க. இராசகோபால்.
6. Salem Encyclopedia – Rajannan
7. Archaeology of TamilNadu (Kongy country) Dr.K.Rajan.
8. திருமணிமுத்தாற்று திருத்தலங்கள், பா. அன்பரசு, எம்,ஏ.எம்.பில்.
9. தெரிந்த பிரபல ஸ்தலங்கள்-தெரியாத செய்திகள் - பா.அன்பரசு, எம்,ஏ.எம்.பில்.

# நிழற்படங்கள்




சேலம் கோட்டை பெருமாள் கோயில் - சுதை சிற்பங்கள்
விஷ்ணு - ஸ்ரீதேவி - பூதேவி



சேலம் கோட்டை மாரியம்மாள் கோயில் - கோபுரம்






சேலம் கோட்டை பெருமாள் கோயில் விளக்கு கம்பம்
கி.பி. 16-ஆம் நூற்றாண்டு



செந்தூரப்பட்டி - நடுகல் (Hero Stone)




எழுத்துடன் கூடிய நடுகல் - செந்தூரப்பட்டி




தேர் - கைலாசநாதர் கோயில் - தாரமங்கலம்






சிற்பத்தூண் - கைலாசநாதர் கோயில் - தாரமங்கலம்
கி.பி. 16-ஆம் நூற்றாண்டு



கைலாசநாதர் கோயில் நுழைவுவாயில் - தாரமங்கலம்
கி.பி. 16-ஆம் நூற்றாண்டு




மண்டபத்தூண்கள் - கைலாசநாதர் கோயில் - தாரமங்கலம்
கி.பி. 16-ஆம் நூற்றாண்டு




செந்தூரப்பட்டி - நடுகல் (Hero Stone)







விநாயகர் - வாளவந்தி
அரசு அருங்காட்சியகம் - சேலம்
கி.பி. 12-ஆம் நூற்றாண்டு



தீர்த்தங்கரர் - பருத்திப்பள்ளி
அரசு அருங்காட்சியகம் - சேலம்



நடுகல் - சேந்தமங்கலம்
அரசு அருங்காட்சியகம்
சேலம்




சேஷ்டா தேவி - அரசு அருங்காட்சியகம் - சேலம்
கி.பி. 14-ஆம் நூற்றாண்டு






ஆறுமுகம்
அரசு அருங்காட்சியகம்-சேலம்
கி.பி. 15-ஆம் நூற்றாண்டு

முதுமக்கள் தாழி - ஓமலூர்,
அரசு அருங்காட்சியகம் -சேலம்
பெருங்கற்காலம்






சேலம் கோட்டை பழமையான மணிக்கூண்டு
கி.பி. 18-ஆம் நூற்றாண்டு




கன்னிகா பரமேஸ்வரி கோயில் கோபுரம், கடைவீதி, சேலம்
கி.பி. 17-ஆம் நூற்றாண்டு






விமானம் - கைலாசநாதர் கோயில்
தாரமங்கலம்
கி.பி. 16-ஆம் நூற்றாண்டு



ஆனேறு தழுவுதல்
பெத்தநாயக்கன்பாளையம்,
சேலம் அரசு அருங்காட்சியகம்
கி.பி. 16-ஆம் நூற்றாண்டு



பெருமாள் கோயில் - மண்டபத்தூண்கள்
தாரமங்கலம்




யாளித்தூண்கள்
கைலாசநாதர் கோயில்
தாரமங்கலம்
கி.பி. 16-ஆம் நூற்றாண்டு



சிற்ப வேலைப்பாடு தூண்கள்
கைலாசநாதர் கோயில்
கி.பி. 16-ஆம் நூற்றாண்டு







தூண் சிற்பம்
கைலாசநாதர் கோயில்
தாரமங்கலம்



சேர்வராயன் பெருமாள் காவேரி அம்மன் அலமேலு திருக்கோயில்
ஏற்காடு



கைலாசநாதர் கோயில் அதிட்டானம்
தாரமங்கலம்



கற்சிற்பம் - கைலாசநாதர் கோயில்
தாரமங்கலம்



